ஸ்ரீ நடராஜர்



ஸ்ரீ ஆதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யர்.

திரு. பு. எ. ரா. நடேச முதலியார்.   பிரஹ்மஸ்ரீ. க. சுப்பிரமணிய அய்யர்.   திரு. மே. வ. கிருஷ்ணசாமி முதலியார்.

திரு. ஆ. சண்முக முதலியார்.   திரு. பு. ப். மாசிலாமணி முதலியார்.



திரு. பு. எ. ரா. நடேச முதலியார். பிரஹ்மஸ்ரீ ந. சுப்பிரமணிய அய்யர். திரு. மே. க. கிருஷ்ணசாமி முதலியார்.
திரு. ஆ. சண்முக முதலியார். திரு. பு. ப. மாசிலாமணி முதலியார்.

முன்னுரை.

சென்னை வேதாந்த சங்கத்தலைவர்,

பேராசிரியர்,

திரு. T. P. மீனாட்சிசுந்தரம்பிள்ளை, M.A., B.L., M.O.L.

அவர்கள் எழுதியது.

கடவுளை நுகர்தல் நம்முடைய பிறப்புரிமை. அதுதா நம்முடைய இயற்கை; பிறவெல்லாம் செயற்கையே. நம்மை (நாமாக) உணர்கின்றோமேயன்றிப் புறப்பொருளாக அறிவ கடவுளை அவ்வாறு உணர்வதே மெய்யுணர்வு. புறக்கருவி கொ காண்பது அறிவு; அகக்கண்கொண்டு துய்ப்பது உண பரோக்ஷ ஞானம், அபரோக்ஷ ஞானம் என்பர் வடநூல Reason and Intuition என்பர் மேனாட்டார்; அறிவு, உணர்வு என்றனர் தமிழர்.

> "முகத்துக் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
> அகத்துக் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்."

என அறுதியிட்டுக் கூறினார் திருமூலர்.

கடவுளுணர்வு பெறுதற்குப் பல வழிகள் அமைந்துள்ளன. பக்தி, கர்மம், ஞானம், யோகம் என்றெல்லாம் பேசுகின்றனர் பலர்; தமிழ் நாட்டிற் பிறந்த திருஞான சம்பந்தர் 'பாடல் நெறி' என ஒரு வழி கூறுகின்றனர். கடவுளுணர்வு பெற்றவர்கள் அவ்வின்பத்தைப் பாட்டாகப்பாடியபோது, அப்பாட்டு நம் மனத்

திருள்ள அழுக்கை யெல்லாம் கழுவித் தூய்மையாக்கியதும், அங்கோர் ஒளி இன்பமாக எழுகின்றதாம்; தொலைவிலிருந்து அப்பாரைப்போல நாமும் அதனைத் துய்க்கின்றோம். இந்த நாளில் அந் நெறிதான் எளிதாக அமைந்துள்ளது. நாவுண்டு; பாவுண்டு; வேண்டுவது ஒன்றுதான் வேண்டும்.

திருஞானசம்பந்தரை வாயாரப் புகழ்ந்து பாராட்டிய பெரியார் சங்கரர். அவர் மலையாளநாடு தமிழையே பேசியிருந்த நாளில் அங்குப்பிறந்தவர். ஆகலின், அவரும் தமிழ்ப்பெரியாரேயாம். அவர் இப்பாடல் நெறியில் ஈடுபட்டுப் பல நூல்கள்வழியே தாம்கண்ட இன்பத்தைப் பாட்டாகப் பாடி நமக்கு ஊட்டுகிறார். அவற்றில் சிவானந்தலகரி தலை சிறந்து விளங்குகின்றது. அதிலே கண்ணப்ப நாயனார் வரலாறு முதலிய தமிழன்பு வரலாற்றைத் தமிழ்நெறி வழியே அத்தமிழர் பெருமானை சங்கரர் கல்லும் உருகப்பாடியுள்ளார். அதனைத் தமிழன் அறியாது வாழலாமா?

இந்த எண்ணத்தோடேயே நமது நண்பர், வித்வான் மாசிலாமணி முதலியார் அவர்கள் அதனைத் தமிழில் மொழி பெயர்த்துச் செந்தமிழ் நடை மாறாதபடி வெகு இனிமையாகப் பாடியுள்ளார்கள். ஒப்பு நோக்குதற்கு வடமொழிப் பாடல்களும் உடனே அச்சிடப்பட்டுள்ளன. பொருளுணர்தற்கு உரை நடையில் பாட்டின் கருத்துக்களும் நன்கு எழுதப்பெற்றுள்ளன. தமிழன் தமிழில் இவ்வின்பத்தினைத் துய்க்க வேண்டும் என்ற வரிவால் எழுந்த இந்நூலைத் தமிழன் ஒவ்வொருவனும் கற்பதே அவருக்குச் செய்யும் கைம்மாறாகும்.

இங்ஙனம்,

மதராஸ், 30—3—41.

தெ. மீனாக்ஷிசுந்தரன்.

FORE WORD

BY

Dewan Bahadhur K. S. Ramasamy Sastriar

This is a charming poetic translation in Tam of one of the greatest devotional Poems of the worl Sri Sankarachariar's Sivanada Lahary. The autho P. Masilamany Mudaliar is the Secretary of the Samarasa Sanmarga Sangam, in Pudupalayam, in th Cheyyar Taluk, in the North Arcot District. The tw words SAMARASA & SANMARGA strike the keynote o the author's nature, and hold the deep secret of Sivananda. Synthesis and righteousness have been t greatest passions and the unique traits of the Indi temperament They peep out as well in the translation as in the original.

The original combines deep spiritual passion and charming poetic feelings and a flowing felicitous in a unique and peerless manner Many of its stanzas have been household words. It thrills with a recurrent haunting melody of passion and passion of melody. It affirms that God yearns to save man even more than man yearns to serve God (Verse 14). It is elit with lightning flashes of humour as when the poet asks the Eternal Beggar to take the monkey mind to himself to

aid him in his mendicant life (verse 20). Siva as the only Eternal Being shining amongst the wreckage of the ...ing worlds is described with combined pathos and elation (verse 34). A famous verse 61, describes the ascending order of the experiences of intimate divine union in ecstatic devotion.

The charm of the true and fine translation is that it ...lsates with the charm and spirit of the original and is yet a fine pœm in itself. The author has achieved this combination which is but rarely found.

I wish him an ever widening public apreciation.

MADRAS,
7th April 1941.

K. S. RAMASAMY SASTRIAR.

B.A., B.L.,

Retired Judge.

உ

ரிடையர்ட் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ்

திவான் பஹதூர்

K. S. இராமஸ்வாமி சாஸ்திரிகளவர்கள்

ஆங்கிலத்தில் எழுதிய

முன்னுரைக்குத் தமிழ்.

இது, ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்ய ஸ்வாமிகளாலியற்றப்பட்டதும், உலகத்திலுள்ள ஸ்தோத்திர நூல்களிலெல்லாம் மிகச்சிறந்ததுமாகிய சிவாநந்தலகரியின் அழகிய மொழிபெயர்ப்பாகும்.

இதன் ஆசிரியர் ஸ்ரீ ப. மாசிலாமணிமுதலியார். இவர் வேலூர் ஜில்லா, செய்யாறு தாலுக்கா, புதுப்பாளையத்திலுள்ள சமரச சன்மார்க்க சங்கத்தின் காரியதரிசியாவர். சமரஸம், ஸன்மார்க்கம் என்னும் இரண்டு பதங்களும் இவ்வாசிரியரின் குணாதிசயங்களைக் குறிப்பாய்க்காட்டிச் சிவாநந்தத்தின் ஆழ்ந்த ரஹஸ்யத்தை ஸ்தாபிக்கின்றன.

ஒற்றுமை-நீதி, அல்லது ஸமரஸம், ஸன்மார்க்கம் என்னும் இரண்டே இந்து தேசத்தின் நிகாற்ற மனப்போக்கிற்கு மிகவும் பிரியமானவையாய் இருக்கின்றனவாகும்.

ஸமரஸமும் ஸன்மார்க்கமும் முதனூலில் காணப்படுவனபோலவே இம்மொழிபெயர்ப்பிலும் காணப்படுகின்றன.

மூலக்கிரந்தத்தில் ஆழ்ந்த ஆத்மீய பக்தியும், மனோஹரமான காவ்யரஸமும், ஆநந்தமான சரள நடையோடு கூடிய திராக்ஷாபாகமும் நிகாற்

றதும், தனிப்பட்ட தூயான முறையில் ஒருமிக்கத் தோன்றுகின்றன. அநேக செய்யுட்கள் தினசரிப்பழக்கத்தில் சாமான்யமாய் வழங்கும் வார்த்தைகளாலாக்கப்பட்டிருக்கின்றன; அவற்றைப் படிக்குங்கால் காவ்ய ரஸமானது நம்மை யுடிக்கடி செய்யுளின் இசைப்பாலும், இசையோடு விளங்கும் ரஸபாவங்களின் உணர்ச்சியாலும் ஸந்தோஷ ஸாகரத்தில் மூழ்கிப் பரவசமாகும்படி செய்கின்றது.

"மனிதன் கடவுளைப் பக்தி செய்து அடைய விரும்புவதை விடக் கடவுள் மனிதனை ரக்ஷிக்க அதிகமாக விரும்புகின்றனன்" என்பதை இந் நூலின் 14 வது செய்யுள் நன்கு அறிவுறுத்துகின்றது. இருபதாவது செய்யுள் பிக்ஷாடன மூர்த்தியாகிய பரமசிவனது பிச்சையெடுக்கும் தொழிலுக்கு அநுகூலமாகவிருக்க, நூலாசிரியர், தன்மனமாகிய குரங்கைச் சிவனுக்கு அர்ப்பணம் செய்வதைக் குறிக்கின்றது; இதனால் கவியின் ஹாஸ்யரஸம் மின்னொளிபோல் இலங்குகின்றது.

மஹாப்பிரளயகாலத்தில் பரமசிவன் ஒருவனே அவிநாசியாயும், கருணைக்கடலாயும் விளங்குந் தன்மை 34ம் செய்யுளில் கூறப்பட்டுள்ளது; இதனால் பரசிவனது பரமேட்டித் தன்மை நன்கு விளங்குகின்றது. ப்ரஸித்தமான 61-வது செய்யுள் பக்தியின் பல படிகளைத் தக்க உதாரணங்களோடு விளக்குகின்றது.

இந்த அழகான மொழிபெயர்ப்பின் மேன்மை யாதெனில், முதநூலையொத்து அதன் அழகையும், ரஸபாவத்தையும் கருத்தையும் நன்கு விளக்குவதோர் செய்யுள் வடிவமாயுமமைந்துள்ளதேயாம்.

இம்மொழி பெயர்ப்பாசிரியரிடத்தில் சுவைகுன்றாது மொழி பெயர்க்குந்தன்மையும், செம்பாகமாய்ச் செய்யுளியற்றுந் தன்மையுமாகிய இவ்விரண்டு சிறப்புக்களும் நன்கமைந்திருக்கின்றன, இஃது அரிதினும் அரிதே.

அறிவாளிகள் பலராலும் இவருடைய நூல் புகழப்படுதற்குரிய தாகுமென நான் உறுதியாய் நம்புகிறேன்.

சென்னை,
7—4—41

K. S. இராமஸ்வாமி சாஸ்திரியார்.

முகவுரை.

சிவாநந்தலஹரி, யென்னும் இவ்வரிய நூலானது ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்ய ஸ்வாமிகளால் வடமொழியில் இயற்றப்பட்டவொன்றாகும். சிவமெனும் பேரின்பத்தின் பெருக்கென்பது சிவாநந்தலகரி யென்பதனர்த்தம். நூற்பெயர் இங்ஙனம் அமைந்துள்ளதை யுற்று நோக்கின் சிவாநந்த வெள்ளத்தில் திளைத்து அதனைத் துய்த்தலே இந்நூற் பயனுமென்றாகித் தற்கிடனுண்டு.

> " காகமுறவு கலந்துண்ணக் கண்டீ ரகண்டா கார்சிவ
> போக மெனும்பே ரின்பவெள்ளம் பொங்கித் ததும்பிப் [பூரணமாய்
> ஏக வுருவாய்க் கிடக்குதையோ வின்புற்றிட நா மினி [யெடுத்த
> தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாரும் ஜகத்தீரே ! "
>
> என்றருளினர் தாயுமானப் பெருந்தகையாரும்.

இதன்படி சிவபோகமெனும் பேரின்ப வெள்ளந்துய்த்தலே இப்பிறவியின் பெரும்பயனுமென்பது பெறப்படுகின்றது.

இதைப்பெறுதற்குப் பல சாதனங்கள் சாஸ்திரங்களிற் கூறப்பட்டிருப்பினும், அவற்றுள் பக்தி யொன்றே சிறந்தசாதனமாமென்பதுகுன்றின் மேலிட்ட விளக்காம். " மொக்ஷ ஸாயநஸாமக்ர்யாம் பக்திரேவ கரீயஸீ " யென்பதிதற்குப் பிரமாணமாம்.

பக்தியின் லக்ஷணம்.

" ஸமவதாகாரவ்ருத்திஃ பக்திஃ " பகவானது ஸகுணஸாகாரமாகவாவது, ஸகுண நிராகாரமாகவாவது, அல்லது, நிர்க்குணமாகவா

வது பரிணமிக்கும் பக்தனது மனநெகிழ்ச்சியே பக்தி யெனப்படும். அன்பென்பதும் இதுவே, அன்பனது மனநெகிழ்ச்சியானது பகவானது வடிவமாய்த் திகழுங்காலத்தில் அவ்வன்பு "அருள்" என்னும் பெயரைப் பெறுகின்றது. பின், அவ்வருளேசிவமாகின்றது. இது அனுபவ ரஹஸ்யம். ஆதலினாற்றான்,

"அன்புஞ்சிவமும் இரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந் திருப்பாரே"

என்று திருமந்திரமும் தீர்த்துக்கூறுகின்றது.

மோக்ஷஸாதனங்களிலெல்லாந் தலைசிறந்து விளங்கும் இவ்வன்பின் ஸ்வரூபத்தை யித்தகையதென்று கூறவும் முடியாது; நினைக்கவும் முடியாது; அநுபவத்தான் மாத்திரம் உணரக்கூடியது. இவ்விஷயம்,

"பக்தி தன்வடி வேதெனிற் பரம்பரன் படியிலா [வடிவத்தை
மெய்த்த வன்பர்கண் டனுபவிப் பதுவலால் விளம்
[பிட விரகில்லா
வத்தன் மைத்தென வடியவ ருளத்தெழு மனுபவ
[வுருவத்தை
யித்தன் மைத்தென வியம்புத லரிதென வியம்பின
[மறையெல்லாம்"

என்னும் அநுபவாம்ருதப் பிரமாணத்தால் நன்கு அறியக் கிடக்கின்றது.

அன்பின் பெருமை.

இந்த அன்பொன்று மாத்திரம் இருக்குமாயின் மற்றெல்லாச் சாதனங்களும் தாமே வந்தமையுமென்பது சாஸ்திர சித்தாந்தமாம்.

"அன்பதின்றியே யறைந்த நற் சாதன முழுதுடை-
[யீவர்கட்குக்
இன்ப நல்லிறை வெளிபடுகின்றிலன் இசைத்தவை
[முழுதின்றி
அன்ப தொன்றையு முடையவர்க் கவன்வெளிப்
[பட்டவ ரிதஞ் செய்தால்
அன்பி னன்பெரு மைத்திற மொருவரா லறைந்
[திடு மளவன்றே"

என்னும் போதாத்திரைகரச் செய்யுள் அன்பின் பெருமையை நன்கு நிரூபிக்கின்ற தன்றோ?

இந்த அன்பைத்தான் வடநூலார் பராபக்தியென்று கூறுகின்றனர். இம் முதநூலாசிரியரான சங்கரப் பெருந்தகையார், "ஸ்வஸ்வரூ-
பாநு ஸந்தாநம் பக்திரித்யபிதீயதே" [தனது உண்மைச் சொருபமான ஆத்மாநுஸந்தானமே பக்தியென்று கூறப்படும்] என்று விவேகசூடாமணியில் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

ஆகவே ஆத்மாநுஸந்தான மென்னும்பராபக்தியே இந்நூலில் பிரதிபாதிக்கப்பட்ட விஷயமாகும்.

சம்பந்த சதுஷ்டயம்

(1) விஷயம்—பராபக்தி.
(2) பிரயோஜனம்—சிவாநந்தலகரியைத் துய்த்தல்:

(3) அதிகாரி—தூயமனமும் அன்பும் உடைய ஜீவன்.

(4) சம்பந்தம்—பயனுக்கும் நூலுக்கும் பிரதிபாத்தியப் பிரதிபாதக சம்பந்தமும், அதிகாரிக்கும் நூலுக்கும் ஞாத்ரு ஞாபக சம்பந்தமுமுள்ளது.

நிற்க, ஸ்ரீ சங்கரப் பெருந்தகையார் அன்பின் ஸ்வரூபத்தையும், அதன்பற்பல படிகளையும், விதங்களையும் இந்நூலிற்கூறி, அவ்வன்பின் முதிர்ச்சியால் ஏற்படும் அதன் பரிபாகாவஸ்தையாகும் அருளின் ஸ்வரூபத்தைச் சௌந்தரியலகரியில் சித்சக்தியாக நிரூபணஞ்செய்து விமர்சித்துள்ளார்.

கால, தேச, வஸ்து பரிச்சேதமன முடைய ஜீவர்களது அன்பானது உருகி, நெகிழ்ந்து, கிரமமாய்ப்பெருகி, யகண்டவடிவமாகி கடவுள் லக்ஷணத்தை யுணருஞ் சக்தியுடையதாகின்றது. இவ்வுணர்ச்சிக்குத்தான் அருளுணர்ச்சி யென்று பெயர். அந்தர்முகமாய்த் திகழும் ஆத்ம விமர்சனமும் இதுவேயாகும். இந்நிலைதான் சிவராஜயோகம், சமாதி, ஜீவப்பிரஹ்மைக்கியம் எனப் பலவாறாகக் கூறப்படுகின்றது.

பக்தியின் பாகுபாடுகள்.

ஶ்ரவணம் கீர்த்தநம் விஷ்ணோ: ஸ்மரணம் பாதஸேவநம்
அர்ச்சநம் வந்தநம் தாஸ்யம் ஸக்யமாத்மநிவேதநம்॥

சிரவணம், கீர்த்தனம், ஸ்மரணம், பாதஸேவை, அர்ச்சனை, வந்தனம், தாஸபாவம், ஸக்கியம் (தோழமை) ஆத்மஸமர்ப்பணம் என்பன பக்தியின் ஒன்பது வகைகளாம்.

இவற்றுள் ஒவ்வொருவித பக்தியைச் செய்து கீழ்க்கண்டவர்கள் பேறு பெற்றுள்ளார்கள்.

பரிக்ஷித்துமன்னவன் சிரவணத்தினுலும், நாரதமுனிவர் கீர்த்தனத்தினுலும், சுகப்பிரஹ்மம் ஸ்மரணத்தினுலும், இலக்ஷ்மி முதலியவர்கள் பாதஸேவையாலும், நந்திகேஸ்வரர், ப்ருதுசக்ர வர்த்தி முதலியோர் அர்ச்சனையினுலும், அக்ரூரன் வந்தனத்தினுலும், கருடன், ஹநுமான் முதலியவர்கள் தாஸத் தன்மையாலும், அர்ச்சுனன் முதலியோர் ஸக்கியபாவத்தினுலும், மாபலிச் சக்கிரவர்த்தி முதலியோர் ஆத்ம நிவேதனத்தினுலும் ஈஸ்வராநுக்கிரகம் பெற்றமை புராணுதிகளில் மிகப் பிரசித்தமாம். புராணேதிஹாஸங்கள் பாஹ்ய பக்தியைக் கூறுகின்றன.

ஸ்வஸ்வரூபாநுஸந்தானமென்னும் பராபக்தியிலும் இவ்வொன்பது வகைகளுள.

அவை வருமாறு:—

1. சிரவணம்: ஜீவப்பிரஹ்மைக்கிய மஹாவாக்கியத்தை ஸத்குருபால் கேட்டல்.

2. கீர்த்தனம்: பஞ்சாக்ஷர, அஷ்டாக்ஷராதி மஹா மந்த்ரங்களின் ஜபம், மனனம் முதலியன.

3. ஸ்மரணம்: தியானம், நிதித்தியாஸனம் முதலியன.

4. பாதஸேவனம்: ஸகுண பிரஹ்மத்தின் பாதமாகிய நாமரூபப் பிரபஞ்சத்தில் அதிஷ்டான சிவநோக்கத்தோடு செய்யப்படும் பாஹ்யாநுவித்தஸமாதி. "பாதோஸ்ய விஶ்வா பூதாநி" என்னும் ஶ்ருதி யீண்டு அறிதற்பாலது.

5. அர்ச்சனம்; பஞ்சேந்திரியங்களால் அனுபவிக்கப்படும் விஷயசுகங்களின் உபாதிகளை நீக்கி, உபாதியற்ற ஆத்ம ஸ்வரூபத்தில் லயம் செய்தல்; இது பராபூஜை; சிறந்த அர்ச்சனம்.

6. வந்தனம்: ஆத்மஸ்வரூபத்தில் தோய்ந்து நிச்சலமாய் நிற்றல்.

7. தாஸ்யம்: ஜீவனது ஸகல கர்மாக்களையும் ஆத்மஸ்வரூப ஞானாக்கினியில் அர்ப்பணம் செய்தல்.

8. ஸக்கியம். பிரஹ்மாத்மைக்கிய திடஸமாதியில் எப்பொழுதும் நிற்றல்.

9. ஆத்மநிவேதனம்: தற்போத வொழிவு.

இவ்வகைகள்தாம் இச்சிவாநந்தலகரியில் கூறப்பட்டிருக்கின்றன. இவ்விஷயத்தைப்பற்றிச் சுருக்கமாய் ஈண்டு கூறப்படும்.

வகை		செய்யுள்	
சிரவணம்	...	2, 40, 41	முதலியன.
கீர்த்தனம், மந்த்ரஜபம்	...	77	,,
ஸ்மரணம்	...	10, 67	,,
பாதசேவனம்	...	45, 46, 65, 91	,,
அர்ச்சனம்	...	7, 9	,,
வந்தனம்	...	55, 56, 90	,,
தாஸ்யம்	...	14, 15	,,
ஸக்கியம்	...	74, 75	,,
ஆத்ம ஸமர்ப்பணம்	...	78, 74	,,

பக்தியின் பயன்	...	76, 81	,,
பராபக்தியின் ஸ்வரூபம்	...	89	,,
சிவபக்தர்களின் பெருமை	...	72	,,
பக்தியின் பெருமை (கண்ணப்ப நாயனார் சரித்திரம்)	...	63	
பக்திமாதாவானவள் அன்பெனுங் குழவியைக் காப்பாற்றும் விதம்	...	62	
பக்தியின் பல படிகள்	...	61	

இங்ஙனம் பராபக்தி ஸம்பந்தமான பல விஷயங்கள் இந்நூலில் பிரதிபாதிக்கப்பட்டுள்ளன, ஆதலாற்றான் இது சிவானந்தப் பெருக்கென்று கூறப்படுகின்றது. ஸ்ரீ பகவத் பாதாது ஹ்ருதயத்தினின்றும் பொங்கிப் பெருகிக் கரைபுரண்டு வழிந்தோடும் அத்வைதாம்ருதமாய் இந்நூல் திகழ்வதால், இதில் சிவஸ்வரூபம் நன்கு பிரகாசிக்கின்றது. ஞானிகளின் அனுபவ மொழிகளில் சிவம் விளங்குவது சாஸ்திர சித்தாந்தமாகும்.

"ஆரணங்களின் சிரத்திலா கமத்தினி லறைதரு சமயத்தில்
சீரணந்திகழ் செபந்தவ வேள்வியிற் றியானயோ கந்தன்னில்
காரணன் சொரூ பங்கழல் தேடுவர் கண்ணிலா தவரந்தோ
பூரணன் கழல் புகழ்பவர் மொழியினுட் பொலிந்திருந்தது தானே"

என்னும் ஆநந்தாமிருதப் பிரமாணம் மேற்கூறிய அபிப்பிராயத்தை வலியுறுத்துகின்றது. ஆகவே, ஞானிகளது திருவாக்கே முமுக்ஷுகளுக்கு அத்தியாவசியமானது.

முதனூலாசிரியரைப் பற்றிய விசாரம்.

முதனூலாசிரியர் ஆதிசங்கரரே யாவரென்பது அறிவாளருட் பெரும்பாலார் ஒப்ப முடிந்த சித்தாந்தமாகும். ஒரு சிறு

சாரார் மாத்திரம் இவ்விஷயத்திற் சிறிது ஐயமுறுகின்றனர். சுத்த நிர்க்குண சிவத்தையும், அத்வைத ஞானத்தையுமே தமது பிரஸ்தானத் திரயத்தின் பாஷ்யத்தில் ராத்தாந்தம் செய்த சங்கரனார், எங்ஙனம், சிவன், தேவி, திருமால், கணபதி முதலிய பற்பல தெய்வங்களை யொப்புக்கொண்டு துதித்திருப்பார் என்பதும், இத்துதி நூல்கள், பின்பின் சங்கர பரம்பரையில்வந்தவர்களாலியற்றப்பட்டு ஆதிசங்கரர்பேரிலேற்றியிருக்கலாமென்பதும், சிறு பாலாரின்ஐயமும் திரிபுமாகும்.

இதற்குச் சமாதானமாவது :—ஸ்ரீ சங்கரவிஜயமென்னும் நூலில் பகவத் பாதர் அவதரித்து, அக்காலத்தில் சிறப்புற்றோங்கியிருந்த அவைதிக, பாஷண்ட துர்மதங்கள் எழுபத்திரண்டையும் கண்டித்தொழித்து, வைதிகமான சைவம், சாக்தம், காணபத்தியம், வைஷ்ணவம், ஸௌரம், காபாலிகமென்னும் ஷண்மதங்களை ஸ்தாபித்தனரென்பது மிகப் பிரசித்தமாம். வைதிகமான இந்த ஷண்மதங்களைச் சார்ந்த உத்தமாதிகாரிகளின் பொருட்டுப் பிரஸ்தானத் திரய பாஷ்யமும், மந்தாதிகாரிகளுக்கு அத்வைதப் பிரகரணக் கிரந்தங்களும், மற்ற ஏனைய அதிகாரிகளின் பொருட்டு ஸ்துதி நூல்களும் இயற்றியுள்ளாரென்னும் விஷயமும் அதில் நன்கு கூறப்பட்டிருக்கின்றது ஆதலின் சிவாநந்தலகரி, சௌந்தர்யலகரி முதலியவற்றின் ஆசிரியர் ஆதிசங்கரரே யாவரென்பதில் யாதோரையப்பாடுமின்றாம்.

ஸாக்ஷாத் கைலாஸபதியின் லீலாவதாரமாகிய ஆதிசங்கராராலியற்றப்பட்ட இவ்வரிய நூலுக்கு வடமொழியில் பல வியாக்கியானங்களுள.

நந் தமிழ்நாட்டில், வடமொழி பயிலாதும், நித்தியாநந்தப் பெருவாழ்வில் இச்சையுடையவருமாகிய தமிழ் மக்களின் உபயோகத்தின் பொருட்டுப் பல ஞான நூல்கள் வடமொழியிலிருந்து

தென்மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுத் தற்காலத்திலும் உலவி வருவது மிகப்பிரசித்தமேயாகும். புத்திமான்கள் இன்றியமையாது கற்கவேண்டிய நூல்களைப்பிறபாஷைகளினின்றும் தமிழ்ப் படுத்துவது தமிழ்ப்பாஷைக்கும், தமிழ் நாட்டிற்கும் பெருஞ் சிறப்பைத்தருவதாகும்.

இதனை யுன்னியே நண்பர், ஸ்ரீமான், ப. மாசிலாமணி முதலியார் இதனை, மிகு சிரமப்பட்டுத் தமிழில் மொழிபெயர்க்கத் துணிந்து செய்து முடித்தனர், முதனூலின் ஒவ்வொரு சுலோகத்திற்கும் ஒவ்வொரு செய்யுளாய் நூறு செய்யுட்களியற்றியுள்ளார். இது சிறப்பினுஞ் சிறப்பேயாகும்.

"முதனூலின் பொருட்கருத்து மாறுபடாமலும், சுவை, கற்பனைமுதலிய பல லக்ஷணங்கள் குன்றாமலும், இம்மொழிபெயர்ப்பு விளங்குகின்றது, இது அருமையினும் அருமையே. மொழிபெயர்ப்பையொப்பு நோக்குதற்கு வடமொழிசுலோகங்கள் இதில் அச்சிடப் பட்டிருக்கின்றன. அன்றியும், இந்நூலில் வடமொழி வியாக்யானங்களின்படி அறுதியிடப்பட்டுள்ள அவதாரிகையும், தமிழ்ச் செய்யுளும், விரிவான தாத்பரியவுரையுங் கூடிவிளங்குகின்றன.

ஆகவே, தமிழுலகமானது இந்நூற்கு நல்வரவு கூறி யிதனோடு அளவளாவி பிறவிப் பெரும்பயனைப் பெறுகுவதாக. இஃதொன்றே இம் மொழிபெயர்ப்பாசிரியருக்குச் செய்யத்தக்க சிறந்த கைம்மாறாகும்.

சிவம் சிவம் சிவம்,

ஸ்ரீகுஹாநந்தமண்டலி.
சென்னை,
விக்ரம, பங்குனியுத்திரம்
9—4—1941

இங்ஙனம்,
விதேயன்,
ந. சுப்பிரமண்ய அய்யர்,

உ

திருச்செந்திலாண்டவன் திருவடி துணை.

பதிப்புரை.

——(c)——

உழுவலன்புடையீர்!

இந்த நூலை வடமொழியிலியற்றிய ஆதி சங்கர பகவத் பாதாசாரியர் பரசிவாம்சமென்பர். இவர் வேதோபநிடத நூற்களனைத்தையும் தெள்ளிதினாராய்ந்து, பிரஸ்தானத்திரயமெனும்பிரஹ்மசூத்திரம், பகவத்கீதை உபநிடத முதலியவைகட்கு பேருரையியற்றியும், வேதங்களின் பரமதாத்பரியமாய் விளங்கும், அத்வைத சித்தாந்தத்தை யுத்தாரணஞ் செய்தும், ஜகத்குருவெனப் பிரசித்தியாய்த்திகழ்ந்தவ ரென்பது வெள்ளிடை மலையாம்.

இத்தகைய பெரியார் உலகிலுள்ள தாழ்ந்த மனப்பரிபாகிகளும் தாமுரிதிற் பெற்றுள்ள பகுத்தறிவுடன் கூடிய மனிதப் பிறவியின் முக்கிய பயனாகிய அந்தமில் முத்தியின்பத்தையு மடைவான் வேண்டி "நல்லவனே சேன் உலகுபகாரம் ஞானிகள் விவகாரம்" என்றபடி தீனதயாபர மூர்த்தியாய் திருவுளங்கனிந்து "மோட்ச சாதன சாமக்கிரியாம் பக்திரேவகரீயசி" (அதாவது மோட்சோபாயம் பலவற்றுள் பக்தியொன்றே சிறந்த சாதனம்) எனுங் கருத்துபற்றி பக்தியின் மேன்மையை நிரூபிக்கும் தேரித்திரூபமானதும், சதுர்வேத சிரோபாகமாய்த்தாமியற்றியுள்ள நூல்களின் சாரமானதும், தமது சுவாநுபவ நிஜஞானனந்தப்பெருக்கின் வடிவமானதுமான, சிவானந்தலகரியெனுந் தலைப்பெயருள்ள தலைசிறந்த இந்த நூலை யுலகிற்குபகரித்துள்ளார்.

ஆகவே, இது மக்களின் அந்தக்கரணத்திலுள்ள மலம் விட்சேபம், ஆவரணமென்னும் முத்தோடங்களை நீக்கவல்ல, கர்மம், பக்தி, ஞான

மென்னும் மூன்றுகாண்ட வடிவினதாயுள்ள சதுர்வேதசார சூட்சு மங்களனைத்தையும் திரட்டி யமைக்கப்பட்ட தென்பதொரு தலையாம்.

இவரதுகாலம் இற்றைக்கு சுமார் 2500 வருடங்கட்கு முற்பட்டதாமென்பர், தவிர இவரியற்றியுள்ள அரிய இரண்டலகரிகளில் சௌந்தரியலகரியெனும் சித்சக்தி நிருபண நூலானது சில நூற்றாண்டுகட்கு முன்னரேயே புலவர்பெருமானாய் விளங்கிய வீரைக்கவிராஜபண்டிதர் என்பவரால், தமிழில் செய்யுள்வடிவாய் மொழிபெயர்க்கப்பட்டு, அதற்கோர்பேருரையும் பேராசிரியர்; திவ்யகவி: சைவ, எல்லப்பநாவல ரென்பவராலியற்றப்பட்டு தமிழில் விளங்கிக்கொண்டிருக்க, எஞ்சி நின்றது இந்த சிவானந்தலகரி நூலொன்றே, இந்தநூல் யிதுகாறும் நந்தமிழுலகிற்குப்பயன்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

இதை நோக்கியே எமது நண்பர்களிற் பலர் விரும்பிக்கேட்டதற்கிணங்க, இதை தமிழில்மொழிபெயர்ப்பதால். தமிழ்த்தாய்க்கும், தமிழ்நாட்டிற்கும் ஒருங்கே செய்த ஓர் திருத்தொண்டாகுமெனவுன்னி, எனது ஆப்த நண்பர்களும், எம் சமரச சன்மார்க்க சங்க டைரெக்டர்களுமான. பழைய செய்யாறு தாலூக்போர்டின் உபதலைவராகவும், கோவாப்ரேடிவ் சென்டிரல்பாங்கியின் அங்கத்தினராகவும், ஷெடி யூனியன் தலைவராக வும், மற்றும்பல பொது நலதுறைகளில் தலையிட்டு நீண்டகாலமாய்த்திறம்படத் தேசத்தொண்டாற்றி தற்போது இளைப்பாறுபவருமான,

திரு. மே. வ, கிருஷ்ணசாமி முதலியாரவர்கள்.

தற்போதைய, வேலூர் ஜில்லா ஸ்தலத்தாபனத்தின் அங்கத்தினராகவும், காஞ்சிபுரம் நகரகாங்கிரஸ் கமிட்டியின் மாஜிதலைவராகவும். மற்றும்பல பொதுநலத்தொண்டில் வெகுகாலமாய் உண்மையிலுழைத்துவந்தவரும் வருபவருமான,

திரு. ஆ. சண்முகமுதலியாரவர்கள்.

பழைய செய்யாறுதாலூக்போர்டின் உறுப்பாளராகவும்; மற்றும் கோவாபரேடிவ்சொசைடி, ஷையூனியன் அங்கத்தினராகவும், மற்றும் பலபொதுதுறைகளிலிறங்கி தாய்நாட்டுச் சேவை புரிந்தவரும் புரிபவருமான,

திரு. ஏ. ரா. நடேசமுதலியாரவர்கள்.

ஆகிய இம்மூவர்களையும் கலந்தாலோசித்ததில், இவர்களுமிச்செயல் நன்காமெனை ஆமோதித்ததுடன். இது அச்சேறி வெளியாவதற்குரிய முயற்சிகளில் தாங்களே அதிகபங்கு எடுத்துக்கொள்வதாக எனக்கு ஊக்கமூட்டியவகையில் இச்செயலில் இறங்கினேன்.

இவ்விதமடியேனிச்சித்தது மேலும் சாத்தியமாம்வண்ணம் எனது ஆத்மநண்பரும்; எமது சமரசசன்மார்க்க சங்கத்திற்கும், சென்னை சுகாநந்த பிர்மவித்யாவிமர்சினீசபைக்கும் தலைவரும், வடமொழி, தென்மொழிகளில் வல்லுனருமாகிய, அருட்கவி, திரு. ந. சுப்பிரம்ணியஐயரவர்களின் பேருதவியைக்கொண்டுமுதனூலின் வடமொழிச்சுலோகம் ஒவ்வொன்றிற்கும் தக்கபொருளுணர்ந்து, என் சிற்றறிவிற்கெட்டியவரையில் யாவர்களுக்கும் எளிதில் விளங்குமாறு மிக எளியநடையில், அதனதன் விழுமியகருத்துக்களை விடாமல், நூறு சுலோகங்களுக்கும், நூறு தமிழ்ச்செய்யுள்

களாக மொழிபெயர்த்தும், அவைகளுக்கு 'உய்த்துணரும் நோக்கில்' அதனதன் தாற்பரியமும் எழுதியதுடன், நூற்பெயரும், இருமொழியாளரும் கேட்டமாத்திரத்தேயும் மலைவுறாவண்ணம், சிவானந்தலகரி தமிழ்மொழிபெயர்ப்பு என, தலைப்பெயர்சூட்டி வெளியிடலானேன்.

எனவே; ஆத்மஞானத்துறையில் ஆராய்ச்சிசெய்யுமூற்பட்டோர் "ஆரியத்தொடு செந்தமிழ்ப்பயனறிகிலா வந்தகர்களே னலன் திருவாலவாயரனிற்கவே" எனும் திருஞானசம்பந்தசுவாமிகளின் திருவாக்கின்படி வடமொழி தென்மொழிகளிலுள்ள உயரிய நூற்களை கற்கவிரும்புவதும். அங்கனம், விரும்புபவருக்கு போதியவாற்றலுண்டாம்படி வசதியளிப்பதான இருமொழிகளில் அடங்கிய விஷயங்களை ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு மொழிபெயர்ப்பெடுப்பதும், அவ்விருபாஷையின்ருக்கும் பேருதவியாயிருப்பதென்பதையும், தவிர இருமொழிக்கலைகளும் நன்குவளருவதற்கு சிறந்தஹேதுவாயுள்ளதென்பதையும். அதனுடன் அவ்விருமொழிஞானிகளின் சுவாநுபவமும் ஒன்றேயாமென்ற வுண்மையை உலகிற்கறிவுறுத்த ஒரெடுத்துக்காட்டாகவு மிருப்பதென்பதையு முணராமற் போகார், இச்சிறந்த உண்மை "காய்தலுவத்தலின்றி யொருபொருட்கண் ஆய்தலறிவுடையோர்செயல்" எனும்நீதிநெறி நின்றாராயும் நடுநிலை நோக்குள்ள நல்லறிஞர்கட்கே நன்குபுலனும்.

ஆகவே உரைமனங்கடந்தொளிரும் பிரமானுபவம் ஒன்றுண்டென்பதையறிந்து, அந்தமிலின்பத்தழிவில்வீடெய்தி யானந்தவடிவமுறவிரும்பும் நன்மக்களனைவரும் இதுபோன்ற மொழிபெயர்ப்பு நூற்களை விருப்புடனேற்றுப்போற்றப், பெரிதும் கடமைபட்டுள்ளாராவர்.

மேற்க, இத்தகைய அரிய்நூல் வெளிவர முதனூலிலிருந்து விஷய உதவிபுரிந்த அருட்கவி. திரு. ந. சுப்பிரமணியஐயரவர்களுக்கும், இதை யச்சிற்பதிப்பிக்க கைம்மாறு கருதாது பொருளுதவிபுரிந்த திரு. பூ. ஏ. ரா. நடேசமுதலியாரவர்களுக்கும், இன்னூல்வெளிவர ஆரம்பமுதலந்தம்வரை நன்முயற்கிசெய்து உதவிபுரிந்த திரு. மே. வ. கிருஷ்ணசாமிமுதலியாரவர்களுடன், திரு. ஆ. சண்முகமுதலியார் அவர்களுக்கும். எனது நன்றியறிதலை வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்வதுடன், இவர்கள்பாலெனக்கும் எனுபாலவர்களுக்கும் பரஸ்பரம் நீண்டகாலமாய், இடையறுதிலங்கும் நட்பின் அறிகுறியாகவே, எம்முடன் அவர்களது உருவ ஓவியத்தையும் ஒருங்கே பதிப்பித்து இதன் பால் சேர்த்துள்ளேன்.

மேலும் இதையச்சிடுங்காலத்து, அடியேனுக்கு எதிர்பாராத விதமாய் (தெய்வீகமாய்) ஏற்பட்டுள்ள சில அசந்தர்ப்பங்களால் பிழைகள் மலிந்துள்ளதை கூடியவரை கவனித்து, பிழைதிருத்தம் சேர்த்திருப்பதால், இதைக்கண்ணுறு மன்பர்கள் சிரமம் நோக்காது தயைசெய்து கவனித்துக்கொள்ளும்படி பணிவாய்க் கேட்டுக்கொள்வதுடன், மேலும் பிழைகளிருக்கினும் அதனைக் காணுமன்பர்கள் தெரிவிக்கின் வந்தனத்துடனேற்று மறு பதிப்பில் சேர்த்தச்சிடப்படுமென்பதையும், விநயமாய்த் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இதை பதிக்குங்காலத்து பலவிடங்களிலிருந்து பலவித உதவி புரிந்த, திருவல்லிக்கேணி ஆசிரியர் திரு. சாம்பமூர்த்தி ஐயர், காஞ்சிபுரம் திரு. ரா. சுந்தரம்செட்டியார், பெருநகர், வித்வ பூஷணம், திரு. வி. பி. அழகேசமுதலியார், திரு. ம. க. நடேச

முதலியார், திரு. க. பரசுராமமுதலியார் திரு. சோ. தங்கவேலு முதலியார் முதலிய அன்பர்கள் பலருக்கும், எம்மதிஷ்டம்போல் அச்சிட்டுதந்த காஞ்சிபுரம் ஸ்ரீகிருஷ்ணவிலாச பிரசாருக்கும் எனது நன்றியறிதல் உரித்தாகுக.

மேலும், இந்தநூல் வெளியாவதால் நந்தமிழுலகிற்கு நன்மை விளைவதாயின், அந்தப்பெருமை நமது சங்கத்திற்கே உரித்தாமென்பதையும், இதன் விற்பனையால் ஏற்படும் ஊதியத்தை இதுபோன்ற பொதுநல புத்தக வெளியீட்டிற்கே உபயோகப்படுத்தப்படுமென்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இவ்வரிய தொண்டில் "அன்பரகமலாற் கோயிலில்லை யையனையாறனார்க்கே" எனும் தமிழ் வேதவாக்குப்படி, யானறியாதபடி யென்னுளத்தே யிருந்து இதிலீடுபடச்செய்து யாதோரிடையூறுமின்றி நிறைவேறத் தயை புரிந்த எல்லாம் வல்ல எனதிருதய குகேசனாகிய அம்பலக்கூத்தன், மேலுமிந்நூலென்னான்றும் நிலைபெற்று நிலவவும், இனி, இதுபோன்ற தொண்டிலடியேனை யீடுபடுத்திக்கொள்ளவும் திருவுளங்கனிவான் வேண்டி, அப்பரம்பொருளை சந்ததம் சிந்தியாநின்றனன்,

இப்படிக்கு,

அடியார்க்கடியன்,

பு. ப. மா.

உ

சிறப்புரை.

சென்னை, அமரகலாவிலாஸினீ ஸபை அக்ராஸனர்,
ஸாஹித்யவாங்முக பூஷணம்
ஸ்ரீவத்ஸ. வே. ஸோமதேவசர்மா
அவர்கள் இயற்றியது.

கருணைக்கடலான கைலாஸநாதன் தனது ஸந்தானங்களான ஜீவராசிகள் சகல துக்கங்களினின்றும் நீங்கிப் பேரானந்தம் பெறுமாறு கல்லாலமரத்தடியே யமர்ந்து, ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியாய் மௌனக்கோலங்கொண்டு சின்முத்திரையால் தத்துவோபதேசஞ் செய்தனர். அதனால் பயன்பெற்றவர் ஒரு சிலரேயாவர்; பலர் அதனாலும் பயன் பெறாததை யுன்னி மௌன நிலையை விட்டு ஸ்ரீ சங்கர பூதமூர்த்தியாய் அவதரித்து, இப்பூமண்டலத்தில் திக்விஜயம் செய்து, சிறந்த சித்தாந்தமாகிய அத்வைத தத்துவத்தைப் பறைசாற்றினர் அவருடைய உபதேசங்கள் பலநூற்றுக்கணக்கான நூல்களாக அமைந்தன, உத்தம, மத்திம, அதமமெனக் கூறப்படும் அதிகாரிகளுக்கேற்றவண்ணம் பாஷ்யங்கள், பிரகரணக் கிரந்தங்கள், ஸ்துதி நூல்கள் என ஆசார்யாளாலியற்றப்பட்ட அரிய நூல்களின் பெருமையைப் புகழ்ந்துரைக்க ஆதிசேஷனாலும் முடியாது.

அவற்றுள் ஸ்ரீ சிவாநந்தலஹரி யென்னும் இந்த சிறந்த ஸ்துதி நூலானது, சாண்டில்ய ஸூத்திரம், நாரதபக்தி ஸூத்திரம் முதலிய பக்தி நூல்களின் ஸார ஸர்வஸ்வமாகும். இதை நன்கு அனு

பவித்து ஏகாந்தமாய் இறைவன் ஸந்நிதியில் பாடினால் பாராயணத்துக்காகவேனும் பரசிவன் மனமுருகிப் பக்தர்க்கருள் புரிவனென்பது திண்ணம்.

ஸ்ரீ வாசஸ்பதிமிஸ்ரர் கூறியபடி பிரஸன்ன கம்பீரமாக அமைந்துள்ள இந்நூல் ஸ்தூல திருஷ்டிக்குப் பருக பூக்திரஸத்தையூட்டும். ஆழ்ந்து நோக்குவோர்க்கு வேத வேதாந்தங்களின் பரம தாத்பர்யமான அத்வைதாம்ருதத்தை ஒவ்வொரு சொல்லும் சுரக்கும்.

இத்தகைய உத்தம நூலை, இதுவரை எவரும் புகாத வழியில் ஆசிரியர் ஸ்ரீமான் பு, ப, மாசிலாமணி முதலியார் அவர்கள் புகுந்து செய்யுள் வடிவமாகவும், தாத்பரிய வடிவமாகவும் தமிழ்ப்படுத்தித் தமிழ் உலகிற்கு அளித்துள்ளார், இதன் பொருட்டுத் தமிழுலகும் அவர்பால் நன்றிபாராட்டக் கடமைப்பட்டுள்ளது; மூலநூலின் கருத்து ஒரு சிறிதும் மாறாமலும். சுவை குறையாமலும் இதர பாஷையில் எழுதுவது மிக அரிய செயலாகும். அதிலும் செய்யுள் வடிவமாய் அமைத்தல் மிக மிக அரிய செயலாகும்.

“நாந்ருஷி: குருதே காவ்யம்” ரிஷிகளின் அம்சமில்லாதவர் கவிதாசக்திபெறார் என்பது சாஸ்திரத்தின் துணிபாகும். தேர்ந்த நடையில், எளிய சொற்களில், மிக மிகப்பொருத்தமான பதங்களைக்கொண்டு ஆழ்ந்த கருத்துடன் அமைந்துள்ள இத்தமிழ் மொழிபெயர்ப்பு நூல் இறைவனருளாலேயே தோன்றியதாகுமென துணிந்து கூறலாம்,

தவிர, பல்லாண்டுகளாக வடமொழியிலுள்ள மூலநூல் நந்தமிழ்நாட்டிலே விளங்கி உலவி வருகின்றது. தமிழ்க்கவி பாடும் புலவர்களும் பலருண்டு, ஆயினும் இச்சிறந்த பணியில் இதுவரை

யாரும் முன் வந்ததாக எனக்குப்புலப்படவில்லை. இவ்வாசிரியரே ஈடுபட்டுள்ளார். இதற்குச்சிறந்த இரண்டுகாரணங்கள் என்மனதில் தோன்றுகின்றன.

சுமார் இருபத்தைந்து வருடங்களாக வேலூர்ஜில்லா, செய்யாறுதாலூக்கா பொதியர்பாளையமென்னும் புதுப்பாளையத்தில் அமைக்கப்பட்டுள்ள சமரச சன்மார்க்க சங்கக்காரிய தரிசியாயிருந்துகொண்டு கைம்மாறு நோக்காது இவர் ஆற்றிவரும் அறப் பணி யொன்று,

கலாசாலையில் படித்தநாள் முதல் கல்வியின்பயனையநுபவிக்கும் நாள்வரையில் இணைபிரியாது, எம், ஆப்தநண்பர் ஸ்ரீ அருட்கவி. ந. சுப்பிரமண்ய அய்யர் அவர்களின் ஸாங்கத்தியத்திலீடுபட்டுள்ளது மற்றொன்று.

மேலும், பக்திவிலாஸத்தைப் பலவிதமாகவிமர்சித்து அரிய தத்துவார்த்தத்துடன் கூடிய ஸ்ரீ அருட்கவியவர்களின் முகவுரை இதற்கு அமைந்தது பொன்மலர் நாற்றமுடைத்ததுபோலாகும்.

இந்நூல் என்றைக்கும் குன்றின்மேலிட்டவிளக்கைப்போல் ஒவ்வொரு ஆஸ்திகாது இல்லத்திலும், அவர்களின் உள்ளக் கோயிலிலும் புகுந்து, அஞ்ஞானாந்தகாரத்தை யகற்றிப் பாசிவனடி சேர்ப்பிக்க உற்றதுணையாக விளங்குமாறு எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

இங்ஙனம்.

சென்னை
10—4—41 } ஸ்ரீமத் வே. ஸோமதேவசர்மா.

சிறப்புக்கவிகள்.

பேராசிரியர்,

திரு. வி. கல்யாணசுந்தரனார்

இயற்றியது.

சங்கரனார் சிவானந்த லகரியென்னுஞ் சாகரமார்ந்
தங்கமுறத் தமிழ்ப்பாட லமிழ்தமழை பொழிந்தான்சேய்
பொங்குபுதுப் பாளையத்துப் புலவனுயர் சன்மார்க்க
சங்கமரு செயலாளன் தனிமர்சி லாமணியே.

களியாம் பூண்டி, வடமொழிவித்வான்

பிரஹ்மஸ்ரீ, மே-வெங்கடஸுப்ரமண்ய சாஸ்திரிகள்

இயற்றிய

அநுமோதன ஶ்லோகங்கள்.

ஶ்லோ ॥ 𑌶𑌂𑌕𑌰𑌸𑍍𑌯 𑌮𑌹𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚

𑌶𑌿𑌵𑌾𑌨𑌂𑌦𑌲𑌹𑌰𑍍𑌯𑌾𑌶𑍍𑌚

𑌸𑍌𑌵𑌰𑍍𑌣𑍍𑌯𑌾 𑌪𑌰𑌿𑌮𑌾𑌣𑍍𑌯𑌾 ।

𑌕𑌵𑍀𑌯𑌭𑌾𑌷𑌾𑌪𑌰𑌾𑌣𑌾𑌮𑍍 ॥ (1)

𑌦𑍍𑌰𑌾𑌵𑌿𑌡𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌿𑌕𑌲𑌿𑌤𑌾

𑌤𑌾𑌤𑍍𑌪𑌰𑍍𑌯𑌾𑌯𑍈𑌕𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌾 ।

𑌪𑌰𑌿𑌷𑍍𑌕𑌾𑌰𑌵𑌾𑌗𑍍𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌾

𑌕𑌾𑌰𑌿𑌕𑌾𑌣𑌿𑌨𑌾𑌤𑍍𑌯𑌵𑌾 ॥ (2)

சிறப்புக்கவிகள்.

சென்னை, முத்தியாலுப்பேட்டை,
ரிஜிஸ்ட்ரேஷன் இனிஸ்பெக்டர் ஜெனரல் ஆபீஸ்
ரிடையர்டு பெர்ஸனல் அஸிஸ்டெண்ட்

ராவ் பஹதூர்

திரு. வி. ஏஸ். செங்கல்வராயபிள்ளை M A., அவர்கள்

இயற்றியது.

அந்நாளில் வடமொழியிற் சங்கரனூர் உரைத்தருளும்
அருமைப் பாவாய்
எந்நாளுங் கற்றோர்க்கு நிதியமதாஞ் சிவாநந்த
லகரி யென்னும்
மெய்ந்நாடு மாமாலை தென்மொழியிற் பாரிடையே
விளங்க வேண்டி
இந்நாளிற் றமிழ்ப்பாவிற் பொருள்நிரம்ப வினிதளித்தார்
இவர்யாரென்னில்

பத்திநலங் குணமேன்மை சிவஞானம் நிறைசீலர்
பாருளோர்கள்
சுத்தநெறி கைப்பற்றப் போதியர்பாலையமென்னுந்
தூயதானத்
துத்தமமாம் சமரசசன் மார்க்கசங்கந் தாபித்தே
உலகோர் உய்ய
வைத்தபெருங் கருணைநிறை மாசிலா மணிப்பெயர்கொள்
மகிபர் தாமே.

சிறப்புக்கவிகள்,

செய்யாறு தாலூக்கா, புதுப்பாளையம் கிராமம்,
சமரச சன்மார்க்க சங்க உபதலைவரும்,
வடமொழி, தென்மொழிகளில் வல்லுனரும்
ஆகிய, நெம்மலி, வித்வான்,

பிரஹ்மஸ்ரீ வெ. கிருஷ்ணமாசாரியர்

அவர்கள் இயற்றியது.

பொங்கர வணிந்த பூரணன் தன்மை
பொழியருந் தத்துவம் பொருந்த
சங்கர பகவத் பாதசற் குரவன்
சாற்றிய வடமொழி நூலாந்
துங்கசி வாநந் தலகரி தொகுப்பின்
சுவைமுத லாலதன் மேலாய்த்
தங்கநந் தமிழ்த்தாய் தனக்கெழி லணியாய்த்
தமிழிற்பா வுரையுடன் சமைத்தான். (1)

பலவளம் நிறைந்து பல்கிய பொதியர்ப்
பதியமர் சமரச சங்கம்
நிலவசன் மார்க்க நெறியதைப் பரப்பி
நேர்மையிற் செய்செய லாளன்
நலமுறு மிலக்கண விலக்கியத்துறைகள்
நன்குணர்ந் தொழுகுநன் னடையன்
மலமறு மனத்தன் மாசிலா மணிப்பேர்
மாண்புறு புலவனு மன்னே. (2)

சிறப்புக்கவிகள்.

சென்னை ஸ்ரீ குஹாநந்த மண்டலியின்

ஸ்தாபகரும் தலைவருமான

ஸ்ரீ சிதாநந்தநாதரின் பாதசேகரர்,

அநந்தாநந்தா அவர்களியற்றிய

அநுமோதன சுலோகங்கள்.

ஶ்ரீ ஸத்₃கு₃ரு சரணாரவிந்தா₃ப்₄யாம் நம:

ஶ்ரீ [illegible] மணி:
[illegible] யஶஸ்விந:
ஶ்ரீ கோ₃விந்த₃ [illegible]
[illegible] நிஜம் வைப₄வம் |
ஶ்ரீ வித்₃யா [illegible] ஶிர:
[illegible]
ஶ்ரீமச்ச₂ங்கர தே₃ஶிகஸ்ய ஜயதி
[illegible] ஆநந்த₃: || (1)

ஶ்ரீ ஶிவா [illegible] :|
ஶ்ரீ ஶிவாநந்த₃ [illegible] | (2)

* [illegible] ஶங்கர [illegible]
[illegible]
[illegible]
[illegible] ஶங்கர [illegible] || (3)

(ஶிவம்)

* மாசிலாமணி

உ

சிவகுகாயம்.

திருச்சிற்றம்பலம்.

நூல் சமர்ப்பணம்.

திருத்தில்லையென்னும் ஞானாகாசத்தின்கண்ணே நிலைத்து நின்று, சராசரமனைத்தையும் அதனதன் வினைப்பயனுக்கேற்ப ஆட்டுவிப்பதாகிய ஐந்தொழில்வினையியற்றுதியற்றுபவனும், அருட்சத்தியாகிய ஸ்ரீ சிவகாமியம்மையார் அருகிருந்து தரிசிக்க, அநவரதம் ஆநந்தத்தாண்டவம் புரிபவனும், எம்மையாளுடைய நாயகனுமாகிய ஸ்ரீநடராஜப்பெருமானே !

நமது திருவருணோக்கத்தால் என்னிதயத்தே நின்று வெளிப்பட்ட இச்சிவாநந்தலகரி மொழிபெயர்ப்பு நூலாகும் சொன்மாலையைப் "பன்மாலைத்திரளிருக்கத் தமையுணர்ந்தோர் பாமாலைக்கேநீ தான் பட்சமென்ன" எனப் பெரியார்கூறிய திருவாக்கைப் பின்பற்றி, நுமது அழகிய வீரகண்டையையணிந்த அதிரஞ்சித குஞ்சிதபொற்பாத கமலங்களில் திரிகரணத்தூய்மையுடன் அடியேன் சமர்ப்பணஞ்செய்கின்றேன்.

ஆகவே, தாங்கள் மதலையின் மழலைச்சொல்லுக்குவக்கும் மாதாவைப்போன்று, புன்மாலையாயினும் நன்மாலையாக என்மாலையையும் திருவுளங்கனிந்தேற்றுக்கொண்டு, அடியேனைக் கிருதார்த்தனாக்குவதுடன், இந்நூல் நீடூழி நிலவவும், இதுவெளியாதற்குரிய காரணராயுள்ள நண்பர்களுக்கும், இதையாமோதித்தருளிய அறிஞர்களுக்கும், இதை ஆர்வத்துடனேற்றுப்போற்றும் அன்பர்களனைவருக்கும், இகபர சம்பத்தாம் எல்லா நலங்களும் மென்மேலிலகவும், திருவருள்புரியச்சந்ததம் சிந்தியா நின்றனன்.

இப்படிக்கு,

அடியார்க்கடியன்,

பு. ப. மா.

மங்களம் எங்கும் பொங்கித் தங்குக.

உ

சிவாநந்தலகரி தமிழ் மொழிபெயர்ப்பு

செய்யுள் முதற் குறிப்பகராதி.

வரி. நெ.	பாக்கள் முதற் குறிப்பு	பா. நெ.	பக். நெ.	வரி. நெ.	பாக்கள் முதற் குறிப்பு	பா. நெ.	பக். நெ.
1	அகில	70	64	25	ஈசநின தூண்	87	80
2	அம்ச	59	53	26	உந்தன் மலரடி	81	74
3	அயன	16	16	27	உலகத்தோற்ற	55	49
4	அயனுன்	19	17	28	உற்பவமாண	83	76
5	அய்ய	24	21	29	உனதாமிரண்டு	23	20
6	அரசர்	5	7	30	உனக்குத்தக்க	85	78
7	அலைவுறு	46	41	31	உனையொத்த	13	13
8	அருளுரு	68	62	32	எந்த	76	69
9	அழகார்	75	68	33	எங்கும்	29	25
10	அற்பபயன்	4	6	34	எப்போது	57	51
11	அன்னம்	99	92	35	எரிக்கும்	32	28
12	அன்பெனு	62	56	36	எல்லாம்	30	26
13	ஆச்சிரம	11	11	37	எவன்	65	59
14	ஆதிக்கிராத	43	38	38	எவன் மனத்தீ	47	42
15	ஆரணம்	1	3	39	என்மன	48	43
16	ஆலந்தகிக்க	31	27	40	என்னுள	39	35
17	இயமன்	64	58	41	ஒருபகலோன்	58	52
18	இறைவ	49	44	42	கதிநானடைய	41	36
19	இறைவன்	28	25	43	கற்கலை	8	9
20	இறைச்சி	63	57	44	காடுமலை	12	12
21	இறையேசீ	80	73	45	சகலவணிகள்	98	91
22	இன்பக்கண்ணீ	67	61	46	சகலவுலோக	84	77
23	ஈசாயுந்தன்	91	84	47	சந்திரசேகர	69	63
24	ஈசநினதிரு	78	71	48	சயனம் கயிலை	26	23

வரி. நெ.	பாக்கள் முதற் குறிப்பு	பா. நெ.	பக். நெ.	வரி நெ	பாக்கள் முதற் குறிப்பு	பா. நெ.	பக். நெ.
49	சிந்தாமணி	27	24	75	நினைதுசரிதம்	2	4
50	சிவமேவீடாம்	36	32	76	நீலகண்ட	52	47
51	சிவனே சர்வ	66	60	77	பஞ்சின்மெலிய	95	88
52	சிவன்றிரு	94	87	78	பத்திமெலின்	71	65
53	சுககாரணனாய்	35	31	79	பரமேநின்	77	70
54	சேறுகட்டிய	88	81	80	பரனே என்னை	15	14
55	தத்தும்வித்து	61	55	81	புத்தியாகு	40	36
56	திகம்பரனாப	74	67	82	பூசைக்குரிய	86	79
57	தியானமென்	72	65	83	மதமேமிகுத்	97	90
58	திருமாலேன	73	66	84	மதங்கொண்	96	89
59	திருமாலுன்	82	75	85	மதிபுனை	93	86
60	திரிகரணத்	33	29	86	மனிதன்	10	10
61	தினமும்செல்	22	20	87	மன்பதை	18	17
62	தீனனேற்குற்ற	14	13	88	மனதை	90	83
63	தீரத்துணைப்	21	19	89	மாலைச்சமயம்	54	48
64	தூர்க்கத்துறை	42	37	90	மானைப்பிடித்	44	39
65	தேவரிருடி	25	22	91	யோகியரிதய	79	72
66	தேவநின்	92	85	92	வந்தனைபூசை	89	82
67	தேவாதி	100	94	93	வாக்குனது	7	8
68	தொல்லையற	38	34	94	வானச்சிகை	53	48
69	நற்குணமிக்க	6	7	95	வானோர்	37	33
70	நன்கு கறுத்த	51	46	96	விண்ணோ	34	30
71	நானென்	17	16	97	வெள்ளங்	60	54
72	நின்மல	2	4	98	வேதத்திரய	3	5
73	நிலையாமடுவில்	9	10	99	வேதத்தண்	45	40
74	நித்தியமுக்கு	56	50	100	வேதமுடிவில்	50	45

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவானந்தலகரி.

தமிழ் மொழிபெயர்ப்பு.

பாயிரம்.

விநாயகர்துதி.

சீராருஞ் செந்தமிழிற் சிவாநந்த லகரியினை
யோராரு மொழிபெயர்க்க விபமுகன்ருள் காப்பாமே.

உபாசனமூர்த்தி துதி.

சச்சிதா நந்தமாந் தனிப்பொரு ளாய்நடம்
அச்சிதா காசத்து ளனவர தம்புரிந்
திச்சகத் துயிர்க்கரு ளீயும் சபாபதி
சொச்சொரு பத்தினைத் துதித்தருள் பேணுவாம்.

தக்ஷிணமூர்த்தி துதி.

நீடொரு வடத்தின்கீழ் நிகழு மற்புதம்
சீடர்கண் மூப்பினர் சிறுவன் றேசிகன்
கூடுப தேசமோ குருவின் மோனமாம்
தாடொழு சீடர்க்கோ சங்கை யற்றதாம்.

கலைமகள் துதி.

எனையறியா தென்னிதயத் தேயிருந்திம் மொழிபெயர்ப்பு
தனையியக்கும் பழ்ரதியார் தண்ணருளின் றிறமென்னே
அனையொத்த கருணைகொண்டெதாக்குதற்கு மத்தேவி
ரானையொத்த பூங்கழலை போற்றுதுமெப் போதுமரோ.

முதநூலாசிரியராகும்.
ஆதிசங்கரர் துதி.

உலக குருவென வொளிருஞ் சங்கரன்
சலச பதமலர் தரித்து மனத்தினிற்
கலக பூவசமுத் திரக்கரை காணவே
நிலவு முயிர்க்கெலா நிகழ்த்திய தறைகுவாம்.

அவையடக்கம்.

இரத்தினக் கல்வி னியல்பறி யானதன்
நாத்தை யுணர்த்துந் தன்மைநேராமினே.

வேறு.

சேய்மொழி யொத் திலகிடினும் சிவாநந்த லகரியினைத்
தாய்மொழியி னலநோக்கித் தகுமென்பர் தக்கோரே.

ஆக்கியோர் பெயர்

ஆதிசங்கரன் வடமொழியதனி லறைந்தசிவாநந் தலகரியை
நீதில்தமிழ்த்தே யத்தருங்களித்தே சிறப்புடனேற்று சிந்தைபதிந்
தோதியுயர்நிலை யுறத்தமிழ் மொழிபெயர்ப் புறச்செய்தான்
மாநிறச்சிவன் மலரடிக்கன்பன் மாசிலாமணிப் பெயரோனே

பாயிரம் முற்றிற்று.

—(o)—

௳
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

சிவாநந்தலகரி.

தமிழ் மொழிபெயர்ப்பு.

நூல்.

(சுலோகம்)

கலாப்யாம் சூடாலங்க்ருத ஶஶிகலாப்யாம் நிஜதப:
ப²லாப்⁴யாம் ப⁴க்தேஷு ப்ரகடித ப²லாப்⁴யாம் ப⁴வது மே।
ஶிவாப்⁴யாமஸ்தோக த்ரிபு⁴வந ஶிவாப்⁴யாம் ஹ்ருதி³ புந
ர்ப⁴வாப்⁴யாமாநந்த³ ஸ்பு²ரத³நுப⁴வாப்⁴யாம் நதிரியம்॥ (௧)

(அவதாரிகை) பரசிவ வணக்கம்,

1 ஆரண மாதியனை யருங்கலைச் சொரூபராயு
மாறணி சடையிற்சித வம்புலி தரித்தோராயும்
வாரணி யுமையுந்தானும் வதிந்தவள் தவத்திற்கேற்ப
வண்பய னளித்துமன்பர் வளம்பெறத் தேனுவொத்தும்
தாரணி மூன்றுளோர்க்குந் தண்ணருள் செய்துகாக்குஞ்
சங்கரி பங்கினோயுன் றுமரைத் தாளிணைக்கே
பூரண பத்தியோடே புந்திநைந் துருகியாயேன்
புனைதமிழ் மாலையேற்றுப் புரிகநீ கருணைதானே.

(தாற்பரியம்) நான்மறையாதி சகல கலைகளின் வடிவினராயும், கங்கை யணிந்த சடைமுடியி லழகிய மூன்றாம்பிறைச் சந்திரனை யணிந்தவராயும், கச்சணிந்த வுமையவளுக்கபேதராயும், (வேறாக நின்று) அவள்தவத்திற்கேற்பத் தக்கபயனளித்தும், என்றால், (சிவம் சக்திக்கருளியும், சத்திசிவனுக்கருளியும்) அடியார்க்குவேண்டிய

இகபரபோகமளிப்பதில் கருத்தறிந்தீயுங் காமதேனுவை யொத்தவராயும், மண்விண் பாதலமென்னும் மூவுலகத்துயிர்கட்கும் அவரவர் வினைக்கேற்பப்பயன்தந்து, இருவினையொப்பு மலபரிபாகம் சத்திநிபாதம் இவற்றையடையச்செய்து அந்தமில் முத்தியின்பத்தையு மருள்பவராயுமுள்ள, பார்வதீபரமேச்வரர்களே! உங்களது பாதாரவிந்தங்களையடியேன் பூரணபக்தியோடு மனமுருகித்துதித்து வியற்றப்புகுந்த வினியபாமாலையை யங்கீகரித்து அருள்புரிவீராக. (எ-ம்)

கலந்தீ ஶம்போ த்வச்சரிதஸரித꞉ கில்பிஷரஜோ
தலந்தீ தீகுல்யாஸரணிஷு பதந்தீ விஜயதாம் ||
திஶந்தீ ஸம்ஸாரப்ரமணபரிதாபோபஶமனம்
வஸந்தீ மச்சேதோ ஹ்ரதபுவி ஶிவானந்தலஹரீ || (உ)

(அ-கை) இங்ஙனம், மங்களம் நிகழ்த்திய பின்னர், தமதுசித்தத்தில் சிவாநந்தவெள்ளம் நிலைபெறுமாறு வேண்டுகின்றனர்.

வேறு

2 நின்சரிதச் சிவாநந்த நிமலப்பிர வாகமதே
என் போல்வார் பாவமென வெழும்புழுதி தனையடக்கிப்
பொன் போன்ற புந்திக்கால் போந்துபவத் துயர்போக்கி
நன்மனமா மடுவூடே நனியிலகி விளங்குகவே.

(தா-ம்) ஏ! சம்புவே!! நின் அநந்தகல்யாணகுணவிசேஷ சரிதசிரவணமாகிய, புனித வெள்ளமானது பொங்கி, என்போன்றவர் பாவமாகிய, புழுதியை கரைத்துக்கொண்டு, அசைவற்ற புத்தியாகிய, கால்வாயின்கண்ணே பாய்ந்து, பிறவித்துயராகிய, வெம்மையைத்தணியச்செய்து, அறிவாகார நன்மனமாகியமடுவில் சதாதேங்கிக்கிடக்கும்படிசெய்து, அஃதாகவே நிலைத்திருக்க அருள்புரிவாய் என்பதாம்)

த்ரயீவேத்யம் ஹ்ருத்யம் த்ரிபுரஹரமாத்யம் த்ரிநயநம்
ஜடாபாரோதாரம் சலதுரகஹாரம் ம்ருகதரம் ।
மஹாதேவம் தேவம் மயி ஸதயபாவம் பசுபதிம்
சிதாலம்பம் ஸாம்பம் சிவமதிவிடம்பம் ஹ்ருதி பஜே ॥ (௩)

(அ-கை) பரசிவாநுக்கிரகம் பக்தியால் விளைவதாதலின் அப்பர சிவனைத் துதிக்கின்றனர்.

வேறு

௩ வேதத்திரயப் பிரதிபாத்யன் விமலமனத்தார்க் கணியன்
பேதத்திரயப் புரமெரித்தோன் பிறங்குமுக்கட் பெருஞ்சடிலன்
ஆதிப்பிரானு மரவணிந்தோ னழல்மானேந்து மருட்சோதி
நீதஞான வடிவான நிமலன்றாளை நினைக்குதுமே.

(தா-ம்) இருக்கு எசுர் சாமமாதி மறைகளால் பிரதிபாதிக்கப் படுபவனாகவும், அறிவாகாரமாய் விளங்கும் அன்பர்கட்கு அணித்தாமன்பனாகவும், இரும்பு, செம்பு, பொன் என்னும் மூவித பேத மதில்சூழ், நகரங்களுடன்கூடிச்சஞ்சரிக்கும், பலமிக்க திரிபுராதிகளையும் இலேசாகச் சிறுநகை காட்டி யெரித்தவனாகவும், சோம சூரிய, அக்னி என்னும் திரிநேத்திரங்களையுடையவனாகவும், நீண்ட சடாமகுடத்தையுடையவனாகவும், விளங்கி, முன் தாருகாவன விருடிகளால் கொல்லுதற்கேவிய கொடிய சர்ப்பத்தை யணிந்தும், அக்கினியையும், மானையும் கரத்தேந்தியும் அகடிதகடனா சாமர்த்திய முதற் பெரும் பொருளாய் நின்று, என்னிடத்தில் கருணைமிக்க ஞான சொரூபராய் விளங்கும் பரசிவன்றாளைச் சதா வணங்குகின்றேன். என்பதாம்.)

ஸஹஸ்ரம் வர்த்தந்தே ஜகதி விபுதா: க்ஷுத்ரபலதா
ந மந்யே ஸ்வப்நே வா ததநுஸரணம் தத்க்ருதபலம்
ஹரிப்ரஹ்மாதீநாமபி நிகடபாஜாமஸுலபம்
சிரம் யாசே சம்போ சிவ தவ பதாம்போஜபஜநம் ॥ (௪)

(அ-கை) எல்லாத்தேவர்களிலும் சிவனே மேலானவனாயிருப்பதால் அவனது சரணாரவிந்த சேவையானது இதில் யாசிக்கப்படுகின்றது.

4 அற்பப்பயன்க டருதேவ ரநேகங்கோடிக் கணக்கிலுள
ரற்பரவரை வழிபடவே யடியேன்கனவி னிலுங்கருதேன்
பொற்பா ரயனரி யாதியரும் புகழ்தற்கரிய நினது பதக்
கற்பூர்சேவை தனையடைய கபாலீ தினமுங் கரைகின்றேன்.

(தா-ம்). ஒரு காலத்திருந்தழிவதான பல பயன்களைத்தருந் தேவர்கள், தத்துவக்கண்ணால் நோக்குமிடத்து கோடிக் கணக்கில் அமைந்துளா ரென்றாலும், அவர்களைப் பொருளாக மதித்துவழி படுவதை என்மெய்ம்மறந்த நிலையாகிய கனவிலும் நினையேன்; ஏனெனில், அவர்களனைவரும் திரிமூர்த்திகளினிஷ்டப்படியே வேலை செய்பவராவார்கள். "நீ யொருவனே அந்தத் திரிமூர்த்திகளுக்கும் பலதாதாவாய் விளங்குபவன்" என்பதை நினது கரத்தேந்தும் கபாலம் ஒன்றே நன்கு நிரூபிக்கும்; ஆகவே யிடெடுப்பின்றிநிற்கும் ஏகநாயகனாகிய நின்பங்கஜபதபக்திக்கே அவாவுகின்றேன். (எ-ம்)

ஸ்ரூதெள ஸாஷெ வெஹெத்ரு ஸகூநகவிதாமாநஷணிதள
வுஹாணெ ஸம்தெருவாஷூநிநடநஷாவெஷுஷூஅதஹ: ।
கயம்ஸாஜூாம்ஷீதிஷஸ்வதி உயிகொடஹம்வஸவதெ
வஸம்ஜூம் ஷவஜுஜுலூயிதகூவயாவாலுயஷிஹொ ॥ (ரு)

(அ-கை) இனி யெப்பொழுதோபயன்றருவதாயுள்ள எனது (அதிர்ஷ்ட)வழிபாட்டைவிட பிரத்தியக்ஷமாய்ப்பயன்றரும் அரசாதியோரைக்களிப்பிக்கத்தக்ககல்விசாமர்த்தியமில்லையோ வெனின், அழியாவின்பமளிப்பவனீயென்பதறிந்தே அடைந்தேன் எனக்கூறுகின்றார்.

5 அரசர் மெச்சுமைஸ்வரியமறுபானான்கு கலைஞானம்
சாதமதாகக் கற்றிலனாற் றமியற் கவர்த மன்பிலதே
பாசுபாணி பாசுபதா பசுபதிநீயே பாலிப்பாய்
நிரபாதி யெனவுன்னி நிகழ்த்தாய் கருணை நிரந்தரமே.

(தா-ம்) அரசராதியோரால் மதிக்கப்பெறும் அறுபத்திநான்கு கலைஞானங்களையும் சரிவரக்கற்காததால், சர்வத்திர அபூசிதனாகிஇகவாழ்விற்கேற்ற சம்பத்தை யடையாதவனாய்,உன்னைவழிபடவந்தேனென நினைந்து எனக்குக்கிருபைசெய்யவில்லை போலும்; பிரபலசுருதிகள்நீயொருவனேபாசுபாணி, பாசுபதன், பசுபதி, யென்கோஷிப்பதறிந்தும், நான் வேறொருவரைத்தஞ்சமடைய விரும்புவனோ? உயிர்த்தொகுதிகளின் வல்வினையைக் களைந்து, முடிவிலாவானந்தமளிக்கும் முடிவிலாற்றல் வாய்ந்த முழுமுதல்வனீயெனத்தேர்ந்தே வந்தடைந்தேன்; கருணைசுரப்பாயாக. என்பதாம்.

[Grantha verse, 4 lines — illegible] (சு)

(அ-கை) அநாத்ம சாஸ்திரங்களிற் செல்லும் புத்தியைத்தடுத்துச் சிவபத கமலங்களில் சேர்ப்பிக்குமாறு வற்புறுத்திக் கூறுகின்றார்.

6 நற்குண மிக்க வுலகீரே நாடுங்குட்டம்மண் ணணுதுமம்
வெற்புத் துணிநூற் றீயாதி விளம்பு தர்க்கத் தருளாலே
மற்புயத்து மனைவெலு மார்க்க மாமோ மகதேவன்
பொற்ப தத்தைத் துதிசெய்தே புகுவீர் மோக்க வுலகமதே.

(தா-ம்) ஏ பண்டிதவுலகத்தவர்களே! நீங்கள் பூர்வஜன்ம புண்ணிய பலத்தால் நல்லறிவுவாய்க்கப்பெற்றிருந்தும், வஸ்துவில்லை தேறாது

நியாயசாஸ்திர உதாரணங்களாகுங் குடம், மண் முதலியபலபொருள்களைக்கொண்டு வர்தித்து வீணேகாலங்கழிப்பதில் யாதுபயன்? வாதத்தால் உண்மையையுணர்ந்து நமனை வெல்லுதற்காகாது· வஸ்துநிலையோ சுவானுபவத்தினாலுணரவேண்டிய விஷயமாகும்; அதற்கு நேர்சாதனம் சிவராஜயோக சமாதியே யாகும் என்பதை அறிந்து அதையடைவீர்களாக. (எ-ம்)

𑌮𑌨𑌸𑍍𑌤𑍇𑌪𑌾𑌦𑌾𑌬𑍍𑌜𑍇𑌨𑌿𑌵𑌸𑌤𑍁 𑌵𑌚𑌃𑌸𑍍𑌤𑍋𑌤𑍍𑌰𑌫𑌣𑌿𑌤𑍌
𑌕𑌰𑌶𑍍𑌚𑌾𑌭𑍍𑌯𑌰𑍍𑌚𑌾𑌯𑌾𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌰𑌪𑌿𑌕𑌥𑌾𑌕𑌰𑍍𑌣𑌨𑌵𑌿𑌧𑍌 ।
𑌤𑌵𑌧𑍍𑌯𑌾𑌨𑍇𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌨𑌯𑌨𑌯𑍁𑌗𑌲𑌂 𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌵𑌿𑌭𑌵𑍇
𑌪𑌰𑌾𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌾𑌨𑍍 𑌕𑍈𑌰𑍍𑌵𑌾 𑌪𑌰𑌮𑌶𑌿𑌵𑌜𑌾𑌨𑍇 𑌪𑌰𑌮𑌤𑌃 ॥ (எ)

(அ-கை) திரிகாரணங்களும் சிவசம்பந்தத்தி லீடுபட்டுவிடின், பிற (பேத) சாஸ்திரங்களின் சம்பந்தமற்றுப் பயனுண்டாமெனக் கூறுகின்றார்.

வேறு.

7. வாக்குனது துதிகளிலும் வன்மனமுன் பாதத்தும்
பூக்கரமுன் பூசையிலும் புந்தியதுன் தியானத்தும்
நோக்குன்றன் வடிவத்தும் நுண்செவியுன் சரிதத்தும்
சேக்கையுற வருளுதியேல் தீயவைகற் றவமாகேன்.

(அ-கை) ஓ பரமேட்டி! எனது வாக்கு, மனம் கரம், புத்தி, பார்வை, செவி முதலிய உறுப்புக்கள் முறையே, உனது துதி, சீர்பாதம், பூசை, தியானம், வடிவம், சரிதம் முதலியவைகளிற்பொருத்தமுறக் கிருபை புரிவீரானால், ஏனைய தீயவிஷயங்களிற் சிக்கி வீணாகமாட்டேன். ஆகவே, பிறவிப்பயனைப்பெற மேற்கூறிய சாதனங்களைப் பின்பற்றுமாறு கடாட்சிப்பீராக. (எ-ம்)

யயாப⁻ஸிமூ⁻த்ரா ரஜதமிதிகாஹா ஸுக்திகேணி
ஐ-ஜகெவெஷெ க்ஷீரம் ஸ்வத்ரெமதரஷ்ரா ஹா⁻ஹாயிஜும் ।
தயாதெவஜா⁻ாணத்ரா ஸஜஜிஹவத்ரும் ஜஉஜெ:தா
ஊஜாதெவெமம் ஜவா்ம் உதவிதுத உஸோ வம⁻வதெ ॥ (௮)

(அ-கை) சிலர் மயக்க புத்தியால் சிவமல்லாத வேறொரு தெய்வத்தினிடத்தில் சிவத்தன்மையைப் பாராட்டுகின்றனர்; அதனால் உண்மைத் தன்மையை யுணராதவர்களாகின்றார்கள். அதிட்டமான ஞானமுண்டாம்வரை மயக்கம் தெளியாதன்றோ? என அவரை யிழித்துரைக்கின்றனர்.

வேறு.

௮ கற்களைமணியெனக் கானலைநீரெனக் காண்பது போற்சிவமே
சிற்பரசிவத்திற் கன்னியமாத்திகழ் தேவரைச் சிவமென்றே
நற்குண மில்லா மூடர்களுன் னுவர் நாதனி யெனநன்றும்
பொற்புற வறியார் புராரி பசுபதி பொன்மலை வில்லோனே.

(தா-ம்) ஏ, பசுபதே! நீயொருவனே சதுர்வேதங்களாலும் பிரதிபாதிக்கப்படும் தலைவனென்பதைச் சரிவர வுணராது,சிலர் அறியாமையால்போலிக்கற்களை இரத்தினமாகவும், கானலைநீராகவும்காணுமாறு போல, ஞானசொரூபியாகிய நினது கிருபையால், உயர்பதம்பெற்றுத்திகழும் சில தேவர்களைச், சிவமெனவுன்னிப்போற்றி அற்பப்பயனுக்காளாகின்றார்கள். அடியேன் அவ்வாறின்றித், திரிபுராந்தகனும் உயிர்த்தலைவனுமாகிய ஒப்பற்ற நினது பத்தியைப்பூண்டே கடைத்தேறத் திருவுளங்கனிந்தருளுவாயாக. (என்பதாம்)

நஜீரெ காஹாரெ ஷிமதிஷிஜதெ வொாஷிஷிதெ
ஷிமாதெ மெஹீதெ ஜூஉதீ கா⁻ஹா⁻ஊஷ-ஜ௦ஜஉஉதி: ॥
ஹாஉவெ-ஜெர்தஜா ஜத்ஷூாஷிஜ உ⁻ஊதாதாய ஸ்வதெ
ஹா⁻வெதாவஷூாதா⁻௦ ஜநஉஜ தஜாதாதி ஷிஉஜொ ॥ (௯)

(அ-கை) சிவனருளைப் பெறுதற்குச்சிறந்ததனைக் கூறுகின்றனர்.

வேறு

9 நிலையா மடுவில் நெடுங்கிரியில் நிர்மாநுஷ்யக் கானதனில்
தலைவ னின்னை யர்ச்சிக்கத் தண்மலர் தேடுவ ரறிவிலரே
விலையில் புந்திக் கமலத்தை விலகா திலகு முனக்களித்தே
அலைவி லசல ராயிருக்க வறியா ரிதென் னதிசயமே!

(தா-ம்) ஏ. சம்போ! என்ன அதிசயம்! சிலர் ஸ்தலபேதத்தால் சித்தியை அடையலாமென்றெண்ணினராய், மடுவிலும், மலையிலும், காட்டிலும், தனித்துநின் றும்மையர்ச்சிக்க மலர்களைத்தேடமுற்படுகின்றனர்; அத்தகையர் சதா அறிவானந்த வடிவமாய்த் தம்மைய கலாதிலகும் தலைவனுமையுடமக்கு, மதித்தற்கரிய மனமலரையர்ப்பித்து நிருவிகற்பசமாதியில் நிச்சலமாய் நிஷ்டைகூடி நிரதிசயானந்த நிலையில் நிற்கும், நிகரற்ற உண்மைச்சுகத்தை யுணராதவரேயாவர். (என்பதாம்)

நரத்வம் தேவத்வம் நகவநம்ருகத்வம் மசகதா
பசுத்வம் கீடத்வம் பவது விஹகத்வாதி ஜநநம் ।
ஸதா த்வத்பாதாப்ஜஸ்மரண பரமாநந்த லஹரீ
விஹாராஸக்தம் சேத் ஹ்ருதயமிஹ கிம் தேந வபுஷா ॥ (௰)

(அ-கை) மனிதப்பிறவியில் தவிர, மற்றொன்றில்மனத்தைச்சிவனது பாதங்களில், சமர்ப்பித்தற்குக்கூடாதாதலின், இனிவினைக்கேற்பனத் தகைய பிறவிவரினும், சித்தம்சிவன்பாலிலகும் அருளை, யிப்போதே, வேண்டுகின்றனர்.

10 மனிதன் தேவன் மலைவனமே மாக்கள் பறவை புழுமசகம்
பிணையதெதுவுந்தொல்லைவினைக்கேற்பவரினுஞ்சிவமேயென்
மனமுன் பாதந் தனைமறவா வகையாயின்ப வெள்ளத்தில்
திளைமுழுழ்கிக்களிப்படையிற், றீயபிறப்பாற்றுயருண்டோ

(தா-ம்) ஹே சிவமே! இப்பிறப்பொன்றே உனது பதகமலங்களில் எனது மனதைச்சமர்ப்பிக்க ஏற்ற சாதனமாயிருத்தலின், இப்போ தேஎப்பிறப்பிலுமாரூதிலகும் அப்பேற்றை அருளுவையாயின் இனி வினைக்கேற்ப எத்தகையதானபிறவிகளேற்படினு மஞ்சேன்; ஏனெனின், அப்பிறப்புக்களிலுங்கூட என்மனம் நின்பத்தியிற்படியும் பாக்கிய முள்ளேனாதலின், இன்பாகார மெய்தியீடேறுவேன் (எ-ம்)

வடுஂவடுஂ ரமெஹீவா யதிரவி ஜடீவா தறிதமெர
தமெராவர் யஃகஸுரூ உவதுஂ ஹவ கிஞெநந ஹவதி ।
யதீயஂ ஹூஂதநுஂ யதிஹவதுயீநஂ வபஹூஂவதெ ॰
தஸீய நூஂஹஂஹொ ஹவவி ஹவஹாஜ வஹவவி ॥ ௰௧

(அ-கை) ஒருவன் ஆச்சிரமம் நான்கிலெதையடையினும், அடைந்ததைச்சரிவர யனுட்டிக்கினும், அதனால்மட்டும் அடையும்பயன்சிறந்ததாகாது; மனதைச்சிவன்பால் அர்ப்பணம் செய்யின் அவனடையாததொன்றில்லை என்பதை விளக்குகின்றார்.

வேறு.

11 ஆச்சிரம மொருநான்கை யடைகுவதால் யாதுபயன்
ஈச்சுவரன் பசுபதியா மெனறைநின்பாற் றன்மனத்தை
பாச்சுனர்க்குச் சாம்பவனீ பாத்தியனு யவர்குடும்ப
மோச்சுதற்கு முதவுகிறு யுன்கருணைத் திறமென்னே.

(தா-ம்) ஏ பரமேசா! ஒருவன் பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரத்தம், சந்நியாசம் முதலிய ஆச்சிரம தருமங்களைமட்டும் கடைப்பிடிப்பதாலாம் பயன் அற்பமேயாம், "ஒப்பற்ற, உயிர்த்தொகுதிகட்குத் தலைவன் நீயொருவனே" என்பதுணர்ந்துநிட்காமியமாக அவன்மனத்தையுன்றுளிலர்ப்பணஞ்செய்து, தஞ்சம் புகுவனேல் அவன்குடும்

பாதி சகலகாரியங்களையும் நீயே பரித்துச்செய்யும், உனது பெருங் கருணைப்பெருக்கை அவனடைந்து தன்னியனாகின்றான். (எ-ம்)

गुहायां गेहे वा बहिरपि वने वाद्रिशिखरे
जले वा वह्नौ वा वसतु वसतेः किं वद फलम् ।
सदा यस्यैवान्तःकरणमपि शम्भो तव पदे
स्थितं चेद्योगोऽसौ स च परमयोगी स च सुखी ॥

(இ-ள்) தவஞ்செய்தற்குரியவிடம், காடு, மலை முதலியவைகளல்ல; சிவன்பதமொன்றே யாமெனக் கூறுகின்றார்.

12 காடுமலை யிருட்குகையில் கடுவெளிநீர் தீயினடு
நீடுபகல் தவங்கிடப்பர் நெறியறியார் பயனென்னே!
ஓடுமன முன்பாதத் தோடொருவி நிற்பவரே
வீடுறையு மெய்ஞ்ஞான மேவிடுமா யோகியரே.

(தா-ம்) ஏ சங்கர! சதா அலையு மனத்தை யலையவொட்டாது நின்பா தாரவிந்தத்தினிடமாக (இரண்டறக்கலந்து) நிற்கச்செய்பவரே அந்த வீடின்பமடைந்தஉண்மைஞானயோகிகளாவர். இதையறியாது, காடு மலை யாதிகளில் கடுந்தவமியற்றினும், மனவடக்கமின்றி, இடத் தாற்பயனில்லை (என்பதாம்)

असारे संसारे निजभजनदूरे जडधिया
भ्रमन्तं मामन्धं परमकृपया पातुमुचितम् ।
मदन्यः को दीनस्तव कृपणरक्षातिनिपुणः
त्वदन्यः को वा मे त्रिजगति शरण्यः पशुपते ॥ (௰௩)

(இ-ள்) சிவமே! முப்புவனங்களிலும் தீனரட்சகன் நீயாயிருத்தலின் இம்மூன்றிடங்களிலும் இரட்சிக்கபடுதற்குரிய எளியதன்மை யுடையவனாயிருக்கும் அடியேனைக்காத்தல், நினது கடன்எனக்கூறு கின்றார்.

13 உனை யொத்த வள்ளலிலை யுமைப்பாகா மூவுலகில்
எனையொத்த வேழையிலை யிஃதறிந்து முனைத்தெறியா
வினை யொத்துச் சமுசார விழலுக்கே யுழைக்கின்றேன்
அனை யொத்த கருணையினா லாட்கொள்வ துன்கடனே.

(தா-ம்) ஓ சர்வைசுவரியனே, ஆராயுமிடத்து மண், விண், பாதல மென்னும் மூவுலகங்களிலும் அன்பர்கட்கிரங்கியருள்புரியும் வள்ளல் நின்னையன்றி வேறொருவரிலையென்பதும், அதுபோன்றே இங்கும் எனையொத்த வேழையில்லையென்பதும், மிகப்பிரசித்தமாம். இங்ஙனமிருந்தும், எனது ஊழ்வினைவயத்தால் விழலுக் கிறைத்தவனை யொத்துச் சமுசாரத்தாழ்ந்து, உன்னைப் போற்றிக் கடைத்தேறாது கலங்கிநிற்கின்றேன்; ஆகவே, தாய்க்கருணைகாட்டித் தமியனைக்காத்தல் தீனரட்சகனாகிய தமக்குத்தலையாயகடனாகும் (எ-ம்)

ஶ்ரீஹரிஸ்மதீநாதநாம வரவ்யாதவ்யஸநவஸாயகதே
ஶ்ரீமதேகதாமம் தேஷாதவி கிமதபெவதொயத்வோ: ।
ஸவெவ ஸ்ஜநவ்யாஸ்ய ஸ்தவ ஸதவமாயாஸ்ய ஸங்க்யா:
ஶ்ரேயஸ்தாக்ஷதரத்வமதவ்ரதம் வவஸாவரணி: ॥ (௧௪)

(அ-கை) மேற்கூறிய கருத்தையே இதில் நன்கு விளக்கி நிரூபிக்கின்றார்.

வேறு

14 தீனனேற் குற்றசுற்றந் தேர்ந்திடின் மறைநான்காலுந்
தீன பந்துன்னை யன்றித் தெரிந்திலேன் வேறுதேள்
தீனரின் முதன்மையுற்றேன் செய்பிழையெலாம்பொறுத்து
தீனரட் சகநீ காத்தல் செல்வநின் கடமைதானே.

(தா-ம்) ஏ, யீசா! உண்மை நூற்களாகிய உபநிடதங்களை யூன்றிப்பார்க்குமிடத்துப், பரமவேழையாகிய எனக்குரிய ஆத்மபந்து

தம்மையன்றி வேறொருவரிருப்பதாகத்தெரியவில்லை; ஆகவே, எவ்வகையிலும் ஏழ்மைநிலையை யுடையேனாகலின், என்பால் குற்றம் நிகழ்வது மியற்கையே; ஆயினும், தீனதயாளுவாகிய நீர் அதைக் கருதாது என்பாற் கருணைகாட்டலும், தீனரக்ஷகனாகிய நீவிரென்னைக்காத்தலும் தங்கட்கின்றியமையாக்கடனாகும் (எ-ம்)

உபெக்ஷா நொசெத் கிந்ந ஹரஸி பவத்த்யாநவிமுகாம்
துராஶாபூயிஷ்டாம் விதிலிபிமஶக்தோ யதி பவாந்
ஶிரஸ்தத்வைதாத்ரம் நநகலு ஸுவ்ருத்தம் பஶுபதே
கதம்வா நிர்யத்நம் கரநகமுகேநைவ லுலிதம் ॥ (௰௫)

(அ-கை) சிவனே என்னை யிரக்ஷிப்பதில் உபேக்ஷை யென்ன? இன்றேல் உம்மை வணங்கவொட்டாமல் செய்யு மென்றலையெழுத்தை அழிக்கத்தங்கட்குச்சாமர்த்திய மிருந்தும் அழிக்காத காரணமியாது? என்பதாம்.

வேறு

15 பரனே யென்னைக் காத்தற்குப் பராமுகமேனோ இன்றேல்
வரனிட்டையினிலீடுபடாவிதியினெழுத்தைகமாய்க்காதேன்
தாழ்தனக்கு மில்லையெனில் சலசபவன்றனசிரமின்
கரநகநுனியாலொழிந்ததெனுங்காதையெங்ஙனுண்மையதே

(தா-ம்) ஏ, சிவபரனே! என்னை யிரக்ஷித்தற்கு என்ன தாமதம்? உண்டெனின் அதற்குரிய நேர் சாதனமாய் விளங்கும் சவிகற்ப சமாதியிலீடுபடவொட்டாத என்தலையெழுத்தை அழிக்காததென்னே? உன்னாலாகாதெனில், அந்த எழுத்தை எழுதிய அயன்றலையி லொன்றை, முன்னாட்டமது நக நுனியால் கிள்ளியெறிந்தீரென்னும் மிகப்பிரசித்தமான விஷயம் பொய்யின்றோ? ஆகவே தயை புரிந்தருளவேண்டும் (எ-ம்)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] (௧௫)

(அ-கை) சிவனே! தீனரட்சகன் நீயாயிருக்கையில், தீனபாவமுள்ள வெனக்கு யாதுகுறை? ஆதலின், தீனபாவத்தை என் தலையிலெழுதிய பிரமன், அற்றதலைபோக உற்ற சிரங்கள்நான்குடனே நன்கு வாழ்ந்திடுவானாக. என்றுகூறுகின்றார்.

வேறு.

16 அயனெடுநாள் வாழ்ந்திடுக வவனதுநாற் சிரங்களுமே
பயமற்றே யிலங்கிடுக பணித்திடுவா யேனென்னில்
வயமான வென்றலையில் மாவீன வாழ்வெழுத்தான்
தயவதுவும் நீபுரிந்தாய் தான்தீன பந்துவென்றே.

(தா-ம்) ஏ, பரமேசா! அற்றதலைபோக அறுந்தலை நான்குடனே அயன் நெடுநாள் வாழ்வானாக; ஏனெனில், அவன என் தலையில் இந்த எளிமைத் தன்மையை எழுதியதாற்றானே, எனக்கும் நீர் அருள் புரியவும், உமக்கும் தீனரட்சகனெனும் பெயர் நிலைக்கவும் நேர்ந்தது (எ-ம்)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(அ-கை) இறைவனது பாதாரவிந்த தரிசனத்தின் அருமையை விளக்குகின்றார்.

17 நாலென் புண்ணிய பலத்தாலோ நீதநின் கருணைத்திறந் [தாலோ
தானுன் கிருபை தனையடைந்தும் தாளைக்கண்டே னிலையம் [துன்
வானோர் பாத வந்தனையில் வானோர் காதன் மிக்கோராய்
காஞர்மலர்மொய்சுரும்பேபோற்கதிப்பதாலோவறியேனே.

(தா-ம்) ஏ பக்தவற்சலா! எனது பூர்வ புண்ணிய மிகுதியாலேயோ அல்லது தாம் ஆத்மகோடிகளனைவரையும் அவரவர் மனப்பரிபக்குவம் பற்றிப்பல சாதனங்களைப் பின்பற்றச்செய்தாட்கொள்ளுந்திருவருட் சாமர்த்தியத்தாலேயோ, நான் தங்களை யபரோட்சமாயறிவதாகியவஸ்துநிச்சயம் செய்யும் வல்லமையைப்பெற்றிருந்தும், பிரத்தியட்சமாய்த் தமது உருவத்திருமேனியின் திருவடித் தாமரைகளைஒருகாலும் தரிசிக்கப்பெற்றேனில்லை. ஏன்? காட்டிலுள்ள வாசனைமலர்களைமொய்த்தெழுலும், வண்டினங்களைப், போலத்,தமது பாதார்ச்சனையில் தேவர் குழாம் இடையீடின்றிச் சூழ்ந்திருப்பதாலேயோ? அறியேன். என்சங்கை தீர உண்மையை யுணர்த்தி, திருவடித்தரிசனமருள்வாயாக. (எ-ம்)

ஸ்லெகொவொகாநாம் வாஉமெறுசெ॥ திவ்யவஉவீம்
வஹஜஸ்ஃமொம் வாஜாவி ஹஜஜெ ஹரிஉவா: ।
கியஙா ஒரக்ஷிணஂ தவஸிவஉஜாஸா ஆகியதீ
கஜாவாஉ உ௱ஜாஂவஹவி காஉணாலைஷிதஜஸா॥ (௰அ)

(அ-கை) நின் கடைக்கண்ணோக்கமின்றி, யெவரும்கேனும் திருவடி தரிசனம் செய்தற்குக்கூடாதெனக் கூறுகின்றார்.

18 மன்பதை யுன்னும்பயனருளும் மாதேவன்மோன்முதலோ
ருன்பத முன்னி வைகுந்த வுயர்பத மாதி யுற்றிடினும்
நின்பத நேடி நிற்பதனால் நினது கருணைக் களவுண்டோ
சொன்முடி வற்றச் சுடர்வண்ணா தூய் வருளைப் புரிகு
[வையே

(தா-ம்) ஏ, சோதி வடிவானவனே! வேதாதி சாஸ்திரங்களையும் விசாரிக்குங்கால், வேண்டுவார் விரும்பும் பயனைத்தரும் விழுமிய கடவுள் நின்னையன்றி வேறொருவரிருப்பதாய்த் தெரியவில்லை, படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிற் கர்த்தர்களுங்கூட ஒவ்வோர் காலத்தும்மை யர்ச்சிக்கப்பெற்று வைகுண்டமாதி பதவிகளைப் பெற்று ஆதிக்கியம் நடாத்தி வருவதுடன், சதா உன்பதம் நாடி நிற்கின்றாறெனில், தமது காருண்ணிய மாட்சிமையைக் கணித்துரைக்க முடியுமோ? முடியாது ஆகவே, அடியேன்பாலும் சிறிது அருட்கண்ணோக்கமருள்வீராக (சு-ம்

𑌯𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌂 𑌵𑌿𑌦𑌧𑌾𑌤𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂
𑌯𑍋 𑌵𑍈 𑌵𑍇𑌦𑌾𑌂𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌹𑌿𑌣𑍋𑌤𑌿 𑌤𑌸𑍍𑌮𑍈 ।
𑌤𑌂 𑌹 𑌦𑍇𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌂
𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌵𑍈 𑌶𑌰𑌣𑌮𑌹𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥ (சுவே)

(அ-கை) தன்னைச்சரணடைந்தவனெனக் கருதி, பிரமனுக்குபகாரம் செய்யும் பரசிவனைத், தாமும் சரணடையின் இருதார்த்தாதற்குத் தடையில்லை என்கின்றார்.

வேறு.

19 அயனுன் னடியானவனெழு தெழுத்த தழியின்மாண்
[பேதிலை யெனவோ
பயனில் சம்சாரப் படுகுழி விழுமென் பவ[illegible] தீர்த்திலை
[யெனினும்
சுயதொண் டருக்குநீ காட்டிடுங் கருணை தூய்தாந் துயபரு
[மொழியும
நயனயற் கீற்கு மிணங்கிடு னினக்கு மிரட்சகனெனும்
[பெயர் நன்காம்.

(தா-ப்) ஏ, பக்தப்பிரியனே! பிரமதேவன் உனது உண்மைத் தொண்டனாதலின், அவன், என் தலையில் எழுதிய எழுத்தைத் துடைத்தலுன் பெருமைக்கிழுக்காமென வெண்ணிச், சாரமற்ற சம்சாரப்படுகுழியில் வீழ்ந்து தத்தளிக்கும் என் துன்பத்தைத் தவிர்த்திலீர் போலும்; இதனால் நீர் 'பக்தப்பிரியனென்பது விசதமாய்த் தெரிகின்றது; ஆகவே, இவ்வாறிருப்பினும் யானும் உன்னைச்சரணமடைகின்றேன்; எனக்கும் அபயமடைந்த மேன்மை சித்தியாகட்டும்; உனக்கும் இரட்சகன் (காப்பவன்) என்னும் பெயரும் நீடூழி நிலைக்கட்டும் (ஈ-ம்)

ஸதா மோஹாடவ்யாம் சரதி யுவதீநாம் குசகிரௌ
நடத்யாசாசாகாஸ்வடதி ஜடிதி ஸ்வைரமபித: ‖
கபாலிந் பிக்ஷோ மே ஹ்ருதயகபிமத்யந்தசபலம்
த்ருடம் பக்த்யா பத்த்வா சிவ பவததீநம் குரு விபோ ‖ (௨௰)

(அ-கை) சித்தத்தைச் சிவன்பால் வைத்துச் சித்தசாஞ்சல்யத்தைப் போக்க, அவனருளாலே அவன்றாள் வணங்கலென்னு முறைமைபற்றிச் சிவனையேவேண்டுகின்றார்.

வேறு.

20 காமுகுஞ் சமுசாரக் காட்டிற்பட் டலைவதுடன்
மானார் முலைக்கிரிமேல் வைகிநடித் துளப்பாசந்
தானும் மரக்கிளையில் தாவிடுமென் மனக்குரங்கைக்
கோனும்நீ பத்திவடங் கொண்டுன்பாற் கொள்பரனே.

(தா-ம்) ஏ பரம்பரனே! அடியேனது மனமாகிய, வானரமானது சமுசாரமென்னுங் காட்டில் தினமும் திசை தப்பித்திரிந்துழல்வதுடன், அதிலுள்ள, பெண்களின் ஸ்தனமாகிய மலைமிசையே ஓயாது பாய்வதும், மனைமக்களாதி மரங்களிலும் பொன் பொருளாதி மரக்கிளைகளிலும் தாவுவதுமாய், ஒன்றுவிட்டொன்றைப் பற்றி, நெறிதவறிச் சலித்து ஓடுவதைத், தலைவனாகிய நீர், அதைப்பக்தியாகிய கயிற்றாற்

பிணைத்துந், தம்வயப்படுத்தலாகிய திருவருணெறியில், நிலைத்திருக்கக்கருணை பாலிப்பீராக (எ-ட்)

யாதிஷ்ஸம்ஹாயாராம தூஜமாணதிவஸாம ஸமதநாம
விசித்ராம் வ்ஸாஸ்யாம் ஹ்ருதிவஸ ஸதாம பவாடிதாம் ।
ஸ்வாரஸ்யே ஸுஷ்ட பஞ்சாம் ப்ராவஷ்விஸதாம்
ஜயவஸாமிஜு ஸதூ ஸஹஸிவமெண்ண ஸ்வீதஹே ॥ (ஏ

(அ-கை) என் மனமாகும் கூடாரத்தில் அருட்சத்தியுடன் வசிக்க வேண்டுமெனச்சிவனைப் பிரார்த்திக்கின்றார்.

வேறு.

21 தீரத் தூணைப் பற்றியதாய்த் திரிகுண காரிய பூதாதி
சார மாகுந் தேகமதைச் சார்ந்து பற்பல நிறீத்ததுவாம்
நேரப் பதுமா காரமுட னிதமும் பிரம விசாரத்திற் [மே
சேர வுறுமென் மனக்குடிலிற் சிவநீ மேலாய்ச் செறிதுவை

(தா-ப்) ஏ, பரசிவமே! பஞ்சபூதகாரியமான என் உடலில் சத்வம், ரஜஸ், தமஸ் என்னும் முக்குணாம்சமாய் விளங்குமனத்தை, அசைவின்றி சத்வாகாரமாய் நிலைத்து நிற்க, திடவைராக்கியத்துடன்பதுமாசனமிட்டு ஞான யோகம் புரியுமென் சூக்ஷும மனத்தில், அருட்சத்தியுடன் அபேதமாய் விளங்கும் ஸாம்பனே; நீவிர் நீங்காதெழுந்தருள வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன். (இன்னிலை நிற்பவரே யிறைவனையடைவரென்பதை சூசிப்பிப்பதாம் (எ-ம்)

ஹ்ருத்பாஸாதெத்ய ஸமதாஸாண வஸ்தம் சித்ராயதிமாலஸ
ஸ்வெபொஷ்ஹ் தீஷ்ஸநஸநஹேதி வஸாயா தத்ஸவிதே ।
ஜலம் த்வ ஸ்ராஸ கயஸஹஸஸெஸஸஜாஸ்ரீஹொ
தவாயீநம் கருணா ஈபி நிஸவாஸாயெ ஸ்ராஸ்கரவாழ ॥ உஉ

(அ-கை) என் மனமாகிய திருடனை, உன்வசமாக்கிக்கொண்டு என்னைக் காத்தருளவேண்டுமென வேண்டுகிறார்.

22 தினமுஞ் செல்வர் தனம்நாடித் திருடத் திரியும் திருட
[ரைப்போல்
மனமாங் கள்வனு லோபாதி மார்க்கம்பயின்றேயலைவதனால்
அனைய செயலுக் காற்றேனு னத்தா வதனைக் கைப்பற்றி
எனையுங் கடைக்கண் பாலித்தே யெந்தாய் காக்க கடவாயே

(தா-ம்) ஏ, பரசிவமே! நிதமும் தனிகர்களுடைய பொருள்களை நாடி கொள்ளையடிக்க விரும்பும் சோரர்களைப் போல, எனது மனமாகிய கள்வனும், உலோபாதி அறுவகைக்குணங்களாகிய துர்மார்க்கங்களில் திரிந்தலையும் செயலை, இனிச் சிறிதேனும் தரியேன் ஆகவே, இனியேனும் என்பால் தயை செய்து, அத்தீயொழுங்கங்களைத் தவிர்த்து, நற்குணம் பலவும் நாடிக், கைப்பற்றிக் கடைத்தேறக் கருணை புரிவாய் (எ-ம்)

𑌕𑌰𑍋𑌮𑌿 𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑍂𑌜𑌾𑌂 𑌸𑌪𑌦𑌿 𑌸𑍁𑌖𑌦𑍋 𑌮𑍇 𑌭𑌵 𑌵𑌿𑌭𑍋
𑌵𑌿𑌧𑌿𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌤𑍍𑌵𑌂 𑌦𑌿𑌶𑌸𑌿 𑌖𑌲𑍁 𑌤𑌸𑍍𑌯𑌾𑌃 𑌫𑌲𑌮𑌿𑌤𑌿 ।
𑌪𑍁𑌨𑌶𑍍𑌚 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 𑌦𑌿𑌵𑌿 𑌭𑍁𑌵𑌿 𑌵𑌹𑌨𑍍 𑌪𑌕𑍍𑌷𑌿𑌮𑍃𑌗𑌤𑌾
𑌮𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌤𑌤𑍍𑌖𑍇𑌦𑌂 𑌕𑌥𑌮𑌿𑌹 𑌸𑌹𑍇 𑌶𑌙𑍍𑌕𑌰 𑌵𑌿𑌭𑍋 ॥ (௨௩)

(அ-கை) நின் அடியேனாகிய எனக்கு நித்யாநந்த வாழ்வொன்றே வேண்டும், மற்ற எப்பதமும் வேண்டாமென்கிறார்.

23 உனதா மிரண்டு பதகமல முவந்தே யேத்துந் தமியேற்குப்
புனிதா நந்த நித்யசுகம் புகுவாழ் வருளாய் சிருட்டிதிதி
தனதாம் பதங்கள் தரின்வேண்டேன், தடப்பெற்றோர்முன்
[விஹனமேன
வினங்கொண் டடிமுடி தேடவொண்ணு விழிக்கண் சகியே
[னெம்மானே

(தா-ம்) ஏ, கிருபாநிதியே! நினது அம்புயமொத்த திருவடிகளை அவா வித் துதிக்கும் அன்பனாகியஎனக்குப் புனித சுகபோகப் பெருவாழ் வொன்றே வேண்டும், ஏனைய படைத்தலாதிய பதவிச் சுகம் எது தரினும் வேண்டேன், ஏனெனின்? அந்த நிலையை யடைந்த அயனுமரியும், அன்னம் பன்றி வடிவு கொண்டு ஒருகாலத்துன் அடியுமுடியுமறியப் புகுந்து மறியாததுடன், பல அல்லலுமடைந் தனரன்றோ? ஆகவே பதவிச் சுகங்கள் செருக்கிற்கும் கஷ்டத் திற்கும் யிடமாம், ஆனதால் விரும்பேன் (எ-ம்)

கஹாவாகெஹாஸே கநககணிஸஸஹெஸ ஹமெநெ
வஊஸஹஸஂஹொஈஷெ ஷூ-டவயிதஉயஊாஜுஷு வ-டீ
விஹெொஸிஂஸஸூாஸிஜ வாஉஸிவவாஹீதிநிஜஹஜ
வியாதூணாஂ கஜூாஜ கூணஸிவ விநெஷஜாஸிஸ-ூவதஃ॥

(அ-கை) சாயுச்சிய சாதனமாகும் கைலாசத்தின் பெருமையைக் கூறுகிறார்.

24 அய்ய நினது கைலைமலை யருமா மணியார் பீடத்தில்
துய்ய பிரமத கணம்போன்ற தொகுப்பிற் கூடித் தொழு [தேத்தும்
செய்ய சோதித் திருக்கோலச் சேவை பெறில்யான் [பலகற்பம்
நொய்தா மெனவே போக்கிடுவேன் நோயிலதனைப் பெற [லென்றோ?

(தா-ம்) ஏ, சிவனே! உமது மேன்மை தங்கிய கைலை மலையினிட மாக உள்ள, நவரத்தின கசிதமான பீடத்தில், அநேகச் சிவகணங்கள் ஜயஜயவெனப்போற்றி, சோதியுருவாய், அருட்சத்தியாகிய அம்பி கையுடன் கூடி திருவோலக்கங் கொண்டெழுந்தருளியிருக்கும் மேன்மையை; அடியேனு மவர்களிலொன்றாய்க் கூடிச், சதா தரி

சித்தப்பெறும், பெரும் பேற்றை யடைவேனாயின், அஃதொன்றே பிறப்பு இறப்பற்ற பேரின்ப நிலையாம். அதை விட்டு ஏனைய பல கற்பகாலமனுபவிக்கும் எப்போகமாயினும் அது திரணமாம் ஆனவே அந்நிலையை யருளுவாய் (எ-ம்)

ஸ்தவைர்ப்ரஹ்மாதீநாம் ஜயஜயவசோபிர் நியமிநாம்
கணாநாம் கேளீபிர் மதகலமஹோக்ஷஸ்ய ககுதி ।
ஸ்திதம் நீலக்ரீவம் த்ரிநயநமுமாச்லிஷ்டவபுஷம்
கதா த்வாம் பச்யேயம் கரத்ருதம்ருகம் கண்டபரசும் ॥ (உரு)

(அ-கை) பரமன்து இடபாரூடசேவையை விதந்துக் கூறுகின்றார்.

25 தேவ ரிருடிச் சிவகணங்கள் செயசெய வெனவே [வாழ்த்திடவும்
மூவருனைப் போற்றிடவு முக்கண் மிடறு மான்மழுவும்
மேவ வுமையு மிடதுபுறம் விளங்க வெள்ளை விடையின் [மிசை
தூவும் பதத்தைக் கைலைதனிற் சாரு முயர்ச்சிபெறவருளே

(தா-ம்) ஏ, மகாதேவா! தேவர், முனிவர், சிவகணங்கள் பலரும் போற்றி வாழ்த்தெடுப்ப, திரிமூர்த்திகளும் தொண்டு செய்து துதிக்கச், சதுர்த்தப்பொருளாய் நின்று, சோம சூரியாக்னியாகிய திரிநேத்திரங்களும், கறைக்கண்டமும், மான், மழுவேந்திய திருக் கரங்களும், வாமபாகத்தம்பிகையும் பிரகாசிக்க, தரும வடிவாகிய வெண்ணிற விடையின்மீது, திருக்கைலைபங்கிரியில் விளங்கும், ஒப் புயர்வற்ற திருக்கோலத்தை கண்டு, தரிசித்துக்கடைத்தேற கிருபை புரிவாயாக (எ-ம்)

கதாவா த்வாம் த்ருஷ்ட்வா கிரிச தவ பவ்யாங்க்ரியுகலம்
க்ருஹீத்வா ஹஸ்தாப்யாம் சிரஸி நயநே வக்ஷஸி வஹந்
ஸமாச்லிஷ்யாக்ராய ஸ்புடஜலஜகந்தாந் பரிமலாந்
அலப்யாம் ப்ரஹ்மாத்யைர் முதமநுபவிஷ்யாமி ஹ்ருதயே ॥

(அ-கை) பரமசிவன் பாதார விந்தங்களை ஆலிங்கனஞ் செய்து அத்தாண் மலரின் ஞான மணத்தை மோந்துச் சொக்கி நிற்குந் தூயநிலை யென்று வாய்க்குமோ வென் றேங்குகின்றனர்.

26 சயனங் கயிலைதனிற் புரியுஞ் சம்போ நின்றாண் மலர்பற்றி
நயனம் மார்பு சிரஞ்சூடி நன்று யாலிங் கனமாற்றி
முயன்றும் பிரமா தியரடையா முளரிச் சரண மணமோந்து
புயங்கள் பூரித் தானந்தப் புளகாங் கிதமென் றடைவேனே.

(தா-ம்) ஏ, தேவாதி தேவ! திருக்கைலையில் மிருதுவாகிய புஷ்ப வணையில் தேவரீரது உருவத் திருமேனி சாய்ந்திருக்கும் காலத்தில் செந்தாமரை மலரை நிகர்த்த நினது திருவடிகளை கரங்களால் பற்றி எனது கண், மார்பு, சிரம் முதலிய விடங்களிலொற்றி வருடவும், பகீரதப் பிரயத்தனஞ் செய்தும், பிரமாதி தேவர்களாலும் அடைய முடியாத, அந்தவழகிய திருவடிகளில் வீசும் சுஞ்ஞான மணத்தை முகந்து, எனது தோள்கள் பூரித்து ஆநந்தப் பெருமிதமடையவும், என்றருள் புரிவீரோ, அந்த நாளே என் பிறவிப் பெரும் பயன்பெறு நாளாகும் (எ-ம்)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] (௨௭)

(அ-கை) சிவார்ப்பணத்திற்கு உரிய பொருள் மனமொன்றே யாகுமென்று, மனவர்ப்பணப் பெருமையை வழுத்துகிறார்.

27 சிந்தா மணிக்கற் பகங்காம தேனு சிறையு முனதிடத்தில்
நந்தாப் பொன்மே ருன்கரத்தில் நவநிதி யோனும் நின்னரு [கில்
அந்தா ராபதி செஞ்சடையி லனைத்தாம் நன்மை யுன்பதத் [தில்
எந்தா யுனக்கெது தருவல்யானென்மனமுனதே யாகுகவே

(தா-ம்) ஏ, பரிபூரணனே! தேவரீரது திருவுளங்களிக்க வளிக்கும் பொருள் யாதென்னிடத்துள்ளது? சிந்தித்த வண்ணமே சீக்கிரத்தளிக்கும், சிந்தாமணி, கற்பகம், காமதேனு முதலிய பரம ஐஸ்வரியங்களும் உமதிடத்திருக்கின்றது; அன்றியும், பொன்மயமான மகா மேருகிரியை வில்லாகத் திருக்கரத்தேந்தியும், நவநிதியாளனாகிய அளகேசனை நின்னருகில் நின்று குற்றேவல் புரியும் பணியாளனாகவும், அழகிய வெண்ணிற மூன்றாம் பிறைச் சந்திரனைச் சிவந்த சடைமுடியிற் தரித்தும், அடியாரானோர் விரும்பும் வண்ணமுதவு மாற்றலை திருப்பாதத்தேற்றும் விளங்குகின்றீர் உம் சிந்தையுவக்க, யாதுசெய்ய முடியும்? ஆயினும், தம்மிடத் திராக மட்டற்ற விலைவாய்ந்த சுத்த சத்வாம்ச என் மனமாகிய மாணிக்கத்தைச், சிவார்ப்பணமாகத் தம் திருவடிக்கே சமர்ப்பிக்கின்றேனாதலின், புந்திமகிழ்ந்தேற்றுக் கிருபை புரிவீராக (எ-ம்.)

ஸாரூப்யம் தவ பூஜநே ஶிவ மஹாதேவேதி ஸங்கீர்த்தநே
ஸாமீப்யம் ஶிவபக்தி துர்ய ஜநதா ஸாங்கத்ய ஸம்பாஷணே
ஸாலோக்யம் ச சராசராத்மக தநு த்யாநே பவாநீபதே
ஸாயுஜ்யம் மம ஸித்தமத்ர பவதி ஸ்வாமிந் க்ருதார்த்தோஸ்ம்யஹம்

(அ-கை) ஈண்டு கூறப்பட்டுஞ் சாதனங்களால் பெரும்பயன் அடையப்படுகின்றதாதலின் அதனைப் புகழ்கின்றார்.

28 இறைவ னின்னது பூசைதுதி யிருங்கதை கேட்டல் தியா
[னித்தல்
முறையே சாரூப் பியமாதி முற்றச் செயுமா தலினவற்றை
முறையாய்ப் பெறிலிப்பிறவியிலே மோனமுறுதற் பின்ன
[மதாம்
மறையு மறியா மலர்த்தாளா வழங்காய் கடைக்கண் ணோக்
[கெற்கே

(தா-ம்) ஏ முழுமுதல்வ! நினது சரித்திர சிரவணத்தால் சாலோக பதமும், உனது சகள வடிவைப் பூசித்தலால் சாமீப பதமும், நினது அநந்த கல்யாண குணங்களைக் கூறித் துதித்தலால் சாரூபபதமும், உனது திவ்விய மங்கள வடிவை இடையறாது தியானித்தலால் சாயுச்சிய பதமுமாகிய பதமுத்திகளை முறையே ஒருவனடைவதுடன், முடிவில் மௌன நிலையையுமடைந்து, அரனே நின்னோடொத்து விதமாம் பரமுத்தியையும் அடைவது சாஸ்திர நிச்சயமாதலின், இந்நெறியில் முறையே நின்றெளியனீடேறக் கடாட்சிப்பீராக (எ-ம்.)

ஸ்வசரித்ரச்ரவணாத் ஸாலோக்யம் ஸ்வாங்கார்ச்சநாத்
ஸாமீப்யம் ஸ்தவநம் ப்ரஜாபதிஸாரூப்யம் த்யாநதோ விபோ ।
விசிஷ்டம் ஸாயுஜ்யம் ஸகலாநாம் நிச்சயம்
ப்ராப்யதாம் ஸம்போ மௌநமந்தே தேஹி மே
வதைஸ்ம கருணாகர (௨௯)

29 எங்கும் நிறையுஞ் சிவமேநின் னெழிற்றிருணிதமுந் தொழு
[கின்றேன்
துங்கப் பரம நின்றுருவந் துலங்கத் தியானஞ் செய்கின்
[றேன்
பங்கப் பவநோய் துடைத்தருளும் பரனே தஞ்சம் புகுகி
[ன்றேன்
தங்குங் கருணை நோக்கந்தா தானுமின்ப நிலைபெறவே.

(தா-ம்) அங்கிங்கெனாது எங்கும் நிறைந்தெல்லாமாய் விளங்கும் பாசிவமே, சாஸ்திரோக்தமாகத் தமக்குள மூவித வடிவங்களில், பாதாரவிந்தங்களைப் பணிவதால் உருவத்திருமேனியையும், தியானம் புரிவதால் அருவுருவத்திருமேனியையும், தஞ்சமடைவதால் அருவத்திருமேனியையும், வணங்குகின்றேனாயிருத்தலின், எனது பிறப்பிறப்பாகிய துவந்துவத்தை யொழித்து, அருமறை முடிவிற் கூறும் தானேதானாய் நிற்கும், நிரதிசயாநந்த வின்பநிலையைப் பெறக்கருணாநிதியாகிய நீ, கிருபை புரிவீராக (எ-ம்)

வஸொஉ-ம தவியஎ ஸஹஸ்ரகா தாவ-ஷாது-உெநவிஷ-தா
மூலெமூவஹஉக்ஷதாநவதுெநவஹி-உஉ-வாயஷ்கஷ்தா।
வாதெகாஞந மஹ-உதாஷிஉயிெதஷ ரஷெநஷு-தஷாஉெண
ஸஷ-ஷஹஸஷாஂகரவாணிதெவபப-வதெ ஷுாஊ. தாஷெராக
மஷெரா॥ (௨௯)

(அ-கை) ஈசா! உனக்குபசாரங்களைச் செய்யும் சாமர்த்தியம் எனக்கில்லை எனினும் தீனனைரட்சித்தல் உனது கடமை யென்கிறார்.

30 எல்லாப் பொருட்கு மிறையாகி யெதுவு மியார்க்கு மநு [ள்பரம
நல்லோ யுனக்குத் தொண்டுசெய நாரணனில னயன்முத [வான்
எல்லோ னுவ ரவர்தன்மை யெற்கா மென்னி லியலுமோதாம்
புல்லேனெனினு மெற்கருணை புரிவாய் தீன ரட்சகனே.

(தா-ம்) ஏ, கருணைக்கடலே, உலகில் உள்ளும் புறம்புமாய் விளங்கிச் சர்வப்பொருள்கட்கும் தலைவனாய் விளங்குகின்ற நிலையில், தமக்குரிய தொண்டு செய்து களிப்பிக்க எளியனாகிய என்னாலிய லுமோ? நாரணனாதி திரிமூர்த்திகளும் இந்திரனாதி தேவர்களுமே,

ஒருவாறு அதற்கு ஏற்றவராவர், அல்லது அவர்கள் தன்மையா வது எனக்கிருப்பின் ஒருவாறு முயன்றுவது பார்க்கலாம், ஆகவே என்னாலியலாத ஒரு காரியத்தை யான் செய்யவில்லை யென்பதைக் கொண்டே என்னைப்புறக்கணிப்பது நீதியுமாகாது, மேலும் நீர் தீனரட்சகனாதலின், தீனனாகிய (ஏழ்மைத் தன்மையுடைய) என்னைக் காத்தல் உமக்கின்றியமையாக் கடமையு மாம் (எ-ம்.)

[illegible]

(அ-கை) பசுபதி விடமுண்ட ஒரு செயலே நினதருளையுமாற்றலையு மறிவிக்கப்போதுமான சான்றெனச் சாற்றிகின்றனர்.

31 ஆலந் தகிக்க, வமரர் குழா, மபய, மபய; மெனவடிதா [ழ்ந்
தோல, மிடநீ, சரவசர. மூறு, படாம லுணப் புகுந்து
மேல, வதைபுண், ணதுமிழா, திடையிற், கண்டத் திருத் [திசதா
நீல, கண்ட, னெனவொளிர்தல், நின தரு, ளாற்றற், கரி [யாமே

(தா-ழ்) ஏ, முடிவிலாற்றலுடையனே! முன்னொருநாள் தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்த காலத்தே, தோன்றிய ஆலகால விடமானது, சர்வலோகங்களையும் பஸ்மீகரித்துவர, அதுகண்டஞ்சிய தேவர் குழாம், உம்மிடத்தஞ்சமாகவடைய, அதுகண்டிரங்கி அவ் விடத்தை வாரியுண்டேனும், சராசரப் பிரபஞ்சத்தையும், தேவர் களையும் காத்தல் கருதி எனக் கருதிய, தமது திருவுளச் செயலை

யறிந்து சித்தங்களித்த அவர்கள், அச்செயலினறிகுறியாக அதைக் கண்டத்தடக்கி நிற்க வேண்டிக்கொண்டபடி, அதையுண்ணுதும், உமிழாதும் இடையே நிறுத்திய காரணத்தால், கறைக்கண்டனுய் விளங்கிக் காட்சியளித்த தொன்றே, தமது அபார பக்த வாத்சல்யத்திற்கும், அகடிதகடன சாமர்த்தியத்திற்கும், சிறந்த சான்றாமன்றோ? அதுகண்டே உம்மைச் சரணடைந்தேன் அருள்புரிவாய் (முப்பதாம்)

ஜ்வாலோக்ரஸ்ஸகலாமராதிபயத꞉ க்ஷ்வேல꞉ கதம் வா த்வயா
த்ருஷ்ட꞉ கிஞ்ச கரே த்ருத꞉ கரதலே கிம் பக்வஜம்பூபலம் ।
ஜிஹ்வாயாம் நிஹிதஶ்ச ஸித்தகுடிகா வா கண்டதேஶே ப்ருத꞉
கிம் தே நீலமணிர் விபூஷணமயம் ஶம்போ மஹாத்மன் வத ॥(௩௨

(அ-கை) ஆலமுண்ட பெருமையை மேலும் புகழ்ந்துரைக்கின்றனர்.

32 எரிக்கும் விடத்தை யேறிட்டு யெதிர்த்த தன்றித் திருக்[கரத்தில்
தரிக்கும் பான்மை யஃதென்னே சம்புக், கனியோ, நாவ[தனுற்
றெரிக்குஞ் சுவைத்த தென்கொல்லோ சித்தர் குளிகை[யெனமதித்தோ,
பரிக்குங் கண்டம் மணியென்றோ பகராய் பரமச் சிகண்டா

(தா-ம்) ஏ, ஒப்பில்லாற்றல் வதிந்தவ! நினது திருவருட் சாமர்த்திய மென்னே யென்னே! யாவராலும் நினைத்தற்கு மரிதாய் நிலவுவதாமன்றோ? எங்கனமெனின், முன் எதிர்ப்படுமி யாவற்றையும் பஸ்மீகரப் படுத்தும் ஆற்றல் வாய்ந்த வாலகால நஞ்சை எதிர்முகமாய் நின்றெதிர்த்தனை, அஃதன்றியதை ஒரு சிறிய கரிய நாவற்பழம்போல திரட்டிக் கரத்தெடுத்துத் தரித்தனை, மேலுமதை,

ஒரு சித்த ஔடதம் (தேவாமிர்தம்) போன்று நாவில் வைத்து ருசிபார்த்தனை, தவிர அதை உண்ணாது மிழாது ஓர் இரத்தினபரணம் போல அழகிய கண்டத்தடக்கி, கறைக்கண்டன், நீலகண்டன், ஸ்ரீகண்டனெனச் சதுர் மறைகளும் சிறப்பித்தோதும் திருநாமங்களும் பெற்றனை, ஆகவே இத்தகைய வபார வாற்றல் வாய்ந்த தங்கட்கு, எளியேனை ஆட்கொள்ளுதலாகிய ஒரு காரியமட்டு முடியாததோ? கடாட்சிப்பாய் (எ-ம்)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(அ-கை) திரிகரணத்தூய்மையான சிவோபாசனையே சிறந்ததெனக் கூறுகிறார்.

வேறு.

33 திரிகரணத் தூய்மையுடன் செய்கின்ற சிவபூசை
பிரிவறுமெய்ந்நிலையருளும் பெருமைத்தா மாதலினாற்
றிரமறுவின் னவர்பூசை செய்வதனா லாம்பய னென்
பரசிவனார் பூசையினா பரமொன்று வேண்டுவனே.

(தா-ம்) மனம், வாக்குக்காயமென்னும் முக்கரணங்களும் ஒருங்கே ஒத்துச்செய்யுஞ்சிவபூசையொன்றே, பின் தேவரீரைப் பிரியா திரண்டறக் கலக்கும் பேரானந்த நிலையை யடைவிக்கும் நேர் சாதனமாமென்பது சர்வ சாஸ்திரப் பிரசித்தமாயிருக்க, ஒரு காலத் திருந்தொழிபவர்களான ஏனைய தேவர்களைப் பூசிப்பதாலாம் பயனென்னை? இல்லையாகவே ஒப்பற்றவொருவனா யொளிரும் நின் பூசையை யன்றி வேறுத் தேவர் பூசையை என் மெய்ம்மறந்த நிலையிலும் விரும்பேன் (எ-ம்.)

𑌕𑌿𑌂 𑌬𑍍𑌰𑍂𑌮𑌸𑍍𑌤𑌵 𑌸𑌾𑌹𑌸𑌂 𑌪𑌶𑍁𑌪𑌤𑍇 𑌕𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌿 𑌶𑌂𑌭𑍋 [𑌭𑌵
𑌦𑍍𑌧𑍈𑌰𑍍𑌯𑌂 𑌚𑍇𑌦𑍃𑌶𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌰𑌿𑌯𑌂 𑌚𑌾𑌨𑍍𑌯𑍈𑌃 𑌕𑌥𑌂 𑌲𑌭𑍍𑌯𑌤𑍇
𑌭𑍍𑌰𑌶𑍍𑌯𑌦𑍍𑌦𑍇𑌵𑌗𑌣𑌂 𑌤𑍍𑌰𑌸𑌨𑍍𑌮𑍁𑌨𑌿𑌗𑌣𑌂 𑌨𑌶𑍍𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌲𑌯𑌂
𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌨𑌿𑌰𑍍𑌭𑌯 𑌏𑌕 𑌏𑌵 𑌵𑌿𑌹𑌰𑌤𑍍𑌯𑌾𑌨𑌨𑍍𑌦𑌸𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑍋 𑌭𑌵𑌾𑌨𑍍 ||

(அ-கை) பூரசிவனுடைய தைரியத்தை வியந்து புகழ்கின்றனர்,

வேறு.

34 விண்ணோ ரஞ்சத் தவமுனிவர் மெய்ந் நடுங்கிப் பதைத்த [லறக்
கண்ணா ருலகம் நசித்தொழிய மூழிக் காலத் திறுதியினிற்
பண்ணார் வேத வேத்தியனே பரம மயானத் தொளிர்கின் [றாய்
அண்ணால் நினது நெஞ்சுறுதி யறையத் தகுமோ வறியே [னே.

(தா-ம்) ஏ, சர்வசக்திமானே! நீவிர், நாமரூப ரகித அருவனுயிருந்தும், ஆன்மகோடிகளின் வினைக்கீடாக, தனுகரண புவன போகங்களைத் தந்திரட்சிப்பான் வேண்டி, சித்சடப் பொருள்களனைத்தையும், படைத்துக்காத்துத் துடைக்குமவசரம் உருவனாகவும், உருவருவனாகவும் புறத்து மகத்தும் பொருந்தி நின்றும், தேவர்முனிவராதிகளும் திகைத்து, பதைத்தலறும் சர்வ சம்மார காலத்திலே தான் மாத்திர மிஞ்சியும், தனித்தும், அச்சமின்றியும் நின்று பேரிமத்தாடியும், விளங்கும் உனது ஒப்புயர்வற்ற அபார ஆற்றலுக்கு, வேறொருவரை ஒப்புவமை கூற முடியுமோ? முடியாதென்பதாம்.

யோகக்ஷேமஶ்ச ஜீவராஶேஸ் ஸகல ஶ்ரேயஃப்ரதோஸி [ஜநா
ஐஹிகாமுஷ்மிகஸுகதோ வ்யாபகஸ்ஸர்வஜ்ஞஶ்சாஸி [விபுஃ ।
ஸர்வஜ்ஞஸ்ய ப்ரகாஶஸ்ய ஸததம் கிம் வக்தவ்யம் மயா
ஸம்யோக்யம் வாஞ்சிதம் ஜ்ஞாத்வா தேஹி த்வம் ப்ராப்ய நம்ய ॥

35 சுககா ரணனா யாவர்க்குந் துலங்கு மியோக க்ஷேமங்கள்
இகமா ரின்பப் பரசுகத்தோ டுடில் பரம முத்தியையும்
தகவே யருளி வியாபித்துச் சருவஞ்ஞனுமா யுறு மனத்து
மிகவே யுரைக்க வென்னுளது மிகவு மாப்த னெனமதிப் [பேன்

(தா-ப்) நீர் சர்வலோக காரணனாயிருத்தலின், சமஸ்த உயிர்த் தொகுதிகளின் இகபர வீடு எனும் முத்திறத்தனவாகிய சுக துக்கங்கட்கும் ஏதுவாக விளங்குகின்றீர், ஆனால் அதை யவரவர்கள் வினைக்கேற்ப வளிக்கவேண்டியிருத்தலின், அவரவர் வினைகளினளவை யறிய, எப்போதும் எங்கும் உள்ளும், புறம்பும் நிறைந்து சர்வஞ்சனாய் எதையுமறிகின்றீர். ஆகவே எனதுளத்தும் நீங்காது றையும் தாங்கள், தன்னையே மேலான நண்பனாக மதித்திருக்கும் எனது எண்ணத்தையும் அறிவீராதலின், உம்மையே நம்பியிருக்கும் அன்பனாகிய என்னைக்கைவிடாது காத்தருளக் கருணை புரிவீர் (எ-ம்.)

ஹஸ்தாஹஸ்தி ப்ரணாஶ்ய த்ரிவித தாபஸ்ய ஸந்தே [ஹநஃ
காம்க்ஷ ஸாம்ப தவாம்க்ரி பத்மயுக்மம் ஸம்ஶ்ரயாமி [விஶ்வம் ।
ஸர்வம் ஜ்ஞாத்வா தவ நிஜஸர்வாதார ப்ரத்யக்ஷ
வாஞ்சிதம் ப்ரதத்ஸ்வ கருணாகர ॥

(அ-கை). பிறவிப்பயனாகிய வீடுபெற ஸ்தூல சூக்கும சரீரங்களைப் புண்ணியாகவாசனத்தால் பரிசுத்தம் செய்துள்ளேன் தாமதமின்றி சிவமே நீ, அதிற்றங்கி அருள்வாய் என்றறிவிக்கிறார்.

36. சிவமே வீடா முடற்சுத்தி செய்தே யதனால் வீடுபெறத்
தவமார் மனமாங் கலசத்துன் தாளாந் தளிர்சேர்த் துயர் [ஞான
சுவையார் தெங்குக் கனிவைத்துத் துலங்கு பக்தி நூல் சு [ற்றிச்
சிவமா வின்ப நீர்நிறைத்து திருப்புண் யாகஞ் செய்கின் [றேன்

(தா-ம்) ஏ, சிவமே! உனது பக்தனான யான், எனது சரீரமான வீட்டின் பரிசுத்தத்தையும், வீட்டை சதா விழைந்துகொண்டிருக்கும் என் மனதிற்கும் பிரியமான சுபகரத்தையும் பெறும் பொருட்டு, அன்பாகிய நூலால் சுற்றப்பட்டதும், சந்தோஷமாகிய ஜலத்தால் நிரப்பப்பட்டதுமான, எனது குற்றமற்ற சத்வகுணமாகிய கலசத்தில், உனது திருப்பாதத்தளிர்களைச் சூடித், தத்துவஞானமாகிய தேங்காயை அதில் தரித்து, தாரகமந்திரமாகிய ஸ்ரீ பஞ்சாட்சரத்தை விதிப்படி யுச்சரித்து, திருப்புண்யாகவாசனமென்னும் சடங்கைத் திறம்படச் செய்துள்ளேனாதலின், நீர் இனித்தாமதமின்றிக் குடியேறி, இருதயமாகிய பீடத்தில் எழுந்தருளி, ஏகபோகமாய் நீயு நானுமாய் இனிது வீற்றிருக்கப் பிரார்த்திக்கின்றேன் (எ-ம்).

𑌭𑌕𑍍𑌤𑍋 𑌭𑌕𑍍𑌤𑌿𑌗𑍁𑌣𑌾𑌵𑍃𑌤𑍇 𑌮𑍁𑌦𑌮𑍃𑌤𑌾𑌪𑍂𑌰𑍍𑌣𑍇 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑍇
𑌮𑌨𑌃𑌕𑍁𑌮𑍍𑌭𑍇 𑌸𑌾𑌮𑍍𑌬 𑌤𑌵𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌪𑌲𑍍𑌲𑌵𑌯𑍁𑌗𑌂 𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑍍𑌯 𑌸𑌂𑌵𑌿𑌤𑍍𑌫𑌲𑌂
𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌮𑍁𑌦𑍀𑌰𑌯𑌨𑍍 𑌨𑌿𑌜𑌶𑌰𑍀𑌰𑌾𑌗𑌾𑌰𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌵𑌹𑌨𑍍
𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌹𑌂 𑌪𑍍𑌰𑌕𑌟𑍀𑌕𑌰𑍋𑌮𑌿 𑌰𑍁𑌚𑌿𑌰𑌂 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌮𑌾𑌪𑌾𑌦𑌯𑌨𑍍 ॥

(அ-கை) தேவர்கள் திருப்பாற் கடலைக் கடைந்து தேவாமிர்தம் பெற்றது போல், ஞானிகள் வேதக்கடலை கடைந்து சிவப்பேரமுதை அடைந்தனர் என்றறிவிக்கிறார். (இது தேவர்களுக்கும் அறிஞர்களுக்கும் சிலேடை.)

37 வானோர் திருப்பாற் கடல்கடைந்த வாறே யறிஞர் சதுர்
[மறைபார்
ஞான கரத்திற் பத்தியெனுந் தாம்பின் மனமத் தீர்ப்பக்
[கடைய
தேனார் தேவ தருகாம தேனு, மணிநேர், பயனனைவே
கோனுஞ் சிவமே யினையடைவர், கூறும் நிலைபெற் றருள்
[வாயே.

(தா-ம்.) ஏ, சிவபரமே, முன் தேவர்கள் கூடி திருப்பாற்கடலை கடைந்து அமிர்தமாதி ஐஸ்வரியங்களை அடைந்தது போல், பண்டிதோத்தமர்களாகிய ஞானவான்களும் இருக்கு எசுர், சாமம், அதர்வணம் என்னும் வேதக்கடலில், மனமென்னும் மத்தை நாட்டி, அன்பென்னும் தாம்பில் பிணைத்து, வஸ்து நிர்ணயீ தத்துவ ஆராய்ச்சி யென்னுங் கடைதலைச் செய்து; காமதேனுவாதி ஐசுவரியங்களெனும், தத்துவமசியாதி மஹா வாக்கியங்களையும், தேவாமிர்தத்தை யொத்த சிவபரம் பொருளாகிய தம்மையு மறிந்தடைந்து கடைத்தேறினார்கள்; ஆகலின் அத்தகைய மேன்மைத் தன்மையை அடியேனுமடைய அனுக்கிரகம் செய்வீராக (எ-ம்.)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

(அ-கை) சந்திரோதயத்தை கண்டு, கடல் பொங்குவதுபோல, சிவத்தைக்கண்டு விபுதர்களுக்கும், ஆநந்தம், கடல் போன்று பொங்கும். என்கிறார் (இது சந்திரனுக்கும்; சிவனுக்கும் சிலேடை.)

38 தொல்லை யறமாங், கிரிபுதித்து தொண்டரிருதய வான்வி[ளங்கி
நல்லோரெனுமீன் கணஞ்சூழ நவிலஞ் ஞான விருளிரித்து
எல்லா மாகும் பூரணனு யிலகுஞ் சோமச் சிவன் றோன்[றில்
நல்லா நந்தக் கடல்பொங்கி நாடும் விருத்தி புதர்க்குறுமே

(தா-ட்) உலகில் சந்திரோதயத்தால் கடல் பொங்குவது போல் அவ்வுயிர்களின் பூர்வ சன்ம நிஷ்காம கர்ம பயனுன சித்த சுத்தி பெற்று முதயகிரியிற் றோன்றி, தத்துவஞானிகள் எனும் நட்சத்திரங்கள் சூழ, பக்தர்களது இருதயாகாசத்தில் பிரகாசித்து, அவர்கள் அஞ்ஞானம என்னும் இருளை போக்கடித்து, எங்கும் பரிபூரணாய் வியாபித்து விளங்கும், சோமப்பெயரேய்ந்த உமையோடு கூடிய சிவனே, நீர் அபரோட்சமாக விளங்கின், அந்தப் பக்தர்களது அகண்டாகார விருத்தியானது அதிகரித்து, ஆநந்தமென்னும் பெருங்கடல் பொங்கியெழும், ஆகவே நீர் ஞானசந்திரனாகின்றீர், எனவே எளியேனிதயத்து முதயமாக, பிரார்த்திக்கின்றேன் (எ-ம்)

ப்ராக்புண்யாசலமார்க்கதர்ஸிதஸுதாமூர்த்தி: ப்ரஸந்ந: ஸிவ:
ஸோம: ஸத்குணஸேவிதோ ம்ருகதர: பூர்ணஸ்தமோமோசக: ।
சேத: புஷ்கரலக்ஷிதோ பவதி சேதாநந்தபாதோநிதி:
ப்ராகல்ப்யேந விஜ்ரும்பதே ஸுமநஸாம் வ்ருத்திஸ்ததா ஜாயதே ॥

(அ-கை) செங்கோலோச்சும் அரசனிருக்கும் நகரம் எல்லா நன்மைகளுமுடையது போல், இதயத்தில் இறைவனெழுந்தருள்வதால் எப்பயனுமடைவேன் என்று கூறுகிறார்

39 என்னுள நகர்க்கோ ரரசெனவே யீச நீயிற் றிருப்பதனால்
மன்னிய தருமஞ் செழித்தோங்கும் மதாதி நீங்கும் பாவ [மூறும்
பின்னிடு காலம் சுகமாகும் பீடார் ஞான முதலுகூடும்
தன்னிய னாவேன் கைவல்யத்தனிநா யகனே தயாநிதியே

(கா-ம்) ஏ, கருணாகரனே! நீர் ஞானசொரூபன் என்பதை என் தறிவாலறிந்தபின், எனது இருதயமாகிய நகருக்கு அரசனாயிருப்பது நீயேயென அறிந்தேன், ஆதலின், இனிப் பிறப்பதற்கேதுவாய் பின்னிக்கிடக்கும் கோசபாசங்கள் என்னை விட்டுப்போம்; என் மனோராச்சியத்தில் தர்ம தேவதையும் நான்கு பாதங்களால் [illegible]க்கும்; காமக்குரோதாதி அறுவித பகைவர்களும் கால்விட்டோடுவர்; மேலும், எனது எதிர்காலமும் சுகாகாரமாய் விளங்கி, அடியேனும் பரிசுத்தனாவேன் (ஜீவன் முத்தனாவேன்) (எ-ம்)

ஶீயம் த்வமவபோதரூப கலிதாகாரோபவக்ஷ்யோ
க்ஷமே
ரா நிர்ந்தேப்ய வசாம்பிவஸ்ய அபிதாம் ஹோராயபி திவ்யாகர
மேதஃ ||
ஹ்ருத்பூர யஸ்தா ஸ்வஸ்திகஶ்யோஃ ஸாமர்த்யதர்வதே
சதுஷ்பாத் தவகிவஸ்ய ஹ்ரவது விஸ்வபதிஃகாந்தஃ

(அ-கை) கீழ்க்குறித்த பயன்கள் அடையப்பட்டுள்ள காரணத்தால் அடியேனுக்கு, இனிப் பஞ்சத்தாலாம் பயமில்லையெனக் கூறுகிறார்.

40 புத்தியாகு மியந்திரத்திற் பொருந்துறு வாக்காங் கடங்கொ
[ண்டு
நக்தின் சரித நீர்நிலையில் நனியிறைத்துக் கவிக் காலால்
நித்த மிதயப் புலம்பாய நின்தன் புப்பயிர் நனி செழிக்க
முத்திச் செந்நெல் விளைவுளதால் முதல்வ மோகக் கருப்பி
[லையே

(தா-ம்) ஏ, முழுமுதல்வ! அடியேனது புத்தியாகிய இராட்டினத்தின், வாக்காகிய குடத்தைக்கட்டி, நினது கல்யாண குணங்களைக் கூறும் விஸ்தார சரித்திரமாகிய நதியின் ஜலத்தை யிறைத்து, கவித்துவம் எனும் கால்வாயின் வழியே மனமாகிய கழனியிற் பாய்ச்சியதால், பூரணபக்தியாகிய பயிர் செழிப்பாய் வளர்ந்து, முத்தியாகிய செந்நெல் விளைந்துள்ளது, ஆதலின், இனி மோகமாகிய பஞ்சம் எனக்கு ஒருக்காலும் ஏற்படாது (எ-ம்)

பாபொத்பாத விமோசநாய ருசிரைஶ்வர்யாய ம்ருத்யுஞ்ஜய
ஸ்தோத்ரத்யாநநதிப்ரதக்ஷிணஸபர்யாலோகநாகர்ணநே
ஜிஹ்வாசித்தஶிரோங்க்ரிஹஸ்தநயநஶ்ரோத்ரைரஹம் ப்ரார்தி
தோ
மாமாஜ்ஞாபய தந்நிரூபய முஹுர்மாமேவ மாமேவசஃ ॥ (சக)

(அ-கை) கீழ்க்காணும் விஷயங்களில், மூகைத்தன்மை, செவிட்டுத்தன்மை முதலியவை உண்டாகாவாறு இறைவனை வேண்டுகிறார்.

41 கதிரானடைய மிருபாவக் கணங்க ளொழியச் சீர்பாதத்
துதியார் தியானம் தொழுதல்வலம் சூழ்தல் காண்டலி கே
[ட்டலுற
விதிப்பா யெந்நா மனஞ்சென்னி விளங்குங் கால்கை கண்
[காது
பதியக் கடைக்கண் பாலிப்பாய் பாவ மூகை வேண்டிலனே

(தா-ம்) அடியேன் இப்பிறவியிலேயே, உனது மங்களகுண சரிதங்களை, எனது வாக்கினால் உரைக்கவும், நாவால் துதிக்கவும், காதுகளால் கேட்கவும், மனத்தால் பாவிக்கவும், கரத்தால் பூசிக்கவும், உடலால் வணங்கவும், கால்களால் வலம் வரவும் நீர் கருணை புரிந் திரட்சிக்கவேண்டும், அதனால் உடலைப் பெற்றதின் உறுதிப்பயனாகிய வீட்டின்பமெய்துவேன், இல்லையேல் இவ்வுறுப்புக்களை உடையனாயிருந்தும், உன்மத்தனாய், உளமையாய், ஊழன்றவனை யொப்பதுடன், உடலுறுப்பளித்த நன்றியறிதலை, உடையவனாகிய வுமக்கு காட்டாதவனுமாவேன், எனவே இந்நிலையை எனக்களிப்பாயாக (எ-ம்)

மாம்ஸீய-ஐம் வரிவாவஷம் வகுயதிஃ ஹாகாசஉஷ்ஷூ-ண
ஜோஉஸாவபவேம்வதெம்ஓ்ரய அயொஅாசாண்ி்ஷெஷெஷிதஃ
விஷஹாவஷ-ஷஉரஙிரிதூவிஷஸாஉதிரஷுஷெதெஷஹா
ஊ-ம-ஆ,திவிரியஷெவஉாஉகஉஜொ ஊ-மெ-ஊ திவாஷம்க-ா-

(அ-கை) பரமேஸ்வரன் பர்வததுர்க்கத்தில் வசிப்பதில் பிரீதியுடையனாயிருத்தலின், தன் மனோதுர்க்கத்தில் வசிக்கும்படி பிரார்த்திக்கின்றனர்.

42 துர்க்கத் துறையு முவகையனே தொடர்கம், பிர வகழ்
[சூழென்
தர்ப்பத் தைரிய மனக்கோட்டை சற்குண,வாய்த்த பலமுட
[னே
தர்க்கப் புலனும் வாயில்களுஞ் சத்துவ,ஞான, வித்தை
[களும்
வர்க்கதத் துடனே வதிவதினால் மனமுன் னிருக்கைக்
[கேற்றதுவே

(தா-ம்) ஹே சங்கரனே! நீர் வசிக்க கஷ்டமான பர்வதப்பிரதேசமாகிய கைலைக்குன்றில் வாசம் செய்யும் விருப்புடையனாயிருந்தலின், அதைக்காட்டிலும் மேன்மைதங்கியதும், அழகியதும், ஆழ்ந்துள்ளதும், அகன்றுள்ளதுமாகிய அகங்காரமென்னும் அகழி சூழ்ந்ததும், தைரியமான கோட்டையையுடையதும், ஞானேந்திரியர்களென்னும் சமூக பலமுடையதும், நவவாயில்களையுடையதும், நல்ல ஞானி சாஸ்திர பொக்கிஷங்களும், விதம் விதமாக அமைந்துள்ளதாகிய எனதுமனக்கோட்டைக்குள், சந்துஷ்டியாய் சதாவாச செய்ய, யாது தடை? ஆகவே எழுந்தருளி எனை யீடேற்றவேண்டும் (எ-ம்)

𑌗𑌾𑌮𑍍𑌭𑍀𑌰𑍍𑌯𑌂 𑌪𑌰𑌿𑌖𑌾𑌪𑌦𑌂 𑌘𑌨𑌧𑍃𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰𑌾𑌕𑌾𑌰 𑌉𑌦𑍍𑌯𑌦𑍍𑌗𑍁𑌣-
𑌸𑍍𑌤𑍋𑌮𑌶𑍍𑌚𑌾𑌪𑍍𑌤𑌬𑌲𑌂 𑌘𑌨𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌚𑌯𑍋 𑌦𑍍𑌵𑌾𑌰𑌾𑌣𑌿 𑌦𑍇𑌹𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ।
𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌵𑌸𑍍𑌤𑍁𑌸𑌮𑍃𑌦𑍍𑌧𑌿𑌰𑌿𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌸𑌾𑌮𑌗𑍍𑌰𑍀𑌸𑌮𑍇𑌤𑍇 𑌸𑌦𑌾
𑌦𑍁𑌰𑍍𑌗𑌾𑌤𑌿𑌪𑍍𑌰𑌿𑌯𑌦𑍇𑌵 𑌮𑌾𑌮𑌕𑌮𑌨𑍋𑌦𑍁𑌰𑍍𑌗𑍇 𑌨𑌿𑌵𑌾𑌸𑌂 𑌕𑍁𑌰𑍁

(அ-கை) சிவன் ஆதிக்கிராதனாதலின், அதையுன்னி, வேடனுக்கு வேண்டிய யாவும் தன்னிடமிருப்பதால், அதில் வசிக்கவேண்டு மென்றனர்.

43 ஆதிக் கிராத மலைவாச அங்கு மிக்கு மேகாதே
பேதிக் தழலென் மனக்காட்டில் பேசு மதர்த்த காமாதி
சாதி மிருகங் களைவாட்டித் தனித்துன் னிச்சைப் படிசரி
[ப்பாய்
பாதி மங்கை யாயவனே பக்தர்க் கருளும் பரமேட்டி

(தா-ம்) ஏ, பரமேட்டி ! நீர் அன்பர்கட்கருள் புரியவசரமா அருட் சத்தியுடன் கூடி அருள்புரிபவனென்பதை, முன் அர்ச்சுனனுக்காக குடும்ப சகிதமாய் வேடவடிவந்தாங்கி கைலைக்குன்றிலிருந்து கால்-

கூடுக நடந்து காட்சி இந்தநிலிருந்தறியப் படுவதால், ஆதிவேடன், நீர். கைலை மலையிலும் அதற்கடுத்த காட்டிலும் என் அலையவேண்டும், கணத்திற்கு கணம் மாறு மியல்பினையுடைய என் மனமாகிய விசித்திரக்காட்டிலுள்ள மதமிகுந்த காமக்குரோதாதி அறுவகைசாதி மிருகங்களை கொன்று உன்னிஷ்டப்படி சஞ்சரிப்பராயாக, நானும் கிருதார்த்தனாவேன் (எ-ம்).

கஈ ஞ்ஜூடிஜா மஃ கலீஂ ஊ ஹ்ஜாவ நபாசு ஒரு விவஞூ ஜொாஷு ஐஞூ:

பிலிபெபாவிபஞா கூதிஞூஅதுகூஹரெ வஞுஊவொரஷு செ கூதொஹீ: (சச)

(அ-கை) மஹாதேவனைச் சிங்கவடிவமாக உவமித்துக்கூறுகின்றனர்.

44 மானைப் பிடித்துக் கயாசூரன் மற்றும் வியாக்கிர னுயிர்க வர்ந்து

ஏனைச் சருவ பிராணிகளு மேய்ந்து தன்பா லடங்கியுற
மானுங் கைலை மலைவதியுங் கோனை பஞ்சா னனத்தரியை
நானெனு புந்திக் குகையின்கண் நாடி யச்சமொழிந் தேனே

(தா-ப்) தமது அழகிய திருக்கரத்தில் மானைத் தரித்தவனும், துஷ்டத்தன்மையும் மிக்க பலமும் உடைய கயாசூரன், வியாக்கிராசூரன் முதலியவர்களை தண்டித்தவனும், உலக உயிர்த்தொகுதிகளனைத்திலும் உயிர்க்குயிராய் விளங்கி, எல்லா சராசரங்களும் தானேயாய் பொருந்துபவனும், திருக்கைலை மலையில் வாசம் செய்யும் தலைவனும் ஆகிய, ஐந்து திருமுகங்களையுடைய சிங்கேறானது, அடியேன் மனக்குகையில் இருத்தலை உணர்ந்துள்ளேனாகையால், இனி நான், எதற்கும் பயப்பட வேண்டிய அவசியமேயில்லை (எ-ம்)

ச்சந்த:ஶாகிஶிகாந்விதைர் த்விஜவரை: ஸம்ஸேவிதே ஶாஶ்வதே
ஸௌக்யாபாதினி கேதபேதினி ஸுதாஸாரை: ஃபலைர் தீபிதே ।
சேத: பக்ஷிஶிகாமணே த்யஜ வ்ருதா ஸஞ்சாரமன்யைரலம்
நித்யம் ஶங்கரபாதபத்மயுகலீநீடே விஹாரம் குரு ॥ ௪௫

(அ-கை) பரமசிவன் தாளிணையாகிய கூட்டில் தனது மனமென்னும் பட்சியை இருக்குமாறு வேண்டுகிறார்.

45 வேதத் தண்டின் கிளைச்சிகையாம் வேதாந் தமுணர் விற்பனராம்
மேதைப் புட்கள் சூழ்ந்துளதும் மிகுரச வின்பக் கனியுளதும்
வாதைப் பசிநோ யாற்றுவதும் வாய்ந்த தருவாஞ் சங்கரன்றன்
சீதத் தாளிணை யாங்கூட்டில் சித்தப் பறவை தங்குவையே

(தா-ம்) எனது மனமாகிய பட்சியே நீ, உனது ஓய்வில்லாத அலைச்சலைவிட்டு நீங்கி, உபநிஷத்தாகிய கிளைகளோடு, ஞானிகளாகிய உயர்ந்த பட்சிகள் சூழ, துன்பந்தரும் பசிநோய் தீர்க்கும் அமிர்தத்திற்கு சமானமான பழங்களுடன் கூடிய, வேதங்களாகிற மரத்திடையே அழிவற்றதாய் விளங்கும், சங்கரனது திருவடியாகிய கூண்டிலே சேர்ந்து, சதா விளையாடி நித்யானந்தத்தை அடைவாயாக (எ-ம்.)

ஆகீர்ணே நகராஜிகாந்திவிபவை ருத்யத்ஸுதாவைபவை
ராதௌதேபி ச பத்மராகலலிதே ஹம்ஸவ்ரஜைராஶ்ரிதே ।
நித்யம் பக்திவதூகணைஶ்ச ரஹஸி ஸ்வேச்சாவிஹாரம் குரு
ஸ்தித்வா மானஸராஜஹம்ஸ கிரிஜா நாதாங்க்ரி ஸௌதாந்தரே ॥

(அ-கை) மானஸ ராஜஹம்சத்திற்கு, கௌரிகாந்தனது, திருவடிகளாகிற உப்பரிகையின் நடுவில், வசிக்கும்படி, கட்டளையிடுகின்றார்,

வேறு.

46 அலைவுறு மெனது மன்மதாமரச் வன்னமே யீதறிக [யிலை
மலையுறு தேவன் மலரடிச்சௌத மருங்கிடையங்ககக் காந்தி
விலையுறு மணிக ளிழைத்தனபோல மேவிடும் பரமவம்சா
நிலையம துற்று பத்திமா துடனே நெறிபட நீகளித் திருப் [பாய்

(தா-ம்) எனது, சுத்த சத்துவாம்சமனமாகிய அரசவன்னமே, நீ உனது பிறவியின் இயற்கைத்தன்மையாகிய பகுத்தறிவுடன் கூடியிருந்தும், அதை மறந்து, சாரமற்ற அனித்திய வுலக சுகபோகங்களில் எக்காலு மோய்வின்றியலைந்து திரிந்தல்லற் பலவற்றிற்கு மாளாவது விவேகத்தன்மையாகுமா? உன் உயரிய தன்மைக்கேற்பவுன்னத நிலையை யடையச் செய்யுமுபாய மொன்று கூறுகிறேன் கேள், திருக்கைலாச கிரியின் கண்ணேவமைந்த, அழகிய வெண்ணிறத் திருமாமணிப்பீடத்தில், உமாதேவியுடன்கூடி திருவோலக்கம் கொண்டெழுந்தருளியிருக்கும் மகாதேவனது, வெண்டாமரை மலர் போன்றதிருவடிகளில், சிவந்த அந்த நகங்களின் பிரகாசமானது, அப்பீடத்திலிழைக்கப்பட்ட விலைபேறப் பெற்றரத்தினங்கள் போற்சொலிக்க, பல முனிபுங்கவர்கள் சூழ்ந்து வாழ்த்தெடுப்ப, விளங்கும் உப்பரிகையில், பக்தி மாதாகிய இலட்சுமிகரத்துடன் கூடிப்பரவசமாயிலகும், திருவடிப் பேற்றினிரண்டறக் கலந்தெப் போதுமின்புற்றிருப்பாயாக (எ-ம்.)

ஶம்போ த்யாநவஸந்தஸங்கிநி ஹ்ருதாராமேऽகஜீர்ணச்சதாஃ
ஸ்ரஸ்தா பக்திலதாச்சடா விலஸிதாஃ புண்யப்ரவாலச்ரி
தாஃ ।
தீப்யந்தே குணகோரகா ஜபவசஃ புஷ்பாணி ஸத்வாஸநா
ஜ்ஞாநாநந்தஸுதாமரந்தலஹரீ ஸம்வித்பலாப்யுந்நதிஃ ॥ (சஎ)

(அ-ங்க) சிவத்தியாநமாகும், வசந்தவிருதுவரின், என் மனமாகிய பூங்கா செழிக்குமென்கிறார்.

47 எவன்மனத் தீசன் தியானமாமிளவே னில்வரு மஃதெ
ழிற் சோலை
யவன்டவஞ் சருகா மமர்ந்திடுமறங்க ளருந்தளிர், நற்குண
[மரும்பாம
சுவமொழி மலராம் நல்வினை மணமாந் தூயதோ ருள்ளமே
[தேனும்
பவமொழி ஞானக் கனியுடனொளிரும் பாக்கிய மெற்கருள்
[பரனே

(தா-ம்) ஏ சம்போ! எவனுடைய மனமானது, உனது தியானமாகிய வசந்தவிருதுவையடைகின்றதோ, அப்பொழுது அதுவே அளப்பரும் வளப்பம்வாய்ந்த வழகிய பூஞ்சோலையாகும், அத்தகைய மனமுடையோன் அறியாது செய்துள்ள பாவங்கள், அச்சோலையிலுதிர்ந்துலர்ந்துபோம் சருகுகளையொத்தொழிந்துபோம், அவன்செய்யும் புண்ணியங்களனைத்தும், அதிலெழுந்தளிர்களைப்போல் தழைத்தொளிரும், அதிலுள்ளவரும்புகள்போல, அவனது நற்குணங்களனைத்துமபிவிருத்தியடையும்; அதிலுள்ள புஷ்பங்களையொத்து, அவனது துதிவடிவவசனங்கள் பிரகாசிக்கும், அம்மலர்களிலுள்ள வாசனைபோல, அவன் செய்யுங்காரியங்களனைத்திலும் அவனது புகழ் மணம் வீசும்; அம்மலர்களிலார்ந்த தேனைப்போல, அவனுள்ளம் எப்போது முவகையுடன் கூடியினித்திருக்கும்; அதிலுள்ள சில

அபூர்வமான கனிகளைப்போல, உனது திருவடியின்பத்தாழ்ந்து அழியாவின்பவடிவாகவே அமைந்திருப்பன், ஆகவே இந்த அரிய நிலையை அடியேனுக்கருள்வேண்டும். (எ-ம்)

𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑌨𑍍𑌦𑌰𑌸𑌾𑌲𑌯𑌂 𑌸𑍁𑌰𑌮𑍁𑌨𑌿𑌸𑍍𑌵𑌾𑌨𑍍𑌤𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌾𑌤𑌾𑌶𑍍𑌰𑌯𑌂
𑌸𑍍𑌵𑌚𑍍𑌛𑌂 𑌸𑌦𑍍𑌵𑌿𑌜𑌸𑍇𑌵𑌿𑌤𑌂 𑌕𑌲𑍁𑌷𑌹𑍃𑌤𑍍𑌸𑌦𑍍𑌵𑌾𑌸𑌨𑌾𑌵𑌿𑌷𑍍𑌕𑍃𑌤𑌮𑍍 ।
𑌶𑌮𑍍𑌭𑍁𑌧𑍍𑌯𑌾𑌨 𑌸𑌰𑍋𑌵𑌰𑌂 𑌵𑍍𑌰𑌜 𑌮𑌨𑍋 𑌹𑌂𑌸𑌾𑌵𑌤𑌂𑌸 𑌸𑍍𑌥𑌿𑌰𑌂
𑌕𑌿𑌂 𑌕𑍍𑌷𑍁𑌦𑍍𑌰𑌾𑌶𑍍𑌰𑌯𑌪𑌲𑍍𑌵𑌲𑌭𑍍𑌰𑌮𑌣𑌸𑌂𑌜𑌾𑌤 𑌶𑍍𑌰𑌮𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿 ॥

(அ-கை) பரசிவத்தியானமே சிறந்ததாமென்று மனத்திற்குப்போதித்து, இதரதேவதைகளைநாடுவதினின்றும், அதைத்திருப்புகின்றனர்:—

48 என்மன, வனமே நித்திய சுகநீ, ரிலங்கிடு தடமாய் முனி [தேவர்
நன்மனப், பதும முளதாய்ஞான, காதராம் புள்ளினஞ் [சூழ்த்
தின்னுற் கரும வாசனைவீசத் துலங்கிடு சிவதுதிப்பொ [ய்கை
மன்னிநீ மகிழ்வை யற்பராங்குட்டை மருவிய துயரொழி [மதியே.

(தா-ம்) எனது மனமாகிய அன்னப்பறவையே, இயற்கையமைப்பிலேயே, சாரம், அசாரமெனப் பகுத்தறியும் விவேகமடைந்திருப்பதற்கேற்ப நீ, உலகில் அற்பதேவதைகளின் சேவையாகிய, துர்நாற்றம் வீசும் குட்டையில் வசிக்கும் கஷ்டத்தை யொழித்து, நித்தியாநந்தத்தை யொத்த தண்ணீர் நிரம்பியதும், தேவர், முனிவர் முதலியவர்களின் சித்தத்தையொத்த செந்தாமரை மலர்களையுடையதும், ஞானவான்களை நிகர்த்த உயர்ந்த பட்சிக்கூட்டங்கள்

இடையறாது சூழ்ந்துள்ளதும், நல்லகருமங்களாகிற நறுமணம் வீசுவதுமான, ஈசுவர துதியாகிய அழகார்ந்த தடாகத்தையடைந்து, உன் பிறவிப்பயனாகிய பேரின்ப நிலையைப் பெறுவாயாக (எ-ம்.)

ஆநந்தாம்ருதபூரிதா ஹரபதாம்போஜாலவாலோத்யதா
ஸ்தைர்யோபக்நமுபேத்ய பக்திலதிகா ஶாகோபஶாகாந்விதா ।
உச்சைர்மாநஸகாயமாநபடலீமாக்ரம்ய நிஷ்கல்மஷா
நித்யாபீஷ்டபலப்ரதா பவது மே ஸத்கர்மஸம்வர்த்திதா ॥

(அ-கை) பக்திப்பேறாகும் பெரும் பயனை விரும்புகின்றனர்,

வேறு.

49 இறைவ வெனது பக்திலதை யிணைத்தாட் பாத்தி முளைத் [தோங்கி
நிறையு மன்பாம் நீரேற்று நேர்திட பாவக் கொம்பேறி
அறையுமனப்பந் தரிற்படர்ந்தே யமைநல் வினையா லாசகன்று
முறையே நினைத்த பயன்றருக முக்கட் பரம முனைகுவையே

(தா-ம்) ஏ! முக்கண்ணா! தம்மிடத்துள்ள, எனது பக்தியாகிய கொடியானது, தம் திருவடியாகிய பாத்தியில் முளைத்துப், பூரண அன் பென்னும் ஜலத்தைப்பருகி வளர்ந்தோடித், திடபாவனை யென்னும் கொழுகொம்பேறி, நன்மனமாகிய பந்தரில் நன்றாய் படர்ந்து, பூர்வசன்ம நற்புண்ணிய பலத்தால் யாதொரு கெடுதியு மின்றிச்செழித்துக், கிரமமாகயானடைய வேண்டியபிறவிப்பெரும் பயனைப்பெறத், திருவருள் புரியுமாறு பிரார்த்திக்கின்றேன் (எ-ம்.)

𑌸𑌂𑌧𑍍𑌯𑌾𑌰𑌂𑌭𑌵𑌿𑌜𑍃𑌂𑌭𑌿𑌤𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌶𑌿𑌰 𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌂
𑌸𑌪𑍍𑌰𑍇𑌮𑌭𑍍𑌰𑌮𑌰𑌾𑌭𑌿𑌰𑌾𑌮 𑌮𑌸𑌕𑍃𑌤𑍍𑌸𑌦𑍍𑌵𑌾𑌸𑌨𑌾𑌶𑍋𑌭𑌿𑌤𑌂 ।
𑌭𑍋𑌗𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌭𑌰𑌣𑌂𑌸𑌮𑌸𑍍𑌤𑌸𑍁𑌮𑌨𑌃𑌪𑍂𑌜𑍍𑌯𑌂𑌗𑍁𑌣𑌾𑌵𑌿𑌷𑍍𑌕𑍃𑌤𑌂
𑌸𑍇𑌵𑍇 𑌶𑍍𑌰𑍀𑌗𑌿𑌰𑌿 𑌮𑌲𑍍𑌲𑌿𑌕𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌮𑌹𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌶𑌿𑌵𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌂 ॥

(அ-கை) ஸ்ரீ சைலத்தின் மல்லிகார்ச்சுனரைத் துதிக்கின்றனர்.

50 வேத முடிவி லொளிர்பவனே ! விளங்குமை தழுவ ராப [ரணு !
பூத முனிவ ரமரர்களும் போற்றுஞ் ஞானப் பேரொளியே!
சாது சனங்கள் பாவனனே ! தண்ணரு ளந்திப் புரிபவனே!
சீத மதியார் சிரத்தோனே ! திருப்பருப் பதனே சேவித் [தேன்.

(தா-ம்) ஏ, மகாலிங்கத்தேவனே! உன்னைப் போற்றிசெய்கின்றேன், வேதசிரசாய் விளங்கும் உபநிடதங்களிற் பிரதிபாதிக்கப்படும் சச்சிதாநந்தவடிவனே, உலகீன்ற வுமாதேவியாரினுளங்களிப்ப அவளுடன் ஒன்றி யபேதமாயுறைபவனே, தம்மைக் கொல்வான் வேண்டித்தாருகவன முனிவர்களேவிய கொடிய சர்ப்பத்தின் வலியை யடக்கிய வறிகுறியாகவதை யாபரணமாக வணிந்து அகிலத்தவர்க்குக் காட்டுபவனே, சத்துவகுணப் பிரதானமானவனே, பூதர் முனிவராதி பலராலும் சூழப்பட்டு போற்றப்படுபவனே வேண்டினர்க்கு விரும்பியபயனை விரைந்தளிப்பவனே, அடியார்க்கு அருள்புரிவான் வேண்டிப் பிரதோஷ காலத்தில் ஆநந்ததாண்டவம் செய்பவனே, அவ்வடியவரைக் காக்குந் தொண்டைச் சிரசாய்வகித்துள்ளேன் என்பதை அனைவருமறிவான் வேண்டி அம்புலியைச் சிரத்திற் சூடியவனே, திருப்பருப்பதம் என்னும் திவ்ய சிவதலத்திலெழுந்தருளியிருக்கும் மல்லிகார்ச்சுனனே, உனது திருவடிகளையே சதா சேவிக்கின்றேனாதலின் எனக்கருள் புரிவாய் (எ-ம்)

ப்ருங்கீச்சாநடநோத்கட: கரிமதக்ராஹீ ஸ்புரந்மாதவா-
ஹ்லாதோ நாதயுதோ மஹாஸிதவபு: பஞ்சேஷுணா சாத்-
ருத: ।
ஸத்பக்ஷ: ஸுமநோவநேஷு ஸ புந: ஸாக்ஷாந்மதீயே மநோ
ராஜீவே ப்ரமராதிபோ விஹரதாம் ஸ்ரீசைலவாஸீ விபு: ॥

(ஆ-கை) ஸ்ரீபிரமராம்பிகையின் ஈசனை ஒரு ஆண்வண்டாக வர்ணிக்கின்றார்.

51 நன்கு கறுத்த வுடலேற்று நற்கிரிதங்கி மது ருதுவி
லன்பிற் கூடி கயன்மதநீரருந்தியமர ரெனும் பூங்கா
இன்பிற் சுழன்று பிருங்கிமன மிசைத்துக்குடிலை ரீங்கார
மன்னுஞ் சுரும்பா, மகதேவ! மனமாங் கமல மருகுளை
[யே

(தாற்) சர்வேசா! நீர் மிக்க கறுத்த வுடலுடன், காடுமுரடுக ளுள்ள, திருப்பருப்பத முதலிய கிரிகளிற்றங்கி வசந்தயிருதுவிலன் புடன் கலந்து, கயாசுர னுடைய மத நீரைக்குடித்து, தேவர்குழா மாகிய பூங்காவில் சந்தோஷத்துடன் திரிந்துழன்று, பிருங்கிமா முனிவரின் இச்சைப்படி நடனம் புரிந்து, பிரணவ நாதமாகிய ரீங் கார வொலியுடன் பொருந்தித் திரிந்துழலும், கஷ்டமான வாசத்தை விட்டு, என் இருதய கமலமாகிய மிருதுவான தாமரைக் கமலத்தில் சதா வீற்றிருந்து விளையாடிக்கொண்டிருக்க அடியேன் வேண்டுகின்றேன் (எ-ம்)

காருண்யாம்ருதவர்ஷிணம் கநவிபத்க்ரீஷ்மச்சிதாகர்மடம்
வித்யாஸஸ்யபலோதயாய ஸுமந:ஸம்ஸேவ்யமிச்சாக்ருதிம் ।
ந்ருத்யத்பக்தமயூரமத்ரிநிலயம் சஞ்சஜ்ஜடாமண்டலம்
ஸம்போ வாஞ்சதி நீலகந்தர ஸதா த்வாம் மே மநஸ்சாதக: ॥

(அ-கை) சங்கரனை மேகமாகவும், தன் மனதைச் சாதகப் புள்ளாகவும் உவமித்துக்கூறுகின்றார்.

52 நீலகண்டக் கரும்புயலே நினதருளாகு மமுதுண்டு
காலபாச வெப்பமறக் கருது மன்பின் வடிவேற்று
கோலச் சடையா மின்னலுறக் குலவு கிரிநின் றின்பமழை
சாலப்பெய்ய வென்மனமாஞ் சாதக முன்னை விரும்பியு
[தே

(கா-ம்) கரிய நிறக்கண்டத்தையுடைய கறைக்கண்டனாகிய கருமேகமே! உமது தயவாகிய அமுதையுண்டு, எனது மனதாகிய சாதகப்பட்சியானது, பிறப்பிறப்பிற் கேதுவாகும் காலபாசமாகிய கொடிய வெப்பத்தினின்று விடுபடுவான் வேண்டி, உமதன்பின் வடிவாகவேஉருக்கொண்டு நிற்பதால், நீவிர்உமதுதிருப்பாதக் காட்சியளிப்பதாகிய சிதாகாயத்திலே தோன்றி, அழகிய செஞ்சடையாகிய மின்னலுடன் கூடி, (அடியார்) தீவினை பொடிபட ஆர்ப்பரித்திடித்து, கருணைமிக்காம் கைலைக்குன்றில் நின்று, ஆநந்தமாகிய மழையை அதிகமாகப் பெய்தாதரிப்பீராக (எ-ம்.)

ஆகாஶேந ஶிகீ ஸமஸ்தபணிநாம் நேத்ரா கலாபீ நதா
நுக்ராஹி ப்ரணவோபதேஶநிநதை: கேகீதி யோ கீ
யதே।
ஶ்யாமாம் ஶைலஸமுத்பவாம் கநருசிம் த்ருஷ்ட்வா நடந்தம்
முதா
வேதாந்தோபவநே விஹாரரஸிகம் தம் நீலகண்டம் பஜே॥

(அ-கை) மகாதேவனை மயிலாக உருவகப்படுத்துகின்றனர்.

53 வானச்சிங்கையா வணிதோகை வயங்கக் கௌரி மேகங்கண்
டானந் தக்கூத் ததுபுரிந்தே யரிய வேதக் காவதனில்
தானக வும்ஓம் நாதமது சார வருள்சங் கரமஞ்சை
யானத சித்ரப் பூஞ்சோலை மன்னிக் களிக்க வணங்கினனே

(த-ம்) ஏ, சங்கரமஞ்ஞையே! நீ சிதாகாயமே சிரமாகவும், அரவா பூரணமே தோகையாகவும் பிரகாசிக்க, கருமை நிறமிக்க, கூந்தலையுடைய உமாதேவியாகிய மேகத்தைக்கண்டு, வேதமாகிய பூஞ்சோலையில், ஓங்காரத்தொனியாகிய அகவுதலைச்செய்து, ஆநந்ததாண்டவமாகிய திருநடம் புரிந்துகொண்டிருக்கும் தேவரீர். அதைவிடக், கணத்திற்குக்கணம் மாறுமியல்பினையுடைய எனதுமனதாகிய அழகார்ந்த விசித்திரபூஞ்சோலையில் சதாபொருந்திச்சந்தோஷத்துடன் நடம்புரிந்திருக்கவும், அதனால் அடியேனைப்புனிதனாக்கவும் வேண்டுகிறேன். (எ-ம்)

ஸந்த்யாவ்ஜ்ஹதிநாத்யயொ ஹரிகராகாதப்ரபூதாநக-
த்வாநொவாரிதகர்ஜிதம் திவிஷதாம் த்ருஷ்டிச்சடா சஞ்சலா ।
பக்தாநாம்பரிதொஷபாஷ்பவிததிர்வ்ருஷ்டிர்மயூரீஶிவா
யஸ்மிந்நுஜ்ஜ்வலதாண்டவம் விஜயதெ தம்நீலகண்டம்பஜெ ॥ (௫௪)

(அ-கை) பார்வதீ பரமேஸ்வரர்களை. முறையே பெண்மயிலாகவும் ஆண்மயிலாகவும் வர்ணிக்கின்றனர்.

54 மாலைச் சமயம் கார் காலாய் மாற்கைம்மத்தள வொலியிடி
யாய்
ஓலத் தேவர் கண்மின்னாய்த், திருவடி யரர்கண் ணீர்மழை
[யாய்
ஏலக் குழலாள் பெண்மஞ்சை யெனவா நந்தத் தாண்டவ
[மே
சாலப் புரியாண் சிகிச்சிவமே தமியே னுளத்தில் நடிப்பா
[யே

(தா-ம்) பிரதோஷ காலமே மழைக்காலமாகவும், திருமாலின் கரத்தால் வாசிக்கப்படும் மத்தளச் சத்தமே கோடையிடியாகவும் போற்றும் தூய்மையான தேவர்களின் கண்ணொளிக் கிரணங்களே மின்னல்களாகவும், சூழ்ந்து யேற்றும் மெய்யடியார்களின் கண்களிலெழுமாநந்த பாஷ்பமே மழையாகவும், அவ்வாடலைக் கண்ணுறும் ஸ்ரீ சிவகாமவல்லியே பெண்மயிலாகவும் பாவித்துச், சிதாகாசத்தின்கண்ணே ஆநந்த தாண்டவம் புரியும் வீரகிண்கிணியையணிந்த அதிரஞ்சித குஞ்சித பாதத்தையுடைய ஆண்மயிலாகிய ஸ்ரீநடராஜப்பெருமானே, நீர் எனதுள்ளமாகிய (சத்வாம்ச) மனோகாசத்திலும் சார்ந்து சதாநடம்புரிந்து என்னையுமீடேறச் செய்யும்படி வேண்டுகிறேன் (எ-ம்.)

ஆத்யாயாமிததேஜஸே ஶ்ருதிபதைர்வேத்யாய ஸாத்யாய
தே ।
வித்யாநந்தமயாத்மநே த்ரிஜகத: ஸம்ரக்ஷணோத்யோகிநே ।
த்யேயாயாகிலயோகிபி: ஸுரகணைர்கேயாய மாயாவிநே
ஸம்யக்தாண்டவஸம்ப்ரமாய ஜடிநே ஸேயம் நதி: ஶம்பவே ॥ (௫௫)

(அ-கை) சகத்காரணனாகிய சங்கரனைத் துதிக்கின்றனர்.

55 உலகத் தோற்றக் காரணனா யொருமூன் றுலகங் காப்
[வனா
யுலகில் சோதி வடிவினனா யன்பர்க் கருள்செய் மூர்த்தி
[யதா
யிலகு மறையா லறிபவனா யெழின்மா சத்திக் கிசைந்தவ
[னாய்
நடமார் நட்டம் மாலைபயில் நாதா நின்தாள் நாடினனே

(தா-ம்) ஏ, பொதுநடம் புரியும் பூரண! நீர், மண், விண், பாதலமென்னும் மூவித உலகத்தோற்றங்கட்கும் காரணனாக அருவவடி

வனுகவும், அதிலுள்ள சராசரப் பொருள்களின் இரட்சணை நிமித்தம் அவையனைத்திற்கும் உள்ளீடாயுயிர்க்குயிராய் நிறைந்தொளிரும் அருவுருவவடிவனுகவும், அன்பர்களுக்கு விரும்பிய விதமே எதிர் நின்றளிப்பான் வேண்டி உருவவடிவனுகவும் ஒளிர்வதுடன், பிரபல சுருதிகளால் பிரதிபாதிக்கப்படும் சச்சிதாநந்த வடிவனுகவும், பராசக்தியின் அன்பிற்குப் பாத்திரனுகவும் பயனளிப்பவனுகவும், யோகீஸ்வரர்களின் உபசாந்த நிலையில் தோன்றி ஆநந்த தாண்டவம் புரிபவனுகவும், உள்ளீர், ஆகவே தமது வீரகண்டையையணிந்த குஞ்சிதபாத பக்தியையே எப்போது மியற்றிக்கொண்டு எல்லா நலனுமுண்டய எனக்கருள் புரிதல் வேண்டும் (எ-ம்.)

நித்யாய த்ரிகுணாத்மநே புரஜிதே காத்யாயநீஶ்ரேயஸே
ஸத்யாயாதி குடும்பிநே முநிமந: ப்ரத்யக்ஷசிந்மூர்த்தயே ।
மாயாஸ்ருஷ்ட ஜகத்ரயாய ஸகலாம்நாயாந்த ஸஞ்சாரிணே
ஸாயம் தாண்டவஸம்ப்ரமாய ஜடிநே ஸேயம் நதிஶ்ஶம்பவே ॥ருசு

(அ-கை) சகலப்பிரபஞ்ச வடிவனுகும் பரசிவனை மீண்டும் துதிக்கின்றனர்.

56 நித்திய முக்குண சுயவடிவ நிகழ்முத்தேகப் புரதகன
சத்திய முனிவர் சித்துருவ சங்கரி தவத்தின் பயன்வடிவ
சத்துவ வேதத் திலங்குபவ சார்பிர தோட நடப்பிரிய
முத்தொழி லியற்று முக்கண்ணர் முதல்வ நினையேத் திடு
[கின்றேன்

(தா-ம்) ஏ, முக்கண்ணனே! இறப்பு, நிகழ்வு, எதிர்வென்னு முக்காலங்களிலும், மாருதொருபடித்தாய் விளங்குபவனே, சத்துவமாதி முக்குணங்கட்கும் பிறப்பிடமாயவனே, சாக்கிர, சொப்பன, சுழுத்தியாகிய மூன்று அவஸ்தைகளும் நிகழ்தற்குரிய ஸ்தூல, சூக்கும

காரணமென்னும் முப்புரங்களையும். வஸ்துவிசாரணையா லெரிபடச் செய்யும் ஞானிகளின் யதார்த்த ஆத்ம சொரூபமாக மிஞ்சுபவனே, உலகீன்ற உமாதேவியாரின் தவத்திற்கு ஊதியமாக விளங்குபவனே, நான்கு வேதங்களும் நிலைநாட்டுமுண்மைப் பொருளானவனே பிரதோடகாலமாகிய அன்பர்களின் உபசாந்த நிலையில் ஆநந்த நடம்புரிபவனே, சீவகோடிகளின் நன்மையின் பொருட்டே, சிருட்டி, திதி, சங்காரமென்னு முத்தொழிலையும், அவரவர் வினை யளவுக்கேற்ப தனுகரண புவன போகங்களைத் தந்திரட்சிப்பதில் மூன்று கண் போலப் பாவித்து நடுநிலை நின்று, இயற்றுதியற்று முழுமுதல்வன் யானேயென்பதைத் திரிநேத்திர த்ரியாய் விளங்கி ஸ்திரப்படுத்துபவனே! உம்மையே துதிக்கும் பாக்கியமருள் வீராக (எ-ம்.)

> நித்யம் ஹொஉாவொ ஷணாய வகுயா நாஹிபஸ்ய ஷிதாபயா
>
> வஸ்யஉம்வயஷிடநம்கஸொஷிஹவதஹொவாம்நஜாநேஷிஷெஂ
>
> உஜநாஹுா வாணுவாகபமுதஹூம் பவஉவவஉாஹா
>
> ஹிஹஹொஷ்வ ஹிதெநவாவபஷிவதெ தெ நக்ஷணீயொஃ
>
> ஷ்யாஹஂ ॥ (ருஎ)

(அ-கை) உன்னை சேவிக்குந் திறமை யென்னிடத்தில்லாவிடினும் என் மனத்திலும் நீ அந்தர்யாமியா யிருப்பதனால், என்னை காத்த லுன்கடனெனக் கூறுகிறார்.

வேறு.

57 எப்போது மென்வயிற்றிற் கிரைதேடப் பொருளுடி
முப்போதுந் திரிந்தலைவேன் முக்கண்ண நின்னுமம்
செப்பாது மலைந்தலைவேன் தேவேசீ பசுபதியாய்த்
தப்பாதெப் பொருளுறைதி தமியனையா ளற்கடனே.

(தா-ம்) ஏ, திரிநேத்திரதாரியே! நான் பிறந்தறிந்தது முதல்; தினமும் காலை, மாலை யுச்சியென்னு மூன்று வேளையும், என்னுதர போஷணையின் பொருட்டே, அசுத்த, துக்க, வனித்திய சுபாவங்களையுடைய உலகப் பொருள்களைத்தேடி, அப்பொருள்களிலொன்றேனு மீயாத உலோபர்களையும் நாடி, கஷ்டப்படுவதிலேயே என் காலத்தை எல்லாம் கழித்ததன்றி, அரிய பகுத்தறிவுடன் கூடிய மனிதப்பிறவியையும், மற்றெல்லாப் பொருள்களையும் தந்த மகாதேவனுகிய வுன்பால், எனது நன்றியறிதலாகிய துதியை, ஒருபோதுஞ் செய்தறியேனுயினும், உலக சராசரப் பொருள்களனைத்திலும் அனுசூக்ஷ்மாய் உறையுங்நீர், ஈதெல்லாமறிந்தும் என்னுள்ளுமிருப்பதால், இந்த அறிவிலியும் அவலமாய்ப் போகாவண்ணம் இரட்சித்த லின்றியமையாக் கடமையாம் (எ-ம்.)

ஸகொவாரிஜவாஂயவஃ க்ஷிதிநஹொ வஹ்ராஹ்ஂதெொஉணுஂ
ஹிக்ஷாரெநுஅநமொஅநொவி ஹவதிக்ஷஂகொடி ஸஂஶய உ
ஷஃ।

வெஷ்ஃ॥கிஂநஹவஸ்ஹொவநதஂ கிஂ ஹஂவஷஉதூ
ஷுதவஉஂ வஹ்வநீயசெவபாவதெ ஸாக்ஷாகஷ ஸெஞா
ஹவ ॥ (ருஅ

(அ-கை) தன் மன விருளை நீக்கிப் பிரத்தியட்சமாகும்படி பரசிவனை வேண்டுகின்றனர்.

58 ஒருபகலோன் புவிவான மூடுருவு மிருணீக்கித்
திருவுருவக் காட்சிதாச் சிவமே நீ பல்கோடிப்
பெருஞ்சுடராய்ப் பேரொளியைப் பெற்றுமக விருள்போக்
[கிப்
பருவுருவங் காட்டாதென் ? பரமகுரு வருளுகவே.

(தா-ம்) ஏ, ஞானபார்வே! உலகில் ஒரு சூரியனுதயமாகி யிவ்வுலகினுடன் ஆகாயத்தையுஞ் சூழ்ந்துள்ள இருட் படலங்களையிமைப் போதிற் போக்கி, உலகப்பொருள்களுடன் தனது உருவத்தையும் யாவருமெளிதி லுணருமாறொளிர்தல் உலக பிரசித்தமாம், நீவிர் கோடிக்கணக்கான சூரியப் பிரகாசத்தைப்பெற்ற, மங்களகரமூர்த்தி சிவச்சோதி யென்பது சாஸ்திரப் பிரசித்தமாயிருந்தும், அடியேன் அஞ்ஞானத்தை நீக்கி, உருவம், உருவருவம், அருவம் என்னும் மூச்சொருபங்களையும் முறையே தரிசிப்பிக்கச் செய்யாததற்குக் காரணமியாதோ? தாம் தயாநிதியாயும், பரமகுருவான தக்ஷிணா மூர்த்தியாயுமிருத்தலின், இனித்தாமதமின்றியேனை யுய்விக்கு முபாயமருள்வீராக (எ-ம்.)

ஹம்ஸ: பத்மவநம் ஸமிச்சதி யதா நீலாம்புதம் சாதக:
கோக: கோகநதப்ரியம் ப்ரதிதிநம் சந்த்ரம் சகோரஸ்ததா ।
சேதோ வாஞ்சதி மாமகம் பசுபதே சின்மார்க்கம்ருக்யம் விபோ
கௌரீநாத பவத்பதாப்ஜயுகளம் கைவல்யஸௌக்யப்ரதம் ॥

(அ-கை) எங்கனம் ஹம்ஸம் முதலிய பட்சிகள் கமலத்தை விரும்புமோ, அங்கனமே என் மனம் சிவபதமலரை விரும்புகிறதென்கிறார்.

வேறு.

59 அம்ச சாதக சக்ர சகோர மாகிய பறவைகண் முறையே
சம்சய மின்றித் தாமரை மேகஞ் சவிதா மதிதமை யேய் [வதுபோ
லெம்மகம் வேதத் திலங்கு கேவல மியைகிர்க் குணசுக கன [மாகுஞ்
செம்பொரு ளிலையத் தருநின் கழலைச்சேரவிருப்புற் [றேன் இனமே

(தா-ம்) ஓ, கௌரிக்கேள்வனே! இந்நிலவுலகில் எங்ஙனம் உயர்ந்த பட்சிகளாகிய, அன்னம், தாமரை நிறைந்த தடாகத்தையும், சாதகப் புள், மேகத்தையும், சக்கிரவாகப் பட்சி, சூரியனையும், சகோரப் பறவை, சந்திரனையும், எப்போதுமின்றி யமையாது விரும்பி வாழ்கின்றனவோ, அங்ஙனமே எனதுள்ளமானது, நான்கு வேதங்களெனும் நற்பிரமாணங்களால் நனிபெடுத்தியம்பும் கேவல நிர்க்குண நிர்ம்மல நிர்விகாரிய சுகவடிவத்தன்மையை யருளும் தேவரீரது திருவடித்தாமரைகளையே, மிகுந்த ஆர்வத்துடனவாவி நிற்பதால், அருட்சத்தியுடன் கூடி விளங்கும் அருளாளனாகிய தாம், அடியேனை யாதரித்தாட்கொள்ளல் வேண்டும் (எ-ம்,)

ரோதஸ்தோயஹ்ருத: ச்ரமேண பதிக: ச்சாயாந்தரோர்வ்ருஷ்டித:
பீத: ஸ்வஸ்தக்ருஹம் க்ருஹஸ்தமதிதிர்தீந: ப்ரபும்தார்மிகம்।
தீபம் ஸந்தமஸாகுலச்ச சிகிநம் சீதாவ்ருதஸ்த்வம் ததா
சேத: ஸர்வபயாபஹம் வ்ரஜ ஸுகம் சம்போ: பதாம்போருஹம் (௬௰)

(பொ-ள்) தன் மனத்தைச் சிவன் கழலை நாட நியமிக்கின்றனர்.

வேறு.

60 வெள்ளங் களைப்பு மாரிபசி வறுமை யிருள்குளிர் வாடினர்நேர்
கொள்ளுங் கரைநிழல் வீடில்லான் கொடையான் தீபங் [கொடு தீயை
யெள்ளா தடையு முறையாய்நின் னிருங்கழலைநா [னடைந்துளதால்
தள்ளா தென்பயந் தனைநீக்கிச் சாம்ப சதாசிவ தாங்கு [வையே

(தா-ம்) ஏ, தீனதயாளுவே! உலகில், ஜலத்தில் அமிழ்ந்து தத்தளிப்பவன் அதன் கரையினையும், வெயிலால் களைத்தவன் நிழலையும், மழையிலகப்பட்டு வருந்தியவன், வீட்டையும், பசியால் மெலிந்த அதிதியானவன், இல்லறத்தானையும், வறுமையால் பீடிக்கப்பட்டவன், கொடையாளியையும், இருளிற் சிக்கி யலைபவன் வெளிச்சத்தையும், குளிரால் கஷ்டப்படுபவன் தீயையும், மிக மிக ஆர்வத்துடன் விரும்பியடைதல்போல, நான், அன்பர்கள் விரும்பியவைதரு அனைத்து முதவும் நினதம்புயப் பதத்தைத் தஞ்சமடைந்தேனாகையின், ஆதரிப்பீராக (எ-ம்.)

ஸஜ்ஜாநும் நிஜபீஜஸந்ததிரய ஸ்காந்தோபலம் ஸூசிகா
ஸாத்வீநைஜவிபும் லதா க்ஷிதிருஹம் ஸிந்து: ஸரித்வல்லபம்
ப்ராப்நோதீஹ யதா ததா பசுபதே: பாதாரவிந்தத்வயம்
சேதோவ்ருத்திருபேத்ய திஷ்டதி ஸதா ஸா பக்திரித்யுச்யதே.

(அ-கை) பக்தியின் சுவரூப விலட்சணத்தை விளக்குகின்றார்.

61 தத்தும் வித்துக் கொடியூசி தரங்க நதிக்கற் பிற்காசி
யோத்தே யழிஞ்சில் தருக்காந்த முவர்க்கடல் கணவ னுறு
[மாபோற்
பித்தார் மனமும் நின்பாதப் பீடார் தொடர்பைப் பற்றி
[யுறப்
பத்தி யுற்றே னெனைக்காத்தல் பரமே நினது பரமாமே.

(தா-ம்) ஏ, தீனபந்துவே! ஏறழிஞ்சல் விதையானது, அம்மரத்தைத் தாவி யொட்டிக்கொள்ளுதல் போலவும், கொடிகளானது, மரஞ் செடிகளில் தாமே யேறிப் படர்வது போலவும், ஊசியானது, காந்தக்கல்லைக் கண்டமாத்திரத்தே, தானே யெதிரிட்டேறியடைதல் போலவும், அலைகளை வீசும் நதிகளின், பிரவாகமானது, தானே விரைந்தோடிக் கடலிற் சேர்வது போலவும், தன் கணவனைப்

பிரிந்த பதிவிரதையானவள், திரும்பத்தானே யவனைத் தேடிய டைந்து சந்தோஷிப்பது போலவும், (வஸ்து நிச்சயமுணராது) சதா பரதவித்தலையும் எனது மனமானது, நினது பெருமை மிக்க பங்கயப்பத பக்திக்கே எப்போதும் அவாவி நிற்கின்றதாதலின், நீர் பிரத்தியட்சமாய் இந்த யேழையைக் காப்பாற்றுதல், உனது தலையாய கடமையாம் (எ-ம்.)

௬௦

ஞநஷாஙு—ஹிராதநொதிவ—ஷஂகஂ நெஉஷுஜதஸ்ரநஉநஂ வாதிாஙஂவஉ—வெஷி தெஸூஜறா வஷிதீஷஂஅனிஜாஉஜ நைஃ ||

௦ ரஉாநெக்ஷ ஹஷஹிதெநடுவ வவ—ஷொறக்ஷஂ ஹவஹீ நா வயஷஜெஷிகிவெயூ ஹகிஜநீ ஹதாஹஷகஂற க்ஷதி|| (௬௨)

(அ-கை) தாவானவள் மகனைக்காத்தல் போலப், பக்தியானது அதையுடையவனை காக்கின்றதெனக் கூறுகின்றனர்.

62 அன்பெனு மனைதன் னன்புக்குழவிக் காநந் தக்கண் ணீ [ராட்டி
நின்மல பாவத் துகிலுடுத்தி நேரிய வேதச் சங்குகொடு
நின்மா சரிதப் பாலூட்டி நீறே டக்கக் காப்பிட்டு
மன்னுந் தியான வூஞ்சலுற மகிழ்ந்தெனை வளர்க்க வருளு [தியே

(தா-ம்) ஏ, தயாநிதியே! உலகில் ஒரு தாயானவள், தன் மக னைக் காப்பதுபோல, எனது சிவ பக்தியென்னுந் தாயானவள், அவ வன்பிற்குரிய புத்திரனாகியவெனக்குத் தனதின்பமாகிய கருணை நிறைந்த கண்ணினது நீராகிய ஆநந்த பாஷ்பத்தால் தலை முழுக் காட்டி, நிர்மல பாவமாகிய வஸ்திரத்தை யுடுத்தி, வேதமாகிய சங்கைக்கொண்டு, உனது பெருமை வாய்ந்த மங்களகர சரிதங்க

னாகிய பர்லைப்புகட்டி, இவைகள் சாதனங்களாகிய, விபூதி புருத்தி ராக்கங்களால் இரட்சை செய்வித்து, உனது தாரக மந்திரமான பஞ்சாக்ஷரியான ஊஞ்சலில் கண்வளரும் (தூங்கும்) படி செய்து, மகிட்சியுடனே எனைக்காப்பாற்ற நீர் கருணை புரிவீராக் (எ-ம்;)

ஊரு ஞாவகிஉத வாஉஹா வஸஹவெ ஸஂமஹஷ குஊஅஉ யடெ

ஶஂஹஞஷாஂஜஸ ஶிஷெஅஶஂ வஜஸிவொஃஉஹீஷகா யடெ ॥

விஜெஹீஃஹி தஊஂஸெஹஷஙஜ ஶவெஹாவஷுரா யதெ

ஹஷிஃஷிஂஶஹெராதெஹொ வஶஅெரா ஹவாவஹுஂஸாயதெ ॥

(அ-கை) சிவபக்தியின் பெருமையை வர்ணிக்கின்றார்.

63 இறைச்சி கடித்த தமுதாக வெச்சில் நீர்மஞ் சனமாக
யிறைவ னினது நெற்றிநடு வேய்ந்தது தேய்ந்த பாதும்
[யும்
முறையே யறியாக் கான்வேடன் முத்த ஞகி வீடுற்றான்
அறையின் பக்திக் காகாத வருஞ்செய விலையம் திருளுவை
[யே

(தா-ம்) ஏ, அன்பிற்கெளிய! தாம் பக்தர்களிடத்தில் விரும்புவ வதில்லைஅன்போன்றேபிரதானமாமென்பதறிந்தேன் எதனாலெனின்? முன், ஈசுவரபக்தி செய்யுமுறையே யின்னதென்றறியாத, ஒரு காட்டில் வாழும் வேடன் (கண்ணப்பனது) காற் செருப்பானது, உனது இரண்டு கண்களின் இடையே இலக்காய்ப்பொருந்தி விளங்குபது; அவன் கடித்துத் தின்ற மிச்சமான எச்சில் மாமிசத் துண்டு, உமக்கு இனிய அமுதாகியது; அவன் வாயிலிருந்து விழுந்த வெச்சிற்றண்ணீரும் உமக்குப் புனிதமாகிய அபிஷேக

தீர்த்தமாகியது, இத்தகைய இழிவுச்செயல்களைப் புரிந்த அவனும் உமது அருகிலுறும் ஸாமீப்ய பதவியைப் பெற்ற மேலான வுன்பக்தனானதுமன்றி, முடிவில் அந்தமிலின்ப வடிவ மோக்ஷத்தையும் பெற்றான், ஆகவே அவ்வித மர்க்கட பக்தி யென்னிடத்திராவிடினும், தாங்கள் மார்ச்சால நியாயம் பற்றியாவது என்னையாட்கொள்ளக் கிருபை புரிதல் வேண்டும் (எ-ம்.)

வக்ஷஸ்தாடனமந்தகஸ்ய கடினாபஸ்மார ஸம்மர்த்தனம்
பூப்ருத்பர்யடனம் நமத்ஸுரசிர: கோடீரஸங்கர்ஷணம் ।
கர்மேதம் ம்ருதுலஸ்ய தாவகபதத்வந்த்வஸ்ய கௌரீபதே
மச்சேதோமணிபாதுகாவிஹரணம் சம்போ ஸதாங்கீகுரு ॥

(அ-கை) சிவனே, நீர் இயமனை யுதைத்தல் முதலிய காரியங்களை செய்யவேண்டியிருத்தலின், என் மனமாகிய பாதரட்சையை அணிவாயாக எனக் கூறுகின்றார்.

64 இயமன் மார்பிற் றனுதைத்தே யிணையி லகவிரு ளதை [நீக்கிச்
சயவென வேத்து மமரர்முடி தாங்கி மலையிற் சஞ்சரிக்கும்
நயமிகு பாத மலரிற்கு நாயேன் மனமாம் பாதுகையைத்
தயவா யேற்றுக் காத்தருள்க தருண மிதுவே தற்பரனே

(தா-ம்) ஏ, காலகாலனே, நீர் மார்க்கண்டேய முனிவற்காக, இயமனுடைய மார்பிலெட்டியுதைத்து அவனஞ்ஞான வகங்காரத்தையழித்தும், நிதமும் போற்றி வணங்கும் தேவர் குழாங்களின் சிரங்கள் பட்டுத் தழும்பேறியதும், திருக்கைலையங்கிரியில் சதா சஞ்சரித்தலால் சிவப்பேறியதுமாகிய, தமதருமைத் திருவடிகளுக்கு நேர்ந்துள்ள சிரமம், இனி ஏற்படாவண்ணம், அடியேனது மனமாகிய பாதரட்சையை நிஷ்காமியமாக சமர்ப்பிக்கின்றேன், ஆகவின் நனைய செய்து விரைந்தேற்று அதைத் தரித்துச் சுகமுறப்

பிரார்த்திக்கின்றனன், இதனால் நான் கிருதார்த்தனாவேன்; அதற் கேற்றபிறவியிதுவேயாகும் (எ-ம்.)

வக்ஷஸ்ஸர்வ நபஸ்கயாவிஅஹிதா வெவஸ்யதா நிஜ-ஶாஃ
கொடிமொஜஹுறஸ்தீவக்ஷிகா நிராஜநம் கூஹுதெ ।
ஶுஷ்ஃாஉ-க்ஷிவய-ஐஸநொதிநிஷ்ஆதா ஸ்ரெஷம்ஹவா நீவதெ
யவெஜ்தஸ்வ வாஉவஜுஹஜநம் தவெஶூஹகிக-ஶஹஹு ॥ கூடு

(அ-கை) பரசிவன் பாதங்களைச் சேவிப்பவர்க்கு எல்லாப் பயனுமுண்டாமெனக் கூறுகிறார்.

65 எவன் மனம் நினது பதச்சேவை யெய்ந்தெப் போதும் [நிலைத்திடுமோ
அவனைக் கண்டு மிகப்பயந்தே யந்தக னோடி யொளித்திடு [வன்
பவமில் வானோர் வந்திப்பர் பரமா முத்திக் காந்தையுமே
சிவமுற வணைந்து சேர்ந்திடுவள் செய்யும் பக்திக் கீடிலையே

(தா-ம்) ஏ, பரமேட்டி! எந்த அன்பனுடைய மனமானது தேவரீரது திருவடித்தரிசனத்தை யெப்போதும் நாடி நிற்கின்றதோ அந்த பக்தனுடைய செய்லைக்கண்டு, அவன்பால் எதிர் நிற்கவும் அச்சமுடையவனாய் மறலியுமோடி மறைகின்றான்; குற்றமற்ற தேவர்களும் அவன்பால் ஏகி, மகிட்சியுடன் வணங்கிச் செல்வர்; முத்தியாகிய இலட்சுமியும் அவன் மங்களகரமாகவே விளங்க அவனைச் சூழ்ந்தெக்காலும் நீங்காது வீற்றிருப்பள்; என்றால் உனது பக்தியின் பெருமைக்கீடாக எதைச் சொல்லமுடியும்? வேறொன்றுமின்றாகவே, அந்த நிலையை யடியேனும் கைப்பற்றிக் கடைத்தேறக் கடாட்சிப்பாயாக (எ-ம்.)

க்ரீடார்த்தம் ஸ்ருஜஸி ப்ரபஞ்ச மகிலம் க்ரீடாம்ருகாஸ்தே ஜநா
யத்கர்மாசரிதம் மயா ச பவத: ப்ரீத்யை பவத்யேவ தத் ।
ஶம்போ ஸ்வஸ்ய குதூஹலஸ்ய கரணம் மச்சேஷ்டிதம் நிஶ்சிதம்
தஸ்மான் மாமகரக்ஷணம் பஶுபதே கர்தவ்யமேவ த்வயா ॥ (௬௬)

(அ-கை) தன்னைக்காத்தல் வேண்டுமென்று சிவனைத் துதிக்கின்றனர்.

66 சிவனே! சர்வ வுலகுயிருஞ் சிறந்த தொருவிளை யாட்டத[ஞல்
பவமுறு பலவும் லீலார்த்த பாவக மிருக மாமென்பர்
நவமுற நிகழ்த்தும் வினையெல்லாம் நாத நினதன் பிற்கா[கும்
சுவவினை யிலையா லென்முன் நீ தோன்றிக் காத்தற் கடமை[யதே.

(தா-ம்) ஏ, சிவபரமே! எல்லா வுலகங்களும் அவற்றிலுள்ள உயிரில்லனவு முள்ளனவுமாயொளிரும் சராசரப் பொருள்களனைத்தும் அவைகளின் செயலும், தங்களது திருவிளையாடல்களேயாம்; அந்தந்த வுயிர்த்தொகுதிகளுக்குத் தமக்கென ஒரு செயலுமில்லா திருக்க, அவர்களுக்கு தீவினையிருக்கச் சிறிதும் நியாயமில்லை யன்றோ? ஆகவே என்மீது பிழையேற்றித் திரியயினி யிடமில்லை, ஆதலின், என் முன் தோன்றி யென்னைக்காத்தல் உமது கடமையேயாம் (எ-ம்)

பஹுவிதபரிதோஷபாஷ்பபூர
ஸ்புடபுலகாங்கிதசாருபோகபூமிம் ।
சிரபத ஸமுகாங்க்ஷிஸேவ்யமாநாம்
பரமஸதாஶிவபாவநாம் ப்ரபத்யே ॥ (௬௭)

(அ-கை) ஈசுவர் இயானத்தையே தஞ்சமாக வடைகின்றேன் என்க் கூறுகிறார்.

67 இன்பக் கண்ணீ ரதுபெருக யினைந்த பக்திக் கெல்லைய [காய்த்
தன்பிற் கயிலை யிச்சிக்குந் தூய சதாசிவ தியானத்தை
என்புருகும்வகை யதையுற்றே யானுந் தஞ்சமடைகின்[றால்.
அன்பின் வடிவே பரசிவமே யடைதலுன்னை நிச்சயமே.

(தா-ம்) ஏ, பரசிவமே! பொருந்திய பக்தியின் பயனுக்கோர் வரம்பாயுள்ளதும், ஆநந்தத்தின் பெருக்கமே தனது வடிவமாயுள்ளது மான திருக்கயிலாயத்தையே, இருப்பிடமாகவுடைய ஒப்புயர் வற்ற நினது (சதாசிவ) வடிவத்தையே தியானித்து எனதுடலம் பூரித்து என்பு நெக்குருகி, யுரோமஞ் சிலிர்ப்ப, ஆநந்த வருவி சொரிய அவ்வழகிய திருப்பாதத்திடத்தே, அடைக்கலம் புகுந் துள்ளேனாதலின், அன்பே திருமேனியாக வமர்ந்துள்ள வருட்பெ ருங்கடலே! உன்னில் இரண்டறக் கலப்பதாகிய இந்தமிலின் பத்தை யடைந்து, அதுவாய் விளங்கும் நிலையையானடைதல் நிச்சயமாம் (எ-ம்.)

சுபிதஉாஉஜதஃ உாஹா உ-உாஹஞ்ஃ
விஉமுஹவதஉமொஷஉாவஸஞ்ஃ ।
ஸீஉயவஶாவதெஸாவாணூவாகாஃ
உஉ வஶிவாமுய ஹக்ஷியெநாஎகாழ ॥ (கூஅ)

(அ-கை) பசிவையுடையவன் மேய்ப்பவனைத் தேடுதல்போலத், தன் னிடமுள்ள சிவபக்தியென்னும் பசுவைக்காக்கப், பசுபதியை வேண்டுகின்றனர்.

68 அருளுருவாகிய பரசிவமே யாநந் தாமுத மளவின்றித்
தருகுவ தாயும் நின்பாதத் தஞ்சத் தொழுவத் தடைபட்
[டும்
பெருகும் பயன்பல பெய்தற்குப் பின்வாங் காதுறை பக்தி
[யெனு
வருமென் பாகும் பசுவதனை வள்ளால் காக்க வேண்டுவனே

(தா-ம்) வீ, பசுபதியே ! திருவருளே திருமேனியாகவுடைய தமது திவ்விய சமுகத்தில் அடியேன் பிரார்த்திப்பது யாதெனில்? ஆநந்தமாகிய அமிர்தத்தை வரையறையின்றிப் பொழிவதும், நின் திருப்பாதமாகிய கொட்டிலில் அடைக்கலமாகக் கட்டுப்பட்டுள்ளதும், பல அரியபயன்களை யளிப்பதற்குப்பின்னிடையாததும், எனது நிஷ்காமிய கர்மத்தின் பயனாக யானடைந்துள்ளதுமாகிய, எனது பேரன்பாகிய பசுவைத் தமக்கு அர்ப்பணம் செய்கின்றேன், வேண்டினர்க்கு விரும்பிய விதமே வரையின்றி விரைந்தருளும் வள்ளலாகிய தாம், பிரீதியுடனதையேற்றுக் காப்பாற்றக் கடாக்ஷித்தல் வேண்டும் (எ-ம்)

ஜஜதா வஸந்தா கஸ்ம்கித்ர்
ஸுடீமுஅரகவ்னு நாஸ்திஉபிதெவ
ஸஷ்டியதிர்ாஜஉளளெ
ஷவஷாஹரணஸ்யநாஷ்லி கிம்வாத்ருழ ‖ (௬௯)

(அ-கை) பல. தோஷங்களையுடைய சந்திரனையாதரித்தருளியது போலவே, என்னையுமாட்கொள்ளல் வேண்டுமென மன்றாடிக் கேட்கின்றனர்.

69 சந்திர சேகர சந்திரன்முன் சடத்வங் கோணல் பசுத்தன்
[மை
முந்து களங்க முற்றிருந்தும் முடிமீ தணிந்தா யடியேனன்
பிந்திய னவற்றி லலைதன்றிப் பெரிது முடையே னயிடி
[னும்
சுந்தர வென்னை யாட்கொள்ளத் தோன்றுந் தடையென்
[செரில்லுவையே.

(தா-ம்) ஏ, சந்திரசேகரனே! யாவைக்கு மெவர்க்கு மெப்போதுந் தலைவனே, நீர், அடியாரது குற்றங்களைப் பொருட்படுத்தாதாட் கொள்ளுங்குணப்பெருங் குன்றென்பதை கூர்ந்தறிந்தேன், எங்கன மெனில்? சந்திரனனவன் தன்னைத்தானே காத்துக்கொள்ளவியலாத சடத்தன்மையையும், தனக்கொரு தலைவனை வேண்டும் பசுத் தன்மையையும், தேய்ந்து வளர்ந்து சஞ்சரித்தலால் கோணல், குறைவுத்தன்மைகளையும், குருபத்னி கமனம், ஷேதகத்தன்மை யிவைகளால் களங்கத் தன்மையையும், உடைய, அதிகக்குற்ற முடையவனயிருந்தும், அவன் வேண்டியதற்கிரங்கித் தமது சிரசில் தரித்துள்ளீர், அவ்வித குறைவுபாடுகளில் குறைந்த தன்மையை யுடையவனயிநக்கு மடியேனைமட்டும், தம்மைத் தஞ்சமடைந் திருந்தும் ஆதரியாததென்? அல்லது அவனைவிட யான் அதிகக் குற்றமுடையவனெனக் கருதப்படின் நீர், சிரசில் சந்திரனுடனய் விளங்குவதே அடியாரைக் காப்பதில் தலையாயவனுனென யாவருக் கும் அறிவிப்பதாயிருப்பதனுல், அழகிய குணத்தன்மை வாய்ந்த கிருபாநிதியாகிய தாம், பிரத்தியட்சமாய்த் தரிசனந் தந்து எளி யேனையு மாதரித்தருள்வது உமது கடனகும் (எ-டு.)

ஸரஹஸிரஹஸி ஸூதம்ஸ்ரூபாஜ்யா
ஸரிவஸி தாம்ஸாரு ஹ: ப்ரஸஹ்ஸஞ்திஹ:।
க்ஷமணித ஹஞ்ஜாயக: ப்ரூஹா ஹேஹு
ஷிமஹயிகொ ஹ்ரூதிராஜஸேவஸோஷி ॥ (எ௦)

(அ-கை) சிவன் எப்பொழுதும் தன் இருதயத்திலேயே இருக்கும் காரணத்தால் அவனைப் பூசித்தல் சுலபமாமென்கிறார்.

70 அகில புவன மாக்கியதற் கதிப ளுகி மதிசூடும்
மகிப னொருவ னென்மனத்தே மன்னி யுளதா லகம்புற [மும்
புகீனு மவனைப் புந்தியினற் பிணைத்துத் தொண்டு புரிந்தி [டவே
தகுதி யுடைய னுயினனுற் றண்ணருள் பெறவோர் தடை [யிலையே

(தா-ம்) எல்லாவுலகுயிர்களையும் படைத்து, அதன் விழுமிய தலைவனாய் நிற்கும் பேரறிவினன், யானேயென்பதை யுலகோரறியச் சிரத்தில் மதியைச்சூடிய சிவபெருமானவன், என மனத்தில் இமைப்போதும் நீங்காதெழுந்தருளி யிருக்கின்றுனுதலின், அவனுலகுயிர்களினுள்ளும் புறம்புமாய் உருவின்றி யொளியாதொளித்திருப்பினும், அவன் அறிவாகாரன் என்பதைத், தத்துவ விசாரத்தலாராய்ந்தறிந்த யான், அகமமதையற்ற எனதறிவாகிய கயிற்றால், அறிவிற்கறிவாய் நிற்குமவனைச் (சகதேவனைப்போல) ப் பிணித்து, அப்பரமபுருடனின் பாதார விந்தத்தில் பக்தித் தொண்டாற்றும் புத்தி சாமர்த்தியம் பெற்றுள்ளேனுதலின், அவனது கிருபையைப் பெற்றுக்கிருதார்த்தன் ஆதற்கு, அடியேனுக்கு, எப்போதும், எவ்விதத்தும், யாதொரு சந்தேகமுமில்லையேயில்லை (எ-ம்).

ஞூர-ஐஹக்தி ம-ணக-ஂதித ஹாவஅாவய-
ெகுஸ்ரீவஹாரணவாணூமெண ஈவீாமெவெஃ ।
நீஜி-த்யுகிஷிஷரிவ-ஏறு விஜயீஸ-யீெஉ
ஹாதஉாவஹதிஸ-ஹீர ஈாஜறுகூீ ॥ (எக)

(அ-கை) சிவபத்தியினால் சிவசாரூப்ய முத்தியை அடைதலாகு மெனக் கூறுகின்றனர்.

71 பக்தி யென்னும் நாணதனாற், பணிந்த புந்தி வில்லேற்றிச்
சித்தி யாகுஞ் சிவத்தியானச் சிந்தனை யாகுங் கணைபூட்டி
அத்திசெய்து பவப்பகையை யாநந் தமதாம் வடிவுற்றோர்
முத்தி யெனுஞ்சா ரூபபதம் முனைவர் சிவமே மொழிதங்
[கால்

(தா-ம்) ஏ, சர்வேசா! அன்பாகும் கயிற்றை, எவர்கள், அறிவாகிய வில்லிற் பூட்டி, சிவநாமஎண்ணங்களாகிய அம்புத்திரள்களை, சிவோ கம்பாவனையாகிய, கரத்தினாலெய்து, தீவினைகளாகிய, பகைவர்களை வென்று, ஆநந்தமாகிய, சித்த ஜயத்தையடைந்து விளங்குகின்றார்களோ? அவரே, முத்தியாகிய, சிவத்தன்மையை அடைந்து, பேரானந்த வடிவமாக விளங்குபவராவர், அத்தகைய நிலையை, எளியேற்கு மருளிக்காப்பாய் (எ-ம்.)

யஸ்ராநஂஜநெந ஸஉவெக்ஷ்ஷ தஉஃ ஷூதெஸஂ
ஹிக்ஷாஉஹாஸஷ்ஹிரீஷூஷ நாஉஉணெஃ
திவ்ஷாஶிஷ்தஂ ஹாஜமஹாஷண உஷஹஂதி
யெவாஷ வஉிஹதெ ஶிவதெ கூதாயஃ ॥(எஉ)

(அ-கை) சிவனடியாரைப் புகழ்கின்றனர்.

72 தியானமென்னு மஞ்சனத்தாற் சிவபதப் புதையல் நனி
[கண்டு
வியாபக நின்னா மப்பலியால் விளம்பஞ் ஞானம் பேதித்து
தயாபர நின்றுளிப்பிறவி தனிலடை கின்றா ரவர்தாமே
வியாகுல மின்றிப் பெரும்பயனும், வீட்டை யுற்றுக் களி
[த்திடுவர்

(தா-ம்) ஏ, சிவமே! எவர்கள் நினது, மூர்த்த, அமூர்த்தகியா னென்னும், பேதவபேத ஞானங்களாகிய மையினால், மங்களகரப் பொருள் புதையலை, உண்மை ஆராய்ச்சி மூலம் இடம் கண்டு, யாவற்றிலும், எப்போதும், எக்காலும், நீங்காது நிறைந்துறையும், நினது, சகுண, நிர்க்குண அநந்த நாமோச்சாரணமென்னும் பூஜா திரவியமாகிய, பலியைக்கொடுத்து, அதை மறைத்துக்கொண்டிருக்கிற அஞ்ஞானமாகிய மறைப்பை நீக்கி, புனது திருப்பாத பத்மமென்னும், அப்புதையலைபு மதிலுள்ள தனத்தையும், பெறுதற்கரிய மனிதப்பிறவியை யடைந்துள்ள விச்சமயத்தே, நன்கே யடைகின்றார்களோ? அவர்கள் சகல சம்பத்துடனே, பிறவிப்பெரும் பயனாகிய, சர்வ துக்க நிவர்த்தி பரமானந்தப் பிராப்தியாகிய முத்தி யின்பத்தையும் அடைந்தவராவர் என்பது சுருதி சம்மதமாகலின், அடியேனுமிந்த நிலையை யடைய அருள்செய்வீராக (எ-ம்.)

𑌭𑍂𑌦𑌾𑌰𑌤𑌾𑌮𑍁𑌦𑌵𑌹𑌦𑍍𑌯𑌦𑌪𑍇𑌕𑍍𑌷𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀
𑌭𑍂𑌦𑌾𑌰 𑌏𑌵 𑌕𑌿𑌮𑌤𑌸𑍍𑌸𑍁𑌮𑌤𑍇 𑌲𑌭𑌸𑍍𑌵 ।
𑌕𑍇𑌦𑌾𑌰𑌮𑌾𑌕𑌲𑌿𑌤𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌮𑌹𑍌𑌷𑌧𑍀𑌨𑌾𑌂
𑌪𑌾𑌦𑌾𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑌭𑌜𑌨𑌂 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 ॥ (௭௩)

(அ-கை) சிவபாத சேவையின் பெருமையைக் கூறுகின்றனர்.

73 திருமா லேன வடிவாகித் திருவடி காண முயன்றிலவ
பெருமை யனடியி னிருப்புகழைப் பேணி மோக்க மூலிகை [கள்
வருவா யிடமாய் மிளிர்கின்ற மாதேவன்றன் வீரகழலே
இருமா நிதிய மெனமனமே யிறைஞ்சித் துதியுனக் கிடிலை [யே

(தா-ம்) ஏ, மனமே ! சிவபெருமானது திருவடிகளின் பெருமை யென்னே ! முன் விஷ்ணு மூர்த்தியும் வன்மையுடைய வராஹாவ தாரங்கொண்டு தேடியும் காண முடியாது தயங்கி நின்றாரெனில் ஏனையர் எம்மாத்திரம் ? அவ்வடியின் பெருமையை யாரே அறை தற்குரியர் ? அந்தவழகிய திருப்பாதமே, நமது பிறவிப் பெரும் பயனுயுள்ள பேரின்ப நிலையை யடைதற்குரிய மோக்க மூலிகைகள் உற்பத்தியாகுமிடமுமாம் ; எனவே அம்மகாதேவனது மாட்சிமை மிக்க மலரடிகளே நமக்குரிய ஐஸ்வரியமாமெனவறிந்து, நீ எப்போ தும் இடைவிடாதேத்திப் போற்றி யீடேறுவாயாக, இந்த உதவி செய்தற்கு நீயே ஏற்ற துணையாகும், இம்மாத்திரம் செய்வாயானால் இனி எனக்கு நிகராவார் எங்குமெவருமில்லை (எ-ம்)

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ (௭௩)

(அ-கை) தன் மனமாம் பெட்டியிலுள்ள துர்வாசனைகளை நீக்கி சிவபாதமானது சுபவாசனையால் நிரப்பப்படட்டுமெனக் கூறு கின்றனர்.

74 திகம்பரனை சாம்பசிவன் திருவடி பத்ம மலரெந்தன்
அகமெனும் பேழை நிறைத்துள்ள ஐவகைத் துக்கத் தொ [குதியெனுஞ்
சகமிகு நாற்ற மதைப்போக்கச் சற்சன வாசப் பரிமளமார்
சுகந்த மிகவே செய்திடுவை துணைத்தா டொழுதேன் சுந் [தரனே

(தா-ம்) திக்குகள் நான்கையுமே ஆடையாகவுடைய விராட் புருட னாகிய சிவபெருமானே ! என் சிந்தையாகிய பெட்டியில் நிறைந்

ளுள்ள ஐம்புலன்களால் விளையும், விஷய வாசனையாகிய (உலக) வாசனை) துர்காற்றத்தைப் போக்கிச் சற்குணவாசமாகிய, நினதன்பர்களின் கூட்டத்தைச் சாரும் பரிமள மிக்க சுபவாசனையை யுடையச்செய்வாயாக, இந்த நிலை யொன்றே இனியானடைய வேண்டிய எல்லாப் பெரும் பேற்றிற்குங் காரணமாய் நின்றுதவு மாதலின் இப்பேற்றை எனக்கருளல் வேண்டும் (எ-ம்)

கல்யாணிநம் ஸரஸசித்ரகதிம் ஸவேகம்
ஸர்வேங்கிதஜ்ஞமநகம் த்ருவலக்ஷணாட்யம் ।
சேதஸ்துரங்கமதிருஹ்ய சர ஸ்மராரே
நேதஸ்ஸமஸ்தஜகதாம் வ்ருஷபாதிரூட ॥ (எரு)

(அ-கை) வேகமிக்க மனமாகிற குதிரையை வாகனமாய்க் கொள்ளும்படி பரசிவனைப் பிரார்த்திக்கின்றனர்.

75 அழகசீர் குணங்க ளமைந்ததுவு மநந்த விதமாம் நடை [யார்ந்து
முழலா வேகம் மிகப்பூண்டு முறுபொரு ளனைத்து மூடுரு [விப்
பழகி யறிந்தும் நிர்த்தோட பலசுப விலட்சண மிகவுற்றுங்
குழகா குழையென் மனவாசி கொண்டு சரிப்பாய் விடை [யோனே

(தா-ம்) ஏ, இடபாரூடனே! தாமாரோகணிக்கு மேற்கீழுவிட, மேலான குணங்களையும், அதியற்புத விசித்திர நடையையுமுடையதாய், ஆடுவதிலும், ஓடுவதிலும், சுற்றுவதிலும், சுழலுவதிலும் மிக வேகமான அபார சாமர்த்தியமுடையதும், சர்வ சாதாரணமாய் எவ்வுலகத்து மிமைப்போதிலெளிதே சென்றுவரப் பழகியுள்ளதும், பல சுபவிலட்சண சுழிகளார்ந்ததும், சதா தம்மையே அடைய விரும்புவதுமாகிய, எனது மனமாகிய குதிரையை

தங்கட்கு சமர்ப்பித்துள்ளேன்; நீர் தயை செய்தேற்றுச் சஞ்சரிப்பீராக, அங்கனம் செய்வீராணல் உமக்கும் எமக்கும் ஒப்பற்ற நலனுண்டாகும் (எ-ம்.)

ஸக்தேஉ-ரெஹெஸ வஉவ—ஸூஉாவஸஞீ
காஉஂஸிநீவ க—ஸ—தெ வஸிதொஷவ்ஷ-ஜ் ।
ஸஂவ-ஸிதொ ஹவதியஸ்ய. உதஸ்டாக
ஸூஜநஸஸ்யஉவிஸஂ ஸஹெஜுநாநுஜ ॥ (எசு)

(அ-கை) ஜன்மஸாபல்யத்தை மற்றொரு விதமாகக் கூறுகின்றார்.

76 எந்தத் தொண்டன் பரபத்தி யிறைவன் பதமாம் வானத் [தில்
முந்திப் பரவி மேகமதாய் முனைந்தா நந்த மழைபெய்துச்
சிந்தை யென்னுந் தடனிரப்பச் சீரிய செணமப் பயிர் தழைத் [தே
தொந்தம தற்றுப் பயனளிக்குந் துயவ யேனை பயனில [வே

(தா-ம்) புனிதனே! எந்தத் தொண்டனது சிறந்த பக்தியானது, நினது சீர்பாதமாகிய ஆகாயத்தில் முதலில் பரவி மேகமாய் உருப்பெற்று, ஞானமாகிய மின்னொளி வீசி, தீவினையானது பொடிபடயிடித்து, ஆநந்தமாகிய மழையை வருஷித்துத், தன் சிந்தையாகிய தடாகத்தை நிரப்பிக்கொள்ளுமோ, அந்தப்பரம பக்தனுடைய், பிறவியாகிய பயிரானது செழித்துப், பிறப்பிறப்பென்னும் தொடர்பற்ற முத்தியாகிய சிவபோகத்தை அடையச்செய்யும், ஆகவே முக்திக்கு, யீந்த பக்தியொன்றே நேர் சாதனமாம், மற்றெல்லாச்சாதனங்களும் பரம்பரா சாதனங்களேயாகும், எனவேஇந்நிலையை எனக்கருளாய் (எ-ம்.)

ஸ்வாநந்தலகரி grantha verse (ஏஎ)

(அ-கை) பின் இரண்டு பாக்களாலும் பலவிதமாய்த் தன்புறும் தன் புத்தியைத் தேற்றும்படி கூறுகின்றனர்.

77 பரமே நின்றுட் பற்றதனுற் பத்திப் புரியென் புத்தியது
கிரமப் பதியைப் பிரிநாரி கசிந்து வேறு கருதாள்போல்
நிரலே தினமுஞ் சிவமனுவாம் நிமல ஜபத்தால் மோகித்தே
திரமாய்த் துதித்தல் தியானித்தல் செய்தே கழிக்கு மதை
[யருளாய்

(கா-ம்) ஏ, பரமேசா! தம் திருவடியில், அன்பாற் கட்டுப்பட்டுள்ள எனது சிந்தையானது, கற்பு மிக்குடைய ஒரு பெண்மணியானவள் தன காந்தனைப் பிரிந்த காலத்தும், பிறிதொரு வஸ்துவிலும் தன் மனத்தைச் செலுத்தாது அவனையே நாடித் தேடிக் கூடிக் களிப்பதிலேயே கருதுவளோ, அங்ஙனமே, தம்மைத் தரிசிக்குங்காலமளவும், நாடோறும் தமது தாரகமந்திரமாகிய ஸ்ரீபஞ்சாக்கர ஜெபத்திலேயே பூரணமாய்ப் பதிந்து, வாக்கால் துதித்தும், மனதால் தியானித்தும், காலமனைத்தையும் கழிக்குமேயன்றி, உலகில் வேறொரு விஷய சுகத்தையும் விரும்பியுழலாது, இந்த இடசித்தமொன்றே, மேல் எல்லாப் பயனையுமளிக்குமாதலின், இந்த நிலையில் பிறழாதிருக்க அருள் புரிவாய் (எ-ம்.)

grantha verse (எஅ)

(அ-கை) ஷெடி

78 ஈச நினதிரு வடிப்பூசை யியற்றக் கட்டுப் பட்டதுடன்
நேச மனதை யாச்ரயித்து நேர்மை வணக்க முடையபிர
காச மதியை மதிசூடி கருணை காட்டி ஞானோப
தேச மதனாற் புதுமணப்பெண் செய்கை யொத்தா திரிப்
[பரியே

(தா-ம்) ஏ, சோமசுந்தரனே! உமது திருவடிப்பூசையை அடியேனியற்ற உரிமைபாராட்டி, என்னுடைய மனதை அதற்கு உற்ற துணையாகக் கொண்டு, கிரமப்படி வணக்கம், துதி, தியானாதிகள் செய்துவருவதாகிய எனது சிறந்த புத்திக்கு, அன்பரைக் காப்பதில் தலைமையாய் விளங்கும் தாங்கள் கிருபைசெய்து, தமது தாரகமந்திரமாகிய பஞ்சாக்கர மந்திர ஞானோபதேசம் புரிவதுடன், அடியேனந்த நிலையிலிருந்து நழுவினும், ஒரு புதிய கலியாணப்பெண்ணின் செயலானது புகுந்த வீட்டார்க்கு விரோதமாயிருப்பினும், அவ்வீட்டாரனைவரும், முதலில் விரோதம் பாராட்டாது அவள்பாலனைவரும் ஒருமிக்க பொறுமை காட்டி, அவளுக்கிதோபதேசம் புரிந்து சீர்திருத்திக் கொள்வதுபோல, தவறும் எனதறிவையும் தாங்கள் திருத்திச் சரிப்படுத்தி யாட்கொள்ளல் வேண்டும் (எ-ம்.)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]|| (எக)

(அ-ங்க) சிவபெருமான் திருவடிப் பிரத்தியட்சத்தை கோருகின்றனர்.

79 யோகிய ரிதயப் பதுமதள முறையும் நினது பதமலரே
யேகி யேமன் தடமார்பை யெட்டி யுதைத்த தெங்ஙனமோ
சோகித் தேனுன் அப்பதத்தைத் தொட்டு வருடித் துயர் [மாற்றத்
தேகக் கண்ணிற் கிலக்காவாய் சிவமே யெங்கும் பூரணனே

(கா-ம்) வ், காலகாலனே! நினது சிவஞானம் கைவரப் பெற்ற யோகியர்களுடைய இருதய கமலமான தாமரைப் புட்பத்தில் நீங்காது வீற்றிருக்கும், உனது அழகிய, பஞ்சுமஞ்சும் மென்மை வாய்ந்த, திருவடியானது, வன்மையும் வலிமையும் மிக்கவுடைய, யமனது மனக்கதவுமுடைந்துபோம்படி எதிர் நின்றெட்டியுதைத்ததினால் எப்படி வருந்தியதோவறியேன்; அதைக்கேட்டமாத்தி ரத்திலேயே மிகத்கவலுகின்றேன், ஆகவே தேவரீரது அத்தகைய திருப்பாதமலரை மெதுவாகத் தொட்டுப் பக்குவமாய் வருடி துன்பந்தீர வுபசரித்துச் சந்தோஷிக்கக் கருதுகின்றேன், ஆகவே அடியேன்து கருத்தறிந்து உதவுவான் வேண்டித் தாம், பிரத்தி யட்சமாக வேண்டுகிறேன், எங்கும் பரிபூரணனுயிலகு முனக்கு இதொரு கஷ்டமுமிராதாகையால், தோன்றி அருள் புரிதல் வேண்டும் (எ-ம்.)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(அ-கை) வேறொரு விதமாய்த் துதிக்கின்றனர்.

80 இறையே நீமுன் னிவ்வெளியே னெழுத லுணர்ந்தென் கன் [மனத்தி
லுறைதல் வேண்டு மெனக் கருணை யுடையோனாகிக் கயி [லைதனில்
முறையே பாதப் பரிசயத்தை முடித்தாய் கொல்லோ வில் [லையெனில்
நிறையு மலர்ப்பஞ் சணையாதி நோ மிடங்க ணீத்ததென் [னே

(தா-ம்) ஏ, ஜகதீசனே! நீவிர் "கன்மனத்தையுடைய எளியே னொருவன் இனி இவ்வுலகில் பிறக்கப்போகிறான், அவன் மனத்திலும் நாமுறையவேண்டும்" என்றறிந்துதானோ, கருணாநிதியாகிய தாங்கள், கரடுமுரடான கற் குன்றுகளை யுடைய கைலையங்கிரியின் கண்ணே சஞ்சரித்துத் தமது திருப்பாதத்தைப் பழக்கிக் கொண்டீர்போலும், இல்லையெனில், ஏனைய, மேன்மையையும், மிருது தன்மையையும் வாய்ந்த, புஷ்பவணையாதிய வாசங்களைப்பொருந்தி யுறையாது அவற்றை விட்டுவிடக் காரணமென்ன? ஆகவே எனது இருதய வாசத்தைப் புரிந்து எளியனை யீடேற்றுவாயாக (எ-ம்.)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

(அ-கை) சீவன் முக்திவிலட்சணங் கூறுகின்றார்.

81 உந்தன் மலரடி தொழுவதிலு மூரித்தாந் தியானசமாதி [யிலும்
வந்தன முவந்தே புரிவதிலும் வண்சிவ சரிதங் கேட்பதி (லும்
முந்தித் துதித்தற் றரிசித்தன் முறைபட சிலகால் முடிக் [குந்தன்
சிந்தை பதிந்திட நிற்பவனே சீவன் முக்தன் செப்பிடினே

(தூ-ம்) ஏ, துரியப்பொருளே ! சுருங்கக் கூறின், எவன் தனது மனோவாக்குக் காயங்களாகிய திரிகரணங்களும் ஒருங்கே பொருந்த, முறையே, காயத்தால் வந்தித்தல், பூசித்தல், சிரவணித்தல் தரிசித்தலும், வாக்கால் துதித்தல், சபித்தலும், மனத்தால் தியானித்தலும், விதிப்படி சிற்சில காலம் புரிந்து வருகின்றானோ, அவனே, பின், தன்மனம் அச்சஞ்சலமாய் நிற்கும் சவிகற்ப சமாதியில் நிலைத்துப், பின் அதன் பயனாயுள்ள அபேத ஞான வாயிலாக் மனமிறந்த நிலையாகிய நிர்விகற்ப சமாதியெனுஞ் சிவராஜயோக சமாதி சித்திக்கப்பெற்றுச் சிவமாய் விளங்கி, இவ்வுலகின்கண்ணே, சீவதசையோடிருக்குங் காலத்திலேயே, சீவன் முக்தனாக விளங்குவன் என்பது சுருதி சம்மதமாதலின், அத்தகைய உயரிய நிலையை யடியேனுமடைந்திட அனுக்கிரகிப்பாயாக (எ-ம்.)

𑌬𑌾𑌣𑌤𑍍𑌵𑌂 𑌵𑍃𑌷𑌭𑌤𑍍𑌵𑌮𑌰𑍍𑌧𑌵𑌪𑍁𑌷𑌾 𑌭𑌾𑌰𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌮𑌾𑌰𑍍𑌯𑌾𑌪𑌤𑍇
𑌘𑍋𑌣𑌿𑌤𑍍𑌵𑌂 𑌸𑌖𑌿𑌤𑌾 𑌮𑍃𑌦𑌙𑍍𑌗𑌵𑌹𑌤𑌾 𑌚𑍇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 𑌰𑍂𑌪𑌂 𑌦
𑌧𑍌 ।
𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑌾𑌦𑍇 𑌨𑌯𑌨𑌾𑌰𑍍𑌪𑌣𑌞𑍍𑌚 𑌕𑍃𑌤𑌵𑌾𑌨𑍍 𑌤𑍍𑌵𑌦𑍍𑌦𑍇𑌹𑌭𑌾𑌗𑍋 𑌹𑌰𑌿𑌃
𑌪𑍂𑌜𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑍂𑌜𑍍𑌯𑌤𑌰𑌃 𑌸 𑌏𑌵 𑌹𑌿 𑌨 𑌚𑍇𑌤𑍍 𑌕𑍋 𑌵𑌾 𑌤𑌦𑌨𑍍𑌯𑍋𑌽𑌧𑌿
𑌕𑌃 ॥ (அஉ)

(அ-கை) பரமேஸ்வரனது அனுக்கிரகம் பெற்றே, விஷ்ணு யாவராலும் பூசிக்கத்தக்கவனானன் எனக் காரணங் கூறுகிறார்.

82 திருமா லுன்கை யம்பாகிச் சிறந்த விடையா யேனமதா
யிருதாட் கண்ணு லர்ச்சித்து மெழிலார் தேகத் தொருகூ [றாய்த்
தருணி யுருவாய் நேசித்துத் தரித்தான் பேற்றைத் தேவர் [தொழ
கருமா லுறுநா ணைதறிந்தே கபர்த்தீ நினதடி யடைந்தே [னே

(தா-ம்) ஏ, கற்றைவார்சடையனே! மகாவிஷ்ணுவானவர், முன்னுன்று திரிபுர சம்மாரகாலத்தில், அம்பாகவும், இடபமாகவும் நின்று உதவியதுடன், யுவதிப்பருவமுடைய மோகினியாயுருத் தாங்கித் தமக்குதவியிருந்தும்; ஒருகாலத்தவர் வராகவடிவந்தாங்கித், தம் திருப்பாதத்தைக் காண்பான் வேண்டிப் பாதலம் வரைக் கீண்டிப் பார்த்தும், அறியாராய்க் கலங்கிப், பின் தமது பாதார்ச்சனையில், தனது செந்தாமரையொத்த கண்ணைப் பறித்து யர்ச்சித்தபின்னரே, தமது திருவுளமிரங்கி அவர் விரும்பியபடி, அவரே தமக்கு தேகத்தொரு கூறாய் பார்வதியம்சமா யமையவும் வைகுண்டாதியுயர் பதவிகளையடையவும், இரட்சிப்புத் தொழிலை மேற்கொள்ளவும், இன்னோரன்ன அனேக மேன்மைகளையும் அடையவருள் புரிந்த விஷயத்தை அடியேனறிந்தே, ஓயாப் பிறப்பிறப்புக்களுக்காளாகி யுழலும் துயர் நீங்கி வீடேற, திசையெட்டும் தனது சடையை வீசி, திருச்சிதாகாசத்தின் கண்ணே நின்று, சர்வ சராசரங்களையும், ஆட்டாதாட்டுவிப்பவன், யானே யெனக் காட்டுவிப்பான்போல, ஆநந்ததாண்டவம் புரியும், அழகிய குஞ்சித பாதத்திற்குத் தஞ்சம் புகுந்துள்ளேனாதலின், திருவுளமிரங்கி யருள்புரிதல்வேண்டும் (எ-ம்)

𑌜𑌨𑌨𑌮𑍃𑌤𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌸𑍇𑌵𑌯𑌾 𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌂
𑌨 𑌭𑌵𑌤𑌿 𑌸𑍁𑌖𑌲𑍇𑌶𑌃 𑌸𑌂𑌶𑌯𑍋 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌤𑌤𑍍𑌰 ।
𑌅𑌜𑌨𑌿𑌮𑌮𑍃𑌤𑌰𑍂𑌪𑌂 𑌸𑌾𑌂𑌬𑌮𑍀𑌶𑌂 𑌭𑌜𑌨𑍍𑌤𑍇
𑌯 𑌇𑌹 𑌪𑌰𑌮𑌸𑍌𑌖𑍍𑌯𑌂 𑌤𑍇 𑌹𑌿 𑌧𑌨𑍍𑌯𑌾 𑌲𑌭𑌨𑍍𑌤𑍇 ॥ (௮௩)

(ஆ-கை) பரசிவனுக்கு வேறாயுள்ள இதர தேவர்களைப் பூசிப்பதால் பேரின்பமுண்டாகாதென விளக்குகிறார்,

83 உற்பவமரண முறுத்தேவ ருபாசனைப்பய னற்பமதால்
சிற்சுக வடிவாய்த் திகழுமையாள் சிந்தை மகிழும் பதி [யாகி
நிற்பவ னீயென வுற்றுணர்ந்தே நின்பத சேவை புரியுமவர்
தற்பர மறிந்த தன்னியராய்த் தரணியில் வாழ்வுற் றிலங்கு [வரே

(த-ம்) ஏ, சதுர்த்தப்பொருளே! தேவர் போற்றுந் திருமாலாதி திரிமூர்த்திகளும், பிறந்திறக்கும் பெற்றிமையால் அவர்களது உபாசனைப் பயன்களும் ஒரு காலத்தழிவனவாகும், ஆதலின் அற்பமாம், நீயொருவனே முத்தொழிற் கர்த்தர்க்கும் மூலமாய் (சதுர்த்தப்பொருளாய்,) தனித்து நின்றியக்கும் தன்மையுடையனாயும், சர்வ சீவதயாபரியாய் விளங்கும் அருட்சத்தியாகிய தேவிக்குகந்தபதியாகவும், விளங்குபவனாவன் என்பதை, எவன் தத்துவ விசாரஞ் செய்து சந்தேகமறத் தெளிந்து, உனது திருப் பாதங்களிற்கே வக்திபுரிகின்றானோ, அத்தகையனே, காலக்கிரமத்தில் அகமமதை யற்ற நிலையில், அவனே தானாய், தானே அவனாய் நிற்கும் உண்மை நிலையுணர்ந்த பரிசுத்த ஞானவானாய், இவ்வுலகிலேயே புனிதவாழ்வைப் பெற்றுத் திகழ்பவனாவன் என்பது தீர்ந்த முடிபாதலின், அந்த நிலையை யடைந்துய்ய அருள்புரிவாய் (எ-ம்,)

புிவதவ வரிஅய-ா ஸஹியா,தாய மளய-ா
ஹவ உஉம-ணய-பி-ாம் பு-ஹிகந்ராம் வ்ருராஷெறு ।
ஸகுஹ-வநபெஸொ ஸத்ரீச நடிவிஸா
ஸஜயஹரஜயமெஹெ ஸவ-ாஸம்வஸக்வழ ॥. (அச)

(அ-கை) என் மனமாகிய வீட்டில் என் புந்தியாம் மங்கையுடன் பொருந்தியிருக்க வேண்டுமெனக் கோருகின்றனர்.

84 சகலவு லோகப் பந்துவதாய்ச் சத்தாய்ச் சித்தாய்த் தயாக [ரனாய்ச்
சுகவம் பிகையா ளுடன்கூடித் துலங்கு முமக்கே தொண் [டுசெய
வகமென் புந்திக் கன்னியளை யளித்தே னேற்றே வென்ம [னமாம்
புகலுட் புகுந்தே யெப்பொழுதும் புனித வாழ்வைப் புரி [குவீரே

(தா-ம்) ஏ, முழுமுதற்பொருளே! நீரொருவரே, வேதாதி விழுமிய நூற்களில் கூறும், சச்சிதாநந்த லட்சணத்திற்கு இலக்காகப் பொருந்தி, சர்வான்மகோடிகளின் ஆத்ம பந்துவாயிலகி, அவரவர் விரும்பிய பயனையளிக்கும் கருணாமூர்த்தியாக விளங்கி, ஆனந்த வடிவ உமாதேவிக்கு அரியதலைவனாகவும் நிற்கின்றீராதலின், அடியேனுமக்கு பணிவிடை செய்தீடேறக் கருதுவதால், தாம் கயை செய்து எனது புத்தியாகிய கன்னிகையைச் சந்தோஷத்துடன் விரைந்தேற்று, எனது மனதாகிய விசித்திர மாளிகையில், எக்காலும் பரிசுத்தமான வாழ்க்கையை நடாத்துவீராக, இந்த உதவி மட்டும் புரிவீரானால், யானும் நீரும் இன்புறல் திண்ணமாம் (எ-ம்)

𑌜𑌲𑌧𑌿𑌮𑌥𑌨𑌦𑌕𑍍𑌷𑍋 𑌨𑍈𑌵 𑌪𑌾𑌤𑌾𑌲𑌭𑍇𑌦𑍀
𑌨 𑌚 𑌵𑌨𑌮𑍃𑌗𑌯𑌾𑌯𑌾𑌂 𑌨𑍈𑌵 𑌲𑍁𑌬𑍍𑌧𑌃 𑌪𑍍𑌰𑌵𑍀𑌣𑌃 ।
𑌅𑌶𑌨𑌕𑍁𑌸𑍁𑌮𑌭𑍂𑌷𑌾𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑍁𑌖𑍍𑌯𑌾𑌂 𑌸𑌪𑌰𑍍𑌯𑌾𑌂
𑌕𑌥𑌯 𑌕𑌥𑌮𑌹𑌂 𑌤𑍇 𑌕𑌲𑍍𑌪𑌯𑌾𑌨𑍀𑌨𑍍𑌦𑍁𑌮𑍌𑌲𑍇 ॥ (அரு)

(அ-கை) உமக்குவேண்டிய உபசாரங்களைச் செய்வதற்கு, யான் அசக்தனாயிருக்கிறேன், ஆதலின் சிவமே என் மானத பூசையை ஏற்று கொள்வாயாக, என்று கூறுகிறார்.

85 உனக்குத் தக்க பூசைசெய வுன்னி னுணவோ டணியா [டை
நினக்கு விடம்பணி யானையுரி நேரு மதற்குக் கடல் கடை [ந்தும்
வனத்தே வேட்டம் புரிந்திட்டும் வலிய பூமிக் கீழிடந்தும்
எனக்குத் தரமோ சமர்த்திலையா லென்மனப் பூசைக் கிர [ங்குவையே

(தா-ம்) ஏ, தீனரட்சகனே! உமக்குவப்பான, பகிர்முகப்பூசையைச் செய்யவாலோசிக்கின், தாம் விரும்பும் அமுது விஷமாதலின், அதையடைய திருப்பாற் கடலைக் கடைதலும், ஆடை யானையுரியாதலின் அதைப்பெறக் காட்டிற் சென்று வேட்டையாடியும், ஆபரணம், அரவாதலின், அதைப்பற்ற பூமியைப் பேதித்துப் பாதலம் புகவும், வேண்டுமாகையால், அத்தகைய பெருங்காரியங்களைச்செய்யும் அபார சாமர்த்தியமடியேனுக்கில்லை; ஆகவே என்னாலியன்ற அகமுகப்பூசையைச் செய்ய ஆசைப்படுகிறேன், எனவே கிருபாநிதியாகிய தாம் திருவுள முவந்து அதையேற்று திருவுள முவந்து எளியேனாகிய என்னைக்காத்து, தீனரட்சகனெனும் தமது சாஸ்திரப் பிரசித்தமான திருநாமத்தை ஸ்திரப்படுத்திக்கொள்வாயாக. (எ-ம்.)

ஸம்ஜாஸ்ஸந்து ஸர்வே மம ஹி பரமதஃ ஸம்ஜாக்யம் ஸுதஞ்ஜெ
வக்ஷ்யத்வம் நத்வாங்க்ரிஸம்வித் ப்ரோக்தம்ஸயாஸ்ஸ்து ந்ஹி ।
ஜாநேஸஸுக்ஸம்ஸ்ரீவஷ்வஸ்ஸா ஜாநேநநெதஹம்வீஹொ
நஜ்ஞா தம்ஹி விதர்ஸஹெநஹரிணா தஸ்ய ந தஸ்ஸ்ஸ்விண்ா

(அ-கை) உமது பூசைக்குரிய பொருள்கள் யாவும் என்னிடத்தி ருப்பினும், பூசித்தற்குரிய நினது அடிமுடிகள் அறியப்படாமை யின், பூசித்தற்கு ஆகாதெனினும், அறியும் நெறியை யறிவே னென்கிறார்.

86 பூசைக் குரிய பொருள்க ளெல்லாம் போந்துஞ் செய்தற்
[கறியேனென்
பூசைக் குரிய வடிமுடிக ளறிந்தா லன்றோ வர்ச்சிக்க
ஈச பாவத் தரியர்க ளேன வனமாய்க் கண்டிலரால்
நீச னென்செய் வேனெனினு நிறைபொரு ணீயென வறி
[ந்தேனே

(தா-ம்) ஏ, மகாதேவனே ! தமது பூசைக்குரிய வஸ்துக்கள் எல்லாம் அடியேனடைந்திருக்கினும், அந்தப் பூசையைப் புரிய முடியாதவனாயிருக்கிறேன், ஏனெனில் ? எனது ஆர்வத்திற்கேற்ற உனதுண்மைத்திருவடிகளையும், திருமுடியையும் நேரிலடைந்தா லன்றோ, என் மனோரதப்படி பூசை செய்யவியலும், அவைகளை முன்னர் அடைய முயன்ற கடவுட்டன்மை வாய்ந்த அயனுமரியும், அன்னமும் வராகமுமாக வடிவெடுத்து அநந்தகாலம் தேடியுமறிந் தாரில்லை, அற்பனாகிய என்னாலாகுமோ ? யெனினும், ஆகும் வழி யொன்றுண்டென்பதை அருமாமறைகள் முரசறைவதிலிருந்து அறிகிறேன், அந்நெறியாதெனில்? தான் தனதென்பவையற்ற அன் பர்களின் அறிவர்கார நிலையில், அறிவிற்கறிவாக விளங்கி நிற்கும்

நீவிரே யாவுமா, யெங்குமா, யெப்போதும் எதிலும் நீக்கமற நிறைபொருளாய் நிலைத்து நிற்பவரென்பதுணர்ந்து நிற்றலேயாம், எனவே தமது யதார்த்தமான அடிமுடிகளையறிந்தர்ச்சிக்கு மாற்றலை எளியேனுடையக் கிருபை புரியவேண்டும் (எ-ம்)

ஸூமநஜ்ஞானம் ஹணீகுராவொ வஸநஜுஉ-ஒஅவா ஹ ந உ உஹொகுஃ।
உஉஒாஹூவீ கிஂகிஉஹூிஸஂஹொ தவவாஒாஂஙவ-ஜஹக்ஷிஉெவ ஒெ॥ஹி (அஸ)

(அ-கை) சிவமே உன்னைத் துதித்துப் பெறுதற்கு யாதிருக்கின்றது? அது உனது பக்தியன்றி வேறில்லை, எனக்கூறுகிறார்.

87 ஈசனினதுண் கடுவிடமா மேறு மேறும் கிழவிடபம்
பூசலிதுஞ்சாம் பற்பூச்சுப் பூணு மரவா பரணமதாம்
தூசுங் கரியி னுரியென்றால் தொண்டர்க் கெதுநீ யருளுவது
வீசங் கயிலை மலைபுரியும் மலரடி பத்தி விரும்பினனே

(தா-ம்) ஏ, கௌரிநாதனே! தமது உண்வோ, கொடிய விஷம்; ஆரோகணிக்கும் வாகனமோ, கிழவெருது; பூசிக்கொள்ளு பூச்சோ, சாம்பற் பூச்சு; புனையும் ஆபரணமோ, விஷப்பாம்பு; அணியுமாடையோ, மதயானையினுரி, இந்த வகையில் தங்கள் நிலையிருப்பதானால், அடியார்களாயுள்ளவர்கள், உமதிடத்தில் எதை விரும்பி எதிர்பார்ப்பது? நீயுமவர்கட்கு யெதைத்தந்து திருப்தி செய்விப்பது? ஆயினும் பெறுதற்கரிய பொருளொன்று உம்மிடத்திலுள்ளது, அதுயாதெனில்? திருக்கைலைங்கிரியின்கண் சதா சஞ்சரிக்கும் அழகிய தாமரை மலர்போன்ற திருவடியின்கண் மாறாத பக்திப்புரிய புக்தர்க்கருளுந் தன்மை ஒன்றேயாகும், எனவே எனக்குன் மலரடி பக்தி யருளுவீராக (எ-ம்)

நதிபி4ர் நுதிபி4ஸ்த்வமீச பூஜா விதி4பி4ர் த்4யானஸமாதி4பி4ர் ந துஷ்ட: ।
த4நுஷா முஸலேந சாஶ்மபி4ர்வா வத3 தே ப்ரீதிகரம் ததா2 கரோமி ॥ (அகூ)

(அ-கை) சிவனே நீ வெளிச் செயல்களால் பிரீதியடைவதில்லை உள்ளக் கிடக்கையையே உவக்கின்றீர் யென்றறிகின்றேன் எனக் கூறுகிறார்.

89 வந்தனை பூசை துதியுடனே வாகார் தியான மதுசெய் [தும்
சிந்தை யுவப்புக் கொள்ளாதே சிறந்த வில்கல் லுலக்கை [கொடு
முந்தி யடித்த வடிக்கெல்லா முக்கிய பிரீதிக் கொண்ட [னையா
லெந்தாய் நினக்கெ னுளக்கருத்தே யேற்ற தன்றோ வியம் [புவையே

(தா-ம்) ஏ, கயிலாயபதியே ! உனக்கு எனது, வந்தனம், பூசை துதி, தியானம் முதலியவைகளை முறையே செய்தும், நீர் திருவுளமிரங்கிப் பிரத்தியட்சமாகித் தரிசனம் தாராததென்னோ ? முன் உலக்கை, கல், வில் முதலியவைகளால் ஓங்கியடித்த ஓர் பக்தை, சாக்கிய நாயனார் அர்ச்சுனன், முதலிய வன்பர்கட்குச் சந்நிதானமாய்த் தரிசனந் தந்ததேன் ? இதையூன்றி நோக்குமிடத்து நீ பக்தர்களிடத்தில் விரும்புவது அவர்களின் வெளிச்செயல்களையல்ல ; மற்றோ அந்தந்த செயலைச் செய்விப்பதாகிய அவரவர்களின் உள்ளக்கிடக்கையையே யாமென்பது நன்கு விளங்குகிறது, ஆகவே, எம்பெருமானே ! உனக்கு என்னுடைய பகிர்முகச் செயலாகிய வந்தனை வழிபாடுகள் ஏன் ? அகமுகச் செயலாகிய எண்

யஃராகஜ தாஂஹொ ஙியி ஸெத்ஂபயகஃ காரஹொயஃ கஜந
வவ-ுதாயீவஃ]
ஹவா ஙிதெஜஂவித வஜஉஸஂஹவஃ தஹாஶிவாஅ-ு ஹவஹாவஙு
கூஉஃ ‖ (அஅ)

(அ-கை). தமது சீர்பாத பக்தி யொன்றிருக்குமாகின், கீழே கூறப் படுபவர்களின் திறமையெனக் குண்டாகி உன்து அர்ச்சனம், தோத்திரம், தியானம் செய்தற்கருகனுவேன் எனக்கூறுகிறார்.

88 சேதுக் கட்டிய சீராமன் செருக்கற விந்தக் கிரியடக்கு
மேதகு கும்பன் அதிசயித்த வேதற் கொப்ப வாயிடினுன்
பாதப் பூசைத் தியானதுதி பண்பா யுஞற்றுந் திறனுறு
[வேன்.
சீதக் கங்கைச் சடையோனே திருவடி பக்தி யருளுவை
[மே.

(தா-ப்) ஏ, கங்காதரனே ! முன் இராவண வதத்திற்காகச், சேதுவி லணைகட்டிய சீராமச்சந்திரனுயின், உன்னைப் பூசித்தற்கும், பர்வ தங்கட்குத் தலைமையான விந்த மலையை, உள்ளங்கையால் பாதலத் தழுத்தி யதன் செருக்கடக்கிய குறுமுனிவனுயின், உன்னைத் தோத்தரித்தற்கும், நான்மறை விரித்துலகிற்குபகரித்தப் பிரமனு யின், தம்மைத்தியானித்தற்குமுரிய வல்லவனுவேன் ; அவ்வித சாமர்த்தியம் யாதுமின்றிய யான் எவ்வித மவைகளை யியற்ற முடியுமெனில் ? அவர்கட்கந்த சாமர்த்தியம் வாய்த்ததும், தமது திருப்பாத பக்தியினுலேயே, ஆனதால், யானும் எனதெளிய சக் திக்கேற்பத் தமது திருவடிக்கன்பு செலுத்துவேன், இந்த அற்ப பக்தியைச் செய்து எல்லா மேன்மையையு மடைய ஏழையேற் கருள் புரிதல் வேண்டும் (எ-ம்.)

துள்ளக் கருத்தொன்றே போதுமாகவே அடியேன்து கருத்தை யறிந்தாட்கொள்ளுவதுன் கடமையாம் (எ-ம்)

வஅவஸாஅரிதஂவஷாஇ ஸஂஹொ ஈஹஉஂஜெஷூாமஹிஸாஷஂதெ வூஷாஃ॥
உநஷாகூதி ீஸூஷாஷ ஸெஸெவிஷஷாஜெலுஷ ஷஉாஸிஷஂ நஉாஜி॥ ௯0

(ஆ-கை) சிவனே உன்னைத் திரிகரணமொத்துப் பக்திசெய்கின்றேன் எனக் கூறுகிறார்.

90 மனதை நிறுத்தி யொருமுகமாய் வைக்குந் திறனென் [பாலின்று
நினது சரிதம் வாக்காலும் நினைவா லுருவச் சொரூபந் [தும்
எனது சிரத்தால் மங்கள்மா மெழிற்செய் மூர்த்த வந்தனை [முந்
தினமும் புரிந்து வருகின்றேன் சிவனே காத்தல் கடனே.

(தா-ம்) ஏ, சிவமே! சாஸ்திரங்களிற் கூறியுள்ளபடி, தமது திவ்ய மூர்த்தங்களில், எனது மனதிற்கிசைந்த வொன்றை யுபாசனை மூர்த்தியாகக்கொண்டு, அலையுமனத்தை அசஞ்சலமாய் அதன் பாற் நிறுத்தியறியும் ஆற்றலும் அனுபவமும் சிறிது மில்லை யெனினும், மனோவாக்குக் காயங்களாகிய திரிகரணங்களாலும் பொருந்துமாறு, நின் சரிதங்களை வாக்காலும், தியானாதிகளை மனதாலும், வழிபாடுகளை சிரமுதலிய உறுப்புக்களாலும், கிரமப்படி புரிந்து வருவதால், தமது உருவ, அருவ, உருவருவ வடிவ மென்னு மூவித வழிபாடுகளு முஞற்றியவனாகின்றேனாதலின், தாம், திருவுளங்கனிந்தடியேனை இந்த நிலையிலிருந்து, மேலிருக்கும்

நிலைக்கு மெளிதிலேற்றி இன்புருவாம் வண்ணம் அருள் புரிந்தாள் வதுன் கடனும் (எ-ம்)

ஶுத்தாவித்யா ஹ்ருத்தா நிமுத்தாவீ வித்யா ஹ்ருத்யா ஹ்ருத்
தா ஸுவக்ஷு ஸுதாக்ஷ।
ஸெவைநித்யம்ப்ரகாஶக்ஷுத்தா ஜ்ஞானம் ஸாவெஶக்தே ஸாமாஜ்ஞம்
ராஜஶ்ளெ ॥ (௯௧)

(அ-கை) சிவப்பிரசாத வைபவம் கூறப்படுகின்றது.

91 ஈசா வுன்ற னருளாலே யென்ற னுறி யகவிருள் போய்த்
தேசா ருண்மை ஞானமது சேர்ந்து மனத்தைத் தெளிவா
[க்கிப்
பேசா வனுபூ திப்பிறந்தே பெருஞ்சம் பத்தா மோக்கமுற்
[றேன்
கூசா துரைத்தே னீதுந்தன் குஞ்சித பாதப் பக்திக் கொ
[டே

(தா-ம்) ஏ, சிற்சபேசா! தேவரீரது திருவுளக் கிருபையால், எனது அஞ்ஞானமானது அறவே நீங்கி, அடியேன் உண்மை ஞானமாகிய தத்துவ ஞானத்தை யடைந்து, எனது மனோவிகாரங் களாகிய ஐயம், திரிபுகளென்னும் தடைகள் நீங்கிப் பேசாவநு பூதியாகிய அறிவாகார சுவாநுபவத்தை, நிருவிகற்பமாகிய சிவ ராஜயோக சமாதியினால் பெற்று, என் பிறவிப் பெரும்பயனாகிய பேரின்பாகாரமாகும் பேற்றை (மோக்ஷ சாம்ராச்சியத்தை) என் என் சீவதசையிலேயே அடைந்துள்ளேனென்பதைச் சிறிதேனுஞ் அச்சமின்றி, சொல்லாமற் சொல்வதாகிய சீவன் முக்தவிலட்சணச் செயல் மூலம் தமது திருச்சமுகம் தெரிவித்து கொள்ளுகிறேன், இத்தகைய மேன்மையை யானடைவதற்கு மூலகாரணமாயிருந்

த்து, தமது வீரகண்டையணிந்த அழகிய குஞ்சிதபாதப் 'பக்தியே யாம், என்பதாம்,

> உ-ஞ்ரீகரதாந்தி உ-ரீதாந்தி உ-ரகூஷராணி
> உளஹ-ராமஹ்ரு உ-ஃவ உ-ரஹம்கரதி உ-வ ஆரம்வி ।
> வாரம் கூதீயஅரிதம் நிதாராம்விம்பஹம்
> மளரீபரா விஹ வஉ-ஙர வஹ்ருடிபாசெக்ஷ்: ॥ (கூஉ)

(அ-கை) சிவபுராண சிரவணத்தின் மேன்மையை விளக்குகிறார்.

92 தேவநின் சரிதச் சிரவணமே தினமும் புரிந்துன் றிருவ [ருளாற்
பாவவென் பிறவித் துயரான பற்பல தோடத் தூர்ப்பிட் [சந்
தாவுதூர்ப் பாக்கிய தாரகந்தை சாடுதூர் வாக்கா கியயாவுஞ்
சேவுயர்த் துவஜ! துகளான சிவமுற யென்னே யாண்ட [ருளே

(தா-ம்) வ, இடபக் கொடியோனே! தமது திருவருட் கிருபை யால், உமது, அநந்தமான மங்களகர குணாதிசயங்களை விளக்கும் சிவ புராண படனங்களைத் தவராது தினமும் புரிந்து வருகின் றேனாதலின், எனது தீவினைக்கீடாயமைந்துள்ள, எனது பிறவியும், அதனால் விளைந்துள்ள தாரகந்தை முதலிய அநேக கெட்ட குணங் களும் என்னிடத்திருந்து அறவே விலகிப்போயின. ஆகவே, இனி நீர் என்னை மங்களகரமான பேரின்ப நிலையையடையச்செய் யத்தடையிராதாகையால் இப்பொழுதே யாட்கொண்டருள் புரி வாயாக (எ-ம்)

> ஶோகஉ-யஉளஉ-ள கொஉஉ-வநகஸெஉஹஉஹவி।
> ஷாவிநிமிதிஜா நாயெ உஉகஹரஉயம் நிஞஷம் ஷதாழ ॥

(அ-கை) தன் மனமானது எப்போதும் சிவசொரூபத்திலேயே லயித்திருக்க வேண்டுகிறார்.

93. மதிபுனை கற்றைச் சடையதுவும் மங்கை பார்ப்பதி மனோ
[காமும்
சதிருறுங் க்ரிய கண்டமதும சகலாதாரச் சுடர் வடிவும்
பதிந்து நிற்கும் பரசிவநின் பாதாம் புயத்தே யென்மன
[மும்
வதிந்தெப் போதும் மகிழ்வுறவே வகுப்பா யடியேன் விரு
[ப்பமிதே

(தா-ம்) ஏ, சந்திரமௌளீ! உலகப் பொருள்களனைத்தையும் ஒருங்கே யீன்ற மாதாவாகிய ஸ்ரீ உமாதேவியாரின் மனதிற்கு எப்போதும் மாறாத பிரியமாயிருப்பவனே! தாம் தம்மடியவர்களைக் காப்பதினடையாளமாக விளங்கும் தமது நீலகண்டத்தையும், அகிலவுலக சித்ஜடப் பொருள்களிடத்து மனுஸூதமாயுறைந்து அவைகளைப் பிரகாசிக்கச் செய்யும் தாயகமான சோதி சொரூபமாகவும், விளங்குமுனது, திருவடிகளிடத்தே, என் மனமானது அவ்வடிவமாகவே பொருந்தி நின்று சந்தோஷித்திருக்கக் கிருபை செய்தருளுவாய், எனதுண்மையான ஆர்வமீதாகும்(எ-ம்.)

ஸாரஸ நாதெ நயலீந தாவெவ கரள ஸ ஸவகூரத்
கூரத்யூஃ ॥
யா யெ யள யொ ஹமஹம்வஉதீக்ஷதெ ஸஉாஅஉதுஃஸூரதி ।

(அ-கை) சிவனிடத்திலீடுபடும் உடலுறுப்பனைத்தும் மேன்மையுறுமெனக் கூறுகிறார்.

வேறு.

94 சிவன்றிரு நாமஞ் செப்பு மதோரா திகழவன் வடிவங் கா
[ண்ட லேகண்
அவன்றிருப் பூசனை செய்வ தேகர மன்பால் தியானிப்
[பவனே தன்னியன்
அவனைவிட் டயலி லிச்செயல் புரியு மவனது திரிகர ணங்
[களு மிகவு
மவம தாகையா லையனின் பணிக்கே யன்பனு ளிருந்திட
[வருளே

(தா-ம்) ஏ, சிவபெருமானே! எவனுனது தாரக மகாமனுவாய் விளங்கும், பஞ்சாக்கர மந்திரத்தைத் தவறாது தினமுஞ் செபித்து வருகின்றானோ, அவன் அந்த நாளைத், தான் பெற்றதின் பயனையும், உனது திருவடிகளை யர்ச்சிப்பதால், கைகளை பெற்ற பயனையும், உனது மூர்த்தத்தை அன்பாய் தியானிப்பதால், மனத்தைப் பெற்ற பயனையும், அடைந்தவனாகிப் பரிசுத்தனாகின்றான், இதை யறியாது, எவன் முழுமுதற் பொருளாகிய உன்னை விட்டுப் பேத யெண்ணத்தோடு இதர தெய்வங்களிடத்தே, யிச்செயல்களைப் புரிகின்றானோ, அவன் பெற்றுள்ள உடலுறுப்புக்கள் அனைத்தும் பயன் அற்றவை யாகின்றன, ஆதலின் அடியேனுக்கு உமது தொண்டாற்றி உய்யும் வகையருள்வாய் (எ-ம்.)

ஸதிரூஜ ஷ--ளை உஉஅப ணாவதிகரிநம தெ ஸிநாஹ...!
ஐதிவிதிகிக்ஷாம்ஸ ந்த்ருஜஸிவகயஉாவீஹ்ரௌ தயாவூவெஸ:॥

(அ-கை) கல்போன்ற வென் கடின மனத்திலும் நீயிருக்கத் தகு மெனக் காரணங் காட்டுகின்றார்.

வேறு.

95 பஞ்சின் மெலிய திருத்தாளா பக்தன் கடின மனத்திலுற
அஞ்சிக் கொல்லோ தானுன்று நகல்வ தென்னின் கயிலைக் [கண்
ணெஞ்சுங் கற்க ளிடைவாச மேவி யுறைதல் தகுதியதோ
தஞ்சம் புகுமித் தமியனுளம் தற்பர மேவித் திகழுவையே;

(தா-ம்) ஏ, தேவாதி தேவனே! பஞ்சைவிட மெல்லிய தன்மை வாய்ந்த தேவரீரது திருப்பாதங்களைப், பக்தனாகிய எனது கடினமான, மனத்திற் பொருந்தச் செய்யப் பயந்து போலும், அதில் எழுந்தருளச் செய்யாதது? அங்கனமாயின்? அதிகமான சிறு பெறு கற்களிடையே தாங்கள் கயிலை மலையில் எப்படி வாசம் செய்கின்றீர்? ஆகவே தாம் இனியிந்தக்காரணங் காட்டுவது சரியாகாது, தீவிர அடைக்கலம் புகுந்தவரைக் காப்பதே அறமாதலினாலும், இனியேனும் தாமதமின்றி எனதிருதயத்தே இனிதெழுந் தருளக் கடாட்சிப்பீராக (எ-ம்.)

யெயஜாஜுமெ,ந நிஹுதம் ஈஹவாஉாகூஜ ஷுஹக்ஷுஸ்ரவெ
ரூயா।
ஹாஹாஜுாணாஹுாநெ ஹூஉயஉெஹம் வயாந ஜீஉதூ
ஜெநூ:॥ (௬௬)

(அ-கை) மதங்கொண்டலையும் தன் மனத்தைச் சிவபெருமான் திருவடியில் கட்டுப்படுத்தவேண்டுகிறார்.

96 மதங்கொண் டலேயென் மனமான மதகரி யினையருளங்கு
[சத்தால்
இதமுற வடக்கி வயப்படுத்தி யிணையடி தியானச் சங்கிலி
[யால்
பதமெனுங் கட்டுத் தறியினிடைப் படுத்திப் பிரம ஞான
[மெனுஞ்
சதமுறு மியந்திரத் தசைவின்றித் தம்பித் திருக்கத் தயை
[புரியே.

(தா-ம்) ஏ, ஞானபானுவே! உலக விஷய போகங்களில் வீழ்ந்தலைந்து திரியும் எனது மனமாகிய கொழுப்பேறிய யானையைத் தமது திருவருளாகிய அங்குச மென்னும் ஆயுதத்தைக் கொண்டு திருத்திப் பக்குவமாக உமதிஷ்டம்போல் வயப்படுத்தி, தமது திருவடித் தியானமாகிற சங்கிலியிற் பூட்டி, மும்மதங் கொண்டோடாமல், முப்பதமுடைய தத்துவமசி யென்னு மகாவாக்கியமாகிய ஸ்திரமான கம்பத்திடையே பிணித்துப் பிரமஞானமாகிய பஞ்சாக்கர யந்திரத்தில் சாஸ்வதமாயும், நிச்சலமாயும் நிலைத்து நின்றிடேறத் தயை செய்தருள்வாயாக (எ-ம்.)

ஸ்ரீஅரதூஹிதஃஸ்ரீமஜ்ஜவரதூர்ஂ உசுவாநேஷ*உநஃகஸீமஸீயாரு
ஂ வஸிமுரஹூநயெந ஹக்ஷ்ரஜ்வா வரஉஷ்லாணஂவசுஂ [illegible]
உயிழு ॥ (கள)

---

*குறிப்பு :—உநஃகடிஂகஸீயஃ என்றும் பாடம், அதன்படி கொண்டிமரிடென்பது பொருளாகின்றது.

(அ-கை) தனது மூர்க்கத்தன்மை வாய்ந்த மனத்தை பரசிவன் திருவடியில் கட்டுப்படுத்தவேண்டுகின்றார்.

97 மதமே மிகுத்தென் மனமாடு மாலா லெங்குமேடணையால்
நிதமே திரியு மதைப்பற்றி நீள்வட மதனாற் பந்தித்துச்
சதமா யிலகு மோட்சத்துச் சலனம தின்றி யபேதமதாம்
விதமாய் நிற்கும் வகையருளாய் விளங்கு மால்விடை மேய
[வனே.

(தா-ம்) விடையேறும் வித்தகனே! நீர், மூர்க்கத்தனம் மிகுந்த வெள்ளேற்றை அடக்கி வசப்படுத்தி ஏறித் திரியும் சமர்த்தனாதலின், எனது மனமாகிய கொண்டிமாடானது, மதமேறிய மயக்கத்தால், செய்வது தவிர்வது இன்னதென்றறியாது, மூவாசையாகிய மண், பெண், பொன்னாதிகளிற் சிக்கித் தினமுந் திரிந்தலைவதால், கிருபாநிதியாகியதாம், அதைத் தமது திருவடிகளிடத்தே பிறழாது அன்பு செய்தலாகிய பக்தி என்னும் நீண்ட வலிய கயிற்றினிடையே கட்டித் திருவருளாகிய ஸ்தாணுவென்னும் தூணில் அசைவறப்பிணித்து அவிநாசியாகும் தம்மோடத்துவிதமாம் முத்தி நிலையில், எப்போதும் நிலைத்திருக்கச் செய்யும் நெறியை, எனக்கருள்வாயாக (எ-ம்.)

𑌸𑌰𑍍𑌵𑌾𑌲𑌙𑍍𑌕𑌾𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌂 𑌸𑌰𑌲𑌪𑌦𑌯𑍁𑌤𑌾𑌂 𑌸𑌾𑌧𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌂
𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑌾𑌂
𑌸𑌦𑍍𑌭𑌿𑌃 𑌸𑌂𑌸𑍍𑌤𑍂𑌯𑌮𑌾𑌨𑌾𑌂 𑌸𑌰𑌸𑌗𑍁𑌣𑌯𑍁𑌤𑌾𑌂 𑌲𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌂 𑌲
𑌕𑍍𑌷𑌣𑌾𑌢𑍍𑌯𑌾𑌂 ।
𑌉𑌦𑍍𑌯𑌦𑍍𑌭𑍂𑌷𑌾𑌵𑌿𑌶𑍇𑌷𑌾 𑌮𑍁𑌪𑌗𑌤𑌵𑌿𑌨𑌯𑌾𑌂 𑌦𑍍𑌯𑍋𑌤𑌮𑌾𑌨𑌾𑌰𑍍𑌥𑌰𑍇
𑌖𑌾𑌂
𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑍀𑌂 𑌦𑍇𑌵 𑌗𑍌𑌰𑍀𑌪𑍍𑌰𑌿𑌯 𑌮𑌮 𑌕𑌵𑌿𑌤𑌾 𑌕𑌨𑍍𑌯𑌕𑌾𑌂 𑌤𑍍𑌵𑌂 𑌗𑍃
𑌹𑌾𑌣 ॥ (௯௮)

(அ-கை) தன் கவிதை மங்கையைக் கைப்பற்றியங்கீகரிக்குமாறு பிரார்த்திக்கின்றனர்.

98 சகல வணிகள் செறிந்திலகச் சரளப் பதநடை திகழ்ந்தொ[ளிர
நிகரி லிலக்கணம் பலவிளங்க நிமல மனத்தோர் நனியேத்[தீப்
புகல்நவ ரசங்கள் பொலிந்துறவே பொன்செய் பொருட்[சுவை திகழுந்த
னகமார் கவிதைப் பெண்ணதனை யானே யினிதா யேற்ற[ருளே.

(தா-ம்) ஏ, சம்புவே! அடியேனது இதயகமலத்தினின்று வெளிப்பட்ட அருமைக் கவிதையாகிய பெண்மணி யொருத்தி யிருக்கின்றனள், அவளுடைய இலக்ஷணங்களை விண்ணப்பித்துக் கொள்ளுகின்றேன். கவிதையின் பக்ஷம் :—உவமை, உருவகம் முதலிய பல வணிகளோடும், சரளமும் அர்த்த புஷ்டியுமுடைய சொற்களா லாக்கப்பட்ட நடையோடும், சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல் என்னும் சிறப்பு லக்ஷணங்கள் பலவற்றோடும், நிர்மல சித்தத்தையுடைய கவிகள் நன்கு புகழக் கூடிய பல விருத்தப் பாக்களோடும், வீரம், சிருங்காரம், சாந்தம் முதலிய நவரஸ பாவங்களோடும், சிறப்பைத் தரத்தக்க அறம், பொருள், இன்பம் வீடென்னும் நான்கு புருடார்த்த சாதனங்களோடுங்கூடி விளங்கும் இச் சிவாநந்தலஹரி யென்னும் கவிதையைத் தங்கள் திருவடிகளில் அர்ப்பணஞ் செய்கின்றேன் இதை யங்கீகரிப்பீராக.

பெண்பக்ஷம் :-நிறத்தாலும், வடிவத்தாலும் அழகுவாய்ந்த பலவித ஆடையாபரணங்களை யுடையவளும், மென்மையான பாதங்களால் மதயானையை யொத்ததும், அன்னத்தை யொத்ததுமான நடையை

யுடையவளும், ஸாமுத்ரிகா சாஸ்திரப்படி ஸ்திரீகளுக்குரிய ஸர்வ அங்க லக்ஷணங்கள் பொருந்தியவளும், சிறந்த ஒழுக்கமுடைய வளும், அதனால் பெரியோர் புகழ்ச்சிக்குத் தகுந்த உரிமையுடைய வளும், சிருங்காராதி நவரச பாவங்களையும் வெளியிடக் கூடிய சாதுரியமுடையவளும், இன்பந் தரக்கூடிய காம புருஷார்த்த மாகிய பெருஞ்செல்வத்திற்கு நிதிபோன்றவளும், ஸகலவிதமான ஐஸ்வர்யங்களையும் தரக்கூடிய தனரேகையை யுடையவளுமான ஒப்பற்ற பெண்ணை யுமக்கு அன்புடன் தானம் செய்கின் றேன், உவகையோடு அங்கீகரிப்பீராக (எ-ம்.)

(இது இக்காவியத்திற்கும் ஒரு பெண்மணிக்கும் சிலேடை).

ஜஜ்ஜெ யுக்ஷவா வராஹஸிவ காருணூஜஸ்யெ
ம்தள்தி ஶெவ தவவஜஸிரொ ஜஸாஜுஹயிா ।
ஹரிவு ஹிணை தள் ஹிஹஷி அாஜ ஸுஹயுதா
கும் ஸஹொ ஷூாஜி கயய ஊவெஜொஷி வாரு தஃ॥ (கக)

(அ-கை) அரியயனதியர்க்கும் விளங்காத நின்னை அபேத ஞானத் தாலறியலாமென்கின்றார்.

99 அன்னம் பன்றி வடிவுகொடே யடிமுடி தேடி யயன்மா [லோலும்
முன்னம் விண்மண் முழுவதுமே முயன்று மறியா முடிபு [ற்றூர்
அன்ன பேத பாவனைநீத் தனைத்துமெறிபு மறிபொருணீ
யென்னும் நெறிகண் டுனைநாடி யியைந்தே னுந்தன் திருவ [டியே.

(தா-ம்) ஏ, சர்வேச்வரனே! அன்னப்பட்சியாகப் பிரமனும், வராகவடிவாக விஷ்ணுவும் முறையே தமது திருவடியையும் திருமுடியையும் காண மூவுலகத்தும் மிக்க முயன்று தேடியும் அறிந்தாரில்லை; அத்துணைபெருமை தங்கிய தமது அடிமுடிகள் எங்ஙனம் எளியேனால் அடையமுடியுமென வூன்றி ஆராயுங்கால், அவ்வயனும், மாலும் பின்பற்றிய "தான், தனது, இது, அது" வெனும் பேதஞானத்தை யொழித்து, அகமமதைகளற்ற அபேதஞானவாயிலாக "அகிலாண்ட சரா சரங்களிலும் ஊடுருவியிருந்தும், அனுர்ப்பூகமாய் நிறைந்து நின்று அனைத்தையும் அறியும், அறிபொருள் நீ" யென்று அகண்டநோக்கில் நின்றாராய்ந்ததில், அறிவிற்கறிவாய் விளங்கும் தமதடிமுடிகளைக் கண்டறிந்தடைந்தேன். ஸகல பிரபஞ்சங்களும் உம்மிடத்திலே தோன்றுகின்றன வென்னும் திடஞானமே அடியாகும்; யாவும் உம்மிடத்திலேயே ஒடுங்குகின்றனவென்றும் நிச்சய வறிவே முடியாகும். (எ-ம்.)

ஸ்லோகெள்ணாயுஃஷம் ஷுவதி நஃஶஷா ஸெவாவிஸிஷாஃய
ஷுஃதஸ்ரா நாம மணநாஃஷு ஷஹு ஷஃயெகவாஃ ஶ மணஸ்ஂவிஃர்ஃ
ஃஹாஸ்ரா ஶ விஆரண ஷுகாரணெ யாநாதஃஷஸ்லொஃவ
ஐஒதா ஜெரா௦விஃ ஶர தஹொ தஃஷெமு௦ பர௦ஹொ ஹவெஸவகாஃடீ

(அ-கை) "சிவனே பரம்பொருள், அவனே துதிக்கத் தக்கவன்" என உவமானத்துடன் விளக்கி நூலை முடிக்கின்றனர்.

100 தேவாதி முனிவர் துதி செய்யத் தக்கோ ரியாவரென
மேவு விசாரஞ் செயுமளவில் மர்தே வன்நீ யெனமதிப் [பர்
பாவு சாலிக் கதிர் செந்நெல் பான்மை நிகர்வை பிறாத [னிற்
றுவும். பதராம் சத்தியமே சாலும் நின்துதி சங்கா [னே!

(கா-ம்) எ, சிவபூரம்பொருளே! தேவர்களாலும் முனிபுங்கவர்களாலும், பூசிக்கத்தக்க விழுமிய முதல்வன் யாவனென்று, வேதாகமசாத்திர, பிரமாணங்களைக்கொண்டு விசாரித்துப் பார்க்குமிடத்து, நீவிரொருவரே யாவரென்பது, தக்கோர்களனைவராலும் சரிவரவிசாரித்துணர்ந்த முடிபாம். எதுபோலெனில்? அந்தசாஸ்திரங்களில் கூறப்படும் ஏனைய கடவுளரனைவரும், நெற்கதிரிலுள்ள நெற்களைப்போன்று வெளிப்பார்வைக்குத் தோன்றினும், உட்சத்தில்லாதனவா யொழியும் பதர்களுக்குச் சமமாவார்கள், தேவரீரொருவரே அக்கதிரிலுள்ள சத்துடைய செந்நெல்லையொத்து விளங்குபவர்; இஃதுண்மை; ஆதலின் உலகிலுள்ள ஆன்மகோடிகள், தமது திருவடிகளையே தஞ்சமாக வடைந்துத் துதித்த லொன்றே அவரவர் விரும்பிய இம்மைமறுமைப்பயன்களையும் பிறவிப்பெரும் பயனும் வீட்டினையும் அடைதற்குச் சிறந்த மார்க்கமாகும். எனவே, இந்த உண்மையைப் பலரறியப் பிரசித்தப்படுத்தித் தேவரீரது திருவுளங் களிப்பெய்துமாறு இந்நூலையியற்றி இத்துணைத்து துதியைப் பூர்த்திச் செய்துக்கொள்ளுகின்றேன். (எ-ம்.)

மொழி பெயர்ப்பு முற்றிற்று.

சிவம் ! சிவம் !! சிவம் !!!.

நூற்பயன்.

(வேறு)

சிவப்பே ரின்பப் பெருக்காகுஞ்
சிவாநந் தலகரி வடநூலை
நவப்பே ரணியாய்த் தமிழ்த்தாய்க்கு
நாளு முறமொழி பெயர்த்தவிதை
யுவப்போ டுணர்வோர் பவப்பகையை
யுதறிப் பன்னல முடன்பிறவித்
தவப்பே றெனுஞ்சீ வன்முக்தி
சாருவ ருலகிற் சத்தியமே.

வாழ்த்து.

(வேறு.)

வாழி மாமறை வையகம் முச்சுடர்
வாழி பரசிவம் வண்டமிழ் தொண்டர்கள்
வாழி பரபக்தி வளர்சிவ ஞானமும்
வாழியிந் நூலதும் வாழிநீ டூழியே.

நூல் நிறைவு.

வடமொழி பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை.	திருத்தம்
3	9	[illegible]	[illegible]
15	1	[illegible]	[illegible]
20	14	[illegible]	[illegible]
,,	15	[illegible]	[illegible]
22	5	[illegible]	[illegible]
,,	7	[illegible]	[illegible]
,,	22	[illegible]	[illegible]
,,	,,	[illegible]	[illegible]
,,	25	[illegible]	[illegible]
23	18	[illegible]	[illegible]
23	20	[illegible]	[illegible]
,,	21	[illegible]	[illegible]
24	22	[illegible]	[illegible]
,,	16	[illegible]	[illegible]
,,	18	[illegible]	[illegible]
,,	,,	[illegible]	[illegible]
26	11	[illegible]	[illegible]
27	8	[illegible]	[illegible]
,,	9	[illegible]	[illegible]
28	10	[illegible]	[illegible]
29	11	[illegible]	[illegible]
30	4	[illegible]	[illegible]
31	1	[illegible]	[illegible]
32	22	[illegible]	[illegible]

வடமொழி பிழைதிருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
34	21	[illegible]	[illegible]
34	21	[illegible]	[illegible]
35	17	[illegible]	[illegible]
,,	19	[illegible]	[illegible]
38	14	[illegible]	[illegible]
,,	,,	[illegible]	[illegible]
39	8	[illegible]	[illegible]
43	8	[illegible]	[illegible]
46	2	[illegible]	[illegible]
47	19	[illegible]	[illegible]
51	12	[illegible]	[illegible]
55	12	[illegible]	[illegible]
56	12	[illegible]	[illegible]
57	9	[illegible]	[illegible]
60	21	[illegible]	[illegible]
62	15	[illegible]	[illegible]
65	15	[illegible]	[illegible]
70	23	[illegible]	[illegible]
72	20	[illegible]	[illegible]
73	21	[illegible]	[illegible]
74	23	[illegible]	[illegible]
77	4	[illegible]	[illegible]
79	1	[illegible]	[illegible]
81	3	[illegible]	[illegible]
93	18	[illegible]	[illegible]

தமிழ், பிழைதிருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
2	17	புறச்செய்தான்	புறச்செய்தானவனை
3	12	சடையிறசீத	சடையிற்சீத
,,	15	டெய்துகாக்கும்	பெய்துகாக்கும்
8	20	அ-கை.	(தாத்பரியம்)
9	11	தமமை	தம்மை
11	18	மௌனறை	மௌனரின்
23	4	வெணறேங்கு	வெண்றேங்கு
25	29 சு	அ-கை. விடப்பட்டது	‡ பார்க்கவும்
26	9	நீர	நீர்
31	35 சு	அ-கை. விடப்பட்டது	¶ ஷை
35	5	யீசநீவிற்றிருப்ப	யீசநீவீற்றிருப்ப
41	8	பரமவம்சர்	பரமவம்சர்கள்
42	9	அரும்பாம	அரும்பாம்
81	11	சேதுவிலணை	கடலில்அணை
,,	15	பிரமனையின்	பிரமனைமிஞ்சியவனையின்
84	13	முற்றேள்	முற்றேன்
87	6	அன்பனுனிருந்திட	அன்பனுயானுமிருந்திட

‡ பரசிவனுடைய மூவித வடிவத்தியானங்கூறல்.

¶ இறைவனது குணநிசய மறிந்து பரமாப்தனென மதித்தல்,

செய்யாறுதாலூக்கா, பொதியர்பாளையம்.

சமரச, சன்மார்க்க, சங்கத்தின்

காரியஸ்தர்களால் வெளியான

புத்தக விளம்பரம்.

1. சங்கத்தலைவர் அருட்கவி திரு-ந-சுப்ரமணியஐயரால் இயற்றப்பட்டவை.

	ஸ்ரீவித்யா ஸபர்யா பத்ததி (நாகரலிபி) சாதாபைண்டு	2	0	0
2.	ஸ்ரீவித்யா ஸபர்யா வாஸனை (தமிழுரை)	3	0	0
3,	ஸ்ரீவரிவஸ்யா இரகஸ்யம் (மூலமும் தமிழ்விரிவுரை	1	0	0
4.	ஸ்ரீககாரவிமர்சம் (மூலமும் தமிழுரையும்)	0	12	0
5.	ஸ்ரீகுருதத்வ விமர்சம் (தமிழ்)	0	5	0
6.	மத்யமவ்யாயோகம் (தமிழ்நாடகம்)	0	6	0
7.	ஸ்ரீமனீஷா பஞ்சகம் (தமிழ்மூலமும் விருத்தியுரையும்) இரண்டாம் பதிப்பு	0	8	0
8.	ஸ்ரீலலிதாத்ரிசதீஸ்தோத்திரம் (தமிழ்விரிவுரை	1	0	0
9.	திருத்தணிகைப் பிரபந்தத்திரட்டு	0	4	0
10	ஞானப் பிரகாசம் (ஓருவேதாந்தநாடகம்)	0	10	0
11.	ஸச்சிதானந்த விளக்கம் (தமிழ்)	0	2	0
12.	ஸ்ரீ விதோபாக்யான விமர்சம் (தமிழ்)	0	4	0
13.	சங்கரவிஜய ஸாரசங்கிரகம் (தமிழ்)	0	2	0
14.	ஸ்ரீநடராஜதத்வம் (தமிழ்)	0	8	0
15	ஸ்ரீஸுப்ரஹ்மண்யதத்வம் (தமிழ்)	1	8	0

சங்கச் செயலாளர் (வித்வான்)

II திரு, ப. மாசிலாமணி முதலியாரால் இயற்றப்பட்டவை.

1. திருக்கடம்பநாதபுராணம் (செய்யுள்)
இது திருவாவடுதுறை ஈசானதேசிகரால் இயற்றப்பட்டு ஷை சங்கத்தலைவர் குறிப்புரையுடன்,

2. ஷை யார் சீர்திருத்திப் பதிப்பது 1 0

3. சிவாநந்தலகரி தமிழ்மொழி பெயர்ப்பு; செய்யுளும் உரையும், மூல சுலோகத்துடன் } 0 1.

4. திருத்தில்லை தோத்திர மஞ்சரி 0 2

5 ஸ்ரீமுத்துவிநாயகர் சுதீபம் 0 [illegible]

6. திருத்தணிகைத் தியான மஞ்சரி 0 1 0

7, ஸ்ரீ ஹரி கீர்த்தனம் 0 1 0

ஸ்ரீ அகத்தீசர் தோத்திரப்பாமாலை 0 1 [illegible]

———(o)———

சங்க (லேட்) உபகாரியதரிசி

III திரு க. குப்புசாமி முதலியாரால் இயற்றப்பட்டது

1. விநாயகர் இரட்டை மணிமாலை 0 1 0

(கிடைக்கு மிடங்கள்)

1 ஸ்ரீ குகாநந்த பிரஹ்மவித்யா விமர்சினீ சபை
178-நெ. லாயிட்ஸ்ரோட்.
ராயப்பேட்டை, சென்னை.

II ப. மாசிலாமணி முதலியார்
செயலாளர்
சமரச சன்மார்க்க சங்கம்
புதுப்பாளையம் அஞ்சிபோஸ்டு
(மார்க்கம்) காஞ்சீபுரம்.

குறிப்பு; — வி. பி. சார்ஜ் வேறு.

ஸ்ரீ கிருஷ்ண விலாசம் பிரஸ், காஞ்சீபுரம் 2—41.